

கோயம்புத்தூர் மாவட்டம்

கொங்குநாட்டுக் கல்வெட்டுக்கள்

முனைவர். மா. கணேசன்

திரு. இரா. ஜெகதீசன்

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

நூலக நூல்கள்

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் : கோயம்புத்தூர் மாவட்டம்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் மா. கணேசன், எம்.ஏ.,பிஎச்.டி.
இரா. ஜெகதீசன், எம்.ஏ., எம்.ஏ., எம்ஃபில்., டி.இஏ,டீ.ஜீடி.,

திட்ட இயக்குநர்

முனைவர் இரா. சந்திரசேகரன்,
எம்.ஏ.,எம்.ஏ.,எம்.ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.(சென்),பிஎச்.டி.(கலி)
தமிழியல் துறைத்தலைவர்,
பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் – 641 046.

மகாகவி பாரதியார் நூலகம்
எண். 7, ஆர்.கே. நகர்,
நவாவூர் பிரிவு, மருதமலை சாலை
பாரதியார் பல்கலைக்கழகம் (அஞ்சல்)
கோயம்புத்தூர் – 641 046.

தமிழக வரலாற்றியல் ஆய்வு வரிசை : வெளியீடு : 1

திட்ட இயக்குநர்
முனைவர் இரா. சந்திரசேகரன்
தமிழியல்துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 046

கொங்குநாட்டுக் கல்வெட்டுக்கள் : கோயம்புத்தூர் மாவட்டம்

பதிப்பாசிரியர்கள்
முனைவர் மா. கணேசன்
திரு. இரா. ஜெகதீசன்

பொருள் : தமிழ்க்கல்வெட்டுக்கள் ; மொழி : தமிழ் ;
நூல் அளவு : டெமி 1/8 ; புள்ளி : 11; படிகள் : 1000 ; பக்கங்கள் : 288 ;
கணினி பதிவு : க. முருகேசன், அச்சு : கஸ்தூரி பிரிண்டர்ஸ், கோவை – 641 041 ;
வெளியீடு : முனைவர் மா. கணேசன், 23, வ.உ.சி. குடியிருப்பு, அவினாசி.

முதற்பதிப்பு : டிசம்பர் 2003

விலை ரூ. 150/–

HISTORY OF TAMILS

RESEARCH SERIES No : 1

PROJECT DIRECTOR
Dr. R. CHANDRASEKARAN
PROFESSOR AND HEAD,
DEPARTMENT OF TAMILOLOGY
BHARATHIAR UNIVERSITY
COIMBATORE - 641 046.

INSCRIPTIONS OF KONGUNADU :

COIMBATORE DISCTICT

EDITORS
Dr. M. GANESAN
R. JEGADEESAN

Subject : Tamil Inscriptions ; Language : Tamil ; Size : Demy 1/8
Printing Point : 11 ; No. of Copies : 1000 ; No. of Pages : 288
Computer Printing : K. Murugesan ; Printing : KASTHURI PRINTERS, COIMBATORE.
Publishers : **Dr. M. GANESAN, 23, V.O.C. COLONY, AVINASHI.**

First Edition : December 2003

Price Rs. 150/-

Sales Right : **MAHAKAVI BHARATHIAR NUULAGAM**
No. 7, R.K. NAGAR, NAVAVUR PRIVU,
BHARATHIAR UNIVERSITY (POST), COIMBATORE - 641 046.

நூலாக்கச் செயற்பாட்டில் பங்கேற்றோர்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் மா. கணேசன், எம்.ஏ.,பிஎச்.டி.
இரா. ஜெகதீசன், எம்.ஏ., எம்.ஏ., எம்ஃபில்., டி.இஏ,டீ.ஜீடி.,

நூல் கருத்தாக்கம்

முனைவர் மே.து. இராசுகுமார், எம்.ஏ.,பிஎச்.டி.,
வரலாற்றியல் தமிழறிஞர் : சென்னை.

முனைவர் சுப்புரத்தினம் ஜெகதீசன், எம்.ஏ.,எம்ஃபில்.,பிஎச்.டி.
தமிழ்த்துறை, ஆர்.வி.எஸ். கலைக்கல்லூரி, சூலூர்.

நூல் வடிவாக்கம்

சிவத்திரு ந. சிவசங்கரன், அவினாசி
திருமதி க. புனிதவதி, எம்.ஏ.,பி.எஸ்ஸி, பி.எட்.,
திருமதி க. சாந்தி, பி.எஸ்ஸி, பி.எட்., அவினாசி
திருமதி க. உமா, பி.எஸ்ஸி., அவினாசி

நூல் வரைவாக்கம்

முனைவர் க. முருகேசன், எம்.ஏ.,எம்ஃபில்.,பிஎச்.டி.
பேராசிரியர் து. மூர்த்தி, எம்.காம்.,எம்ஃபில்.,பிஜிடிசிஏ.,

அலுவல் செயலர்

சேலம் திரு. த. அண்ணாதுரை, எம்.ஏ.,எம்ஃபில்.பிஎச்.டி.,

புரவலர்கள்

பொறியாளர். திரு. வெங்கடேசன் இலட்சுமிநாராயணன்
ஸ்டேட்சிடி நிறுவனம், பாஸ்டன், அமெரிக்கா.

பொறியாளர். திருமதி. ரம்யா இலட்சுமிநாராயணன்
பாஸ்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா.

மருத்துவர். செல்வி சௌம்யா சந்திரசேகரன்
பிரட்போர்டு மருத்துவமனை, இங்கிலாந்து.

முனைவர் அமிர்தசோதி
கிருஷ்ணா பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி, கோவை.

நுழைமுகம்

நம்முடைய இன்றைய வாழ்தலின் வேர்கள், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய வாழ்வெளிகளில் நிலைகொண்டுள்ளது. பண்பாட்டு மரபுகளும், வாழ்வியல் நெறிகளும், சிந்தனை ஒளிர்வுகளும் செயலாக்கத்திறன்களும் என்ற அனைத்திலும் வரலாற்றின் - விதைகளின் - சாரம் இறங்கியுள்ளது. பழம்பெருமையை அறிந்து வெட்டிப் பேச்சுப் புகழுரைகளுக்காக அல்ல, வரலாற்றைத் தோண்டிப் பார்ப்பது ; மாறாக இன்றைய வாழ்தலுக்கான தகவமைப்புக்காக - இன்றைய வாழ்தலைச் சரியாக நிலைநிறுத்திக் கொள்வதற்காகத்தான், மூடிப் புதைந்துபோயுள்ள வரலாற்று மூலங்களை நாம் தேடிக் கொண்டிருக்கிறோம். பழைய வரலாற்றின் சுவடுகளை காலகாலங்களைத் தாண்டி - சுமந்து கொண்டிருப்பவை கல்வெட்டுக்கள். கல்வெட்டுக்களுக்கான ஓர் அற்புதமான பெட்டகம் தமிழகம். சங்க காலத்திலிருந்த கல்வெட்டுக்கள் நமக்கு ஓரளவு கிடைத்தாலும், பிற்காலச் சோழர் எழுச்சிக்குப் பிறகு வெட்டப்பட்ட நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்கள் தென்மாநிலங்களில் பரவலாகக் கிடைக்கின்றன. கல்வெட்டாய்வாளர்களுக்கு இது அற்புதமான புதையல். இத்தகைய கல்வெட்டுக்களைப் படியெடுத்து, ஆய்வு செய்து வெளியிடும் முயற்சியில் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலமாகவே அறிஞர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்திய அரசின் தொல்பொருளாய்வுத்துறை, தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை போன்ற அரசு சார்ந்த நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும், சில தனியார் நிறுவனங்களும் தன்னார்வ அமைப்புகளும் கல்வெட்டுக்களைப் படியெடுத்து வெளியிட்டுள்ளன. என்றாலும் ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் படிக்கப்படாமலும் படியெடுக்கப்படாமலும் இருக்கின்றன. தத்தம் முயற்சியில் ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் அவற்றைத் தேடித் திரட்டி வருகிறார்கள். அத்தகைய ஆய்வாளர்களுள் முனைவர் மா.கணேசன் தலைசிறந்தவர். அவருடைய அரும்பணியின் அடையாளமாக இந்த நூல் வெளியாகின்றது.

தென்னிந்திய வரலாற்றில் பௌத்த சமயத்தின் இடம் குறித்த ஓர் ஆய்வை புத்தகயாவின் மகதப்பல்கலைக்கழகத்தில் உலகப்புகழ் பெற்ற மேதை முனைவர் **உபேந்திரதாகூர்** அவர்களின் வழிகாட்டுதலில் மேற்கொண்டபோது, கல்வெட்டுக்கள் கண்டறிவதில்

உள்ள இடர்ப்பாடுகளை நான் முழுமையாக எதிர்கொள்ள நேர்ந்தது. கோழிக்கோடு பல்கலைக்கழகத்திலும் என் கல்வெட்டுக்கள் சார்ந்த ஆய்வு தொடர்ந்தது. கல்வெட்டுக்களை ஆவணப்படுத்துதலின் இன்றியமையாமையை வரலாற்றாய்வாளன் என்னும் நிலையில் உணர முடிந்தது. இந்தப் புரிதல் தளத்தில் நின்று பார்க்கும்போது, முனைவர் மா.கணேசன் அவர்களின் முயற்சி எவ்வளவு அற்புதமானது, போற்றுதலுக்குரியது என்று வியக்கவேண்டியுள்ளது.

கல்வெட்டியல் அறிஞர் முனைவர் *கே.ஆர்.நஞ்சுண்டன்* அவர்கள் தலைமையில் *கோவை இலக்கிய வட்டம்* என்ற அமைப்பின் சார்பில், 1974ஆம் ஆண்டில் விசயமங்கலம், சேவூர், பேரூர், அவினாசி, ஆனைமலை ஆகிய இடங்களில் கல்வெட்டுக்களைப் பார்த்து, படித்தறிவதற்காகத் தொடங்கியது எமது ஆர்வ முயற்சி. இதன் விளைவாக ஒரு முழுமையான கல்வெட்டாய்வாளராக முனைவர் மா.கணேசன் செழிக்கச்செழிக்க மலர்ந்தார். என் வழிகாட்டுதலில் சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக கொங்குநாட்டுக் கல்வெட்டுக்கள் என்ற ஆய்வுத்தளத்திலேயே செயற்பட்டார். கல்வெட்டுக்களைத் தேடவும், படியெடுக்கவும் அவர் அலைந்த அலைச்சல்............ அவர் மேற்கொண்ட சிரமங்கள்........ மிகமிக அதிகம். ஆனால் புதியனவற்றைக் கண்டவுடனே எல்லாத் துன்பங்களும் அழிந்து போய் மீண்டும் புத்துணர்ச்சி...... தன் வாழ்நாளையே கல்வெட்டுக்களுக்காக அர்ப்பணித்தவராக இயங்கிக் கொண்டிருக்கிறார் இன்னும்........... இன்னும். ஓய்வே இல்லாமல்.

கொங்குநாட்டு வரலாற்றின் நடமாடும் ஆவணமாக இயங்கிக் கொண்டிருக்கும் அவிநாசி *முனைவர் மா.கணேசன்* அவர்கள் தம் முப்பது ஆண்டுகளுக்கு மேலான தேடலில் கிடைத்த, பதிவு செய்த கல்வெட்டுக்களை இப்போது வெளியிடுவது எதிர்கால வரலாற்றாய்வாளர்களுக்கான ஒரு புதிய ஒளித்திரளாக அமையும். முனைவர் மா.கணேசன் அவர்களுடன், *திரு.இரா.ஜெகதீசன்* அவர்களும் இணைந்து செய்துள்ள இந்த முயற்சியைத் தமிழுலகம் இருகரம் கூப்பி வரவேற்கின்றது.

இரா.சந்திரசேகரன்

திருச்சிற்றம்பலம்

முனைவர் ந. இரா. சென்னியப்பன்

அணிந்துரை

தொல்காப்பியத்தில் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்தல் ஆகியன பற்றி வரும் செய்திகள் நடுகல்லின் தோற்றத்திற்கு அடிப்படையாகும். நடுகல்லில் பீடும் பெயரும் எழுதி நட்ட செய்தியைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதுவே கல்வெட்டின் தொடக்கமாகும். சங்க காலச் சேரமன்னர்களைப் பற்றி ஆறுநாட்டார் மலைக்கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன. அரச்சலூர்க் கல்வெட்டு இசையைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. கொங்குநாட்டுக் கல்வெட்டுக்கள் தனித்தன்மை வாய்ந்தன. தனித்தமிழ்நடையும், இயற்கையான சொல்லமைப்புக்களும் மிக்கிருக்கும். திரு.ஜே.வி.சுப்பிரமணிய ஐயர், கோவை கிழார் இராமச்சந்திரன்செட்டியார் முதலியோர் கொங்குநாட்டுக் கல்வெட்டுக்குப் பேருழைப்புத் தந்த பெருந்தகையாளராவர்.

நண்பர் மா.கணேசன் அவர்கள் தற்காலத்தில் கொங்குநாட்டுக் கல்வெட்டுக்களை வெளிக்கொண்டு வரப் பெருமுயற்சி செய்துள்ளார். நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்களை அரிதின் முயன்று படித்தறிந்து படியெடுத்துள்ளார். எங்கேனும் கல்வெட்டுள்ளதென்று கேள்விப் பட்டால் செலவையும், காலத்தையும், உணவையும் பொருட்படுத்தாது பெரிதும் முயன்று படித்து வெளிக்கொணர்ந்துள்ளார். 1978 முதல் இன்று வரை கல்வெட்டுக்களுக்காகவே உழைத்து வருகிறார். கொங்குநாட்டுப் பாடல் பெற்ற தலங்களில் உள்ள கல்வெட்டுக்கள் - ஓர் ஆய்வு என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொண்டபோது தாமாகவே முயன்று நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்களை வெளிக்கொணர்ந்தார். அந்தணர், கம்மாளர், இடையர், தேவரடியார் முதலியோர் பெற்ற உரிமைகள் பற்றிய கல்வெட்டுக்கள் இவருடைய மிகச் சிறந்த கண்டுபிடிப்பாகும். திருமுருகன் பூண்டியில் திருவாதிரைத் திருவிழாவை ஒட்டி நடைபெறும் பாவை விழாவின்போது ஆலாலசுந்தரநங்கை, சவுண்டைய நங்கை, திருவுண்ணாழி நங்கை ஆகியோர் கருவறை வரை சென்ற கல்வெட்டுச்

செய்தி இவரால் வெளிக்கொணரப்பட்டது. இச்செயலுக்காகச் சைவ உலகமும் தமிழ் உலகமும் நன்றிக் கடப்பாடு உடையதாக இருக்க வேண்டும்.

புதுதில்லி - இலக்கிய வரலாற்று ஆய்வுப் பெருமன்றத்தின் துணையுடன் 1992 முதல் 1995 முடிய பாரதியார் பல்கலைக்கழகத்தில் நிலவுடைமையும் வேளாண்மை வளர்ச்சியும் என்ற தலைப்பில் மிகச்சிறந்த ஆய்வை நிறைவு செய்து தந்துள்ளார். நீர்ப்பாசன முறை, வாய்க்கால் அமைக்கும் முறை, திருந்தா நிலத்தைத் திருத்திக் கொள்ளும் முறை, அந்நிலத்துக்கு வரிவிலக்குக் கொடுத்த முறை முதலிய செய்திகளை மிகச் சீரிய முறையில் இதுவரை வரலாற்றறிஞர் யாரும் விளக்காத முறையில் வெளிக்கொணர்ந்துள்ளார். சர்க்கார் பெரியபாளையம் - கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய் (தேவாரம்) எனப் புகழப்படும் கோவிலில் காணப்பெறும் வணிகம் பற்றிய மிகப்பெரிய கல்வெட்டை வெளிக்கொணர்ந்துள்ளார்.

கோவை மாவட்டக் கல்வெட்டுக்கள் அனைத்தையும் இத்தொகுப்பில் தொகுத்துள்ளார். பல்கலைக்கழகங்களும், கல்விநிலையங்களும், ஆராய்ச்சிக் கழகங்களும் செய்ய வேண்டிய பெரும்பணியைத் தனிப்பட்ட ஒருவர் செய்திருப்பது எண்ணிக்கூடப் பார்க்கமுடியாத அருஞ்செயலாகும். கல்வெட்டு ஆய்வாளரான திரு.இரா.ஜெகதீசன் படித்தறிந்த கல்வெட்டுக்களையும் இப்பதிப்பில் உடன் தந்துள்ளார். பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் தண்டமிழ்ப் புலமை மிக்கவர், ஆய்வு எண்ணம் கொண்டவர், ஆய்வாளர்களை ஊக்குவிப்பவர் முனைவர் இரா.சந்திரசேகரன் அவர்கள் வழிகாட்டுதலில் இவ்வெளியீடு வெளிவருகின்றது. வெளியீட்டில் தொடர்புடைய அனைவர்க்கும், நண்பர் கணேசனுக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

பேரூர்
1, திசம்பர் 2003

இன்னணம்,

முனைவர் ந.இரா.சென்னியப்பன்,
முதல்வர் (ஓய்வு) தவத்திரு சாந்தலிங்க
அடிகளார் தமிழ்க் கல்லூரி,
தலைவர், மணிவாசகர் அருட்பணிமன்றம்
பேரூர், கோவை-641 010.

ஆசிரியர் தன்னுரை

நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்கள் இன்றும் படித்தறியாமலும், படியெடுக்கப்படாமலும் புதைந்துள்ளன. கிடைத்தவற்றுள் சிலவற்றை எதிர்கால ஆய்வுகளுக்கான நலன் கருதி வெளியிடப்படும் சிறு முயற்சியே இந்த நூல். நான் *கொங்கு நாட்டுப்பாடல் பெற்ற தலங்களிலுள்ள கல்வெட்டுக்கள் - ஓர் ஆய்வு* என்ற பொருளில் முனைவர் பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1980இல், முனைவர் இரா.சந்திரசேகரன் அவர்களை நெறியாளராகப் பெற்றுப் பதிவு செய்து கொண்டேன். கல்வெட்டுக்களைப் பற்றி ஒரு தெளிந்த பயிற்சி பெற்றிருந்த அப்பெருந்தகை எனக்கு நெறியாளராக மட்டுமன்றிக் களஆய்வின் போது அவிநாசி, பெரியபாளையம், சோழமாதேவி, கடத்தூர், சேவூர் போன்ற பல்வேறு ஊர்களில் கல்வெட்டுக்களைப் படியெடுக்கவும் பெருந்துணை புரிந்ததை இன்றும் மகிழ்வுடன் எண்ணிப் பார்க்கின்றேன். களஆய்வின்போது நாங்கள் பெற்ற அனுபவங்களைத் தனியே ஒரு நூலாகவே எழுதலாம்.

என் ஆய்வுக்காக 1978 முதல் கல்வெட்டுக்களைப் படியெடுக்கும் பணியை மேற்கொண்டு அவிநாசி, ஆலத்தூர், சேவூர், சூலூர், பெருமாநல்லூர் ஆகிய ஊர்களில் நான் புதிதாகக் கண்டறிந்து பல கல்வெட்டுக்களை வெளிப்படுத்தினேன். இப்பணியில் ஒரு தனிமனிதனாக ஈடுபட்டுக் கல்வெட்டுக்களை வெளிப்படுத்தியதைக் கண்டு நடுவணரசின் தொல்லியல் துறையின் கல்வெட்டியல் பேரறிஞர் திருவாளர் கே.ஜி.கிருஷ்ணன் அவர்கள் என்னைப் பெரிதும் பாராட்டி ஊக்குவித்தார். முனைவர் இரா.சந்திரசேரகன், நண்பர் முனைவர் அர.பூங்குன்றன் ஆகியோருடைய ஊக்குவிப்பும் நெறிப்படுத்தலுமே கொங்கு நாட்டில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களைப் படியெடுக்க என்னை எழுச்சியுறவைத்தன.

இந்நூலில் உள்ள கல்வெட்டுக்களனைத்தும் இதுவரை அச்சேறாத கல்வெட்டுக்களேயாகும். அவநாசி, திருமுருகன்பூண்டி, பேரூர் ஆகிய ஊர்களின் கல்வெட்டுக்களில் தென்னிந்தியக் கல்வெட்டுக்களின் 4வது, 5வது, 6வது மற்றும் 26வது தொகுதிகளில் வெளியானவை நீங்கலாக, எங்கள் முழுமுயற்சியில் படியெடுத்த

கல்வெட்டுக்களை மட்டிலுமே வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். இக்கல்வெட்டுக்களை எனது முனைவர் பட்ட ஆய்வேட்டில் 1984இல் பதிவு செய்துள்ளேன். எனது நண்பரும், கல்வெட்டுக்களில் புலமை பெற்றவருமான சூலூர் **திரு.இரா.ஜெகதீசன், எம்.ஏ., எம்.ஏ., எம்ஃபில்., டி.இஏ,டீ.ஜீடி.,** அவர்களும் நானும் இணைந்து பல்வேறு இடங்களில் தேடிப் படியெடுத்துப் பதிவு செய்த கல்வெட்டுக்களை இந்நூலில் அளிப்பதைத் தமிழுலகம் வரவேற்கும் என்று நம்புகிறோம். இந்த முயற்சிக்கு சூலூர் ஆர்.வி.எஸ். கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியரும், சிறந்த கல்வெட்டியல் அறிஞருமான **முனைவர் சுப்புரத்தினம் ஜெகதீசன் எம்.ஏ.,எம்ஃபில்.,பிஎச்.டி.,** அவர்கள் நெறிகாட்டி உதவியதையும் நன்றியுடன் பதிவு செய்கிறோம். நடுவண அரசின் மத்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் மூத்த ஆய்வறிஞர் **திரு.சாமிநாதன்** (மைசூர்) அவர்கள், நாங்கள் கல்வெட்டுக்களைப் படியெடுக்கப் பயிற்சியும் உதவியும் அளித்தார். வட்டெழுத்துக்களைப் பற்றியும் அவற்றைப் படிக்கும் முறைகளைப் பற்றியும் அவரிடம் கற்றுக் கொண்டோம். அவருடைய உதவியை என்றென்றும் நினைந்து நன்றி பாராட்டுவோம். பேரூர் சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரியின் மேனாள் முதல்வரும், தமிழ்மறை ஓதி கோயிற் குடமுழுக்கைப் புதுமையாகச் செய்யும் மணிவாசகர் அருட்பணி மன்றத் தலைவரும் சைவ சித்தாந்தச் செம்மலுமான **முனைவர் ந.இரா.சென்னியப்பனார்** அவர்கள் இந்நூலுக்கு அழகியதொரு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கி மகிழ்கின்றோம்.

கல்வெட்டுப் பயிற்சி தந்து, தொடர்ந்து கல்வெட்டுக்களைப் படியெடுக்கவும், ஆய்வு செய்யவும் ஊக்குவித்த தமிழ்நாடு தொல்பொருள் துறையின் கோவை அலுவலக அன்பர்களுக்கு எங்கள் நன்றியைச் செலுத்தி மகிழ்கின்றோம். இனிய நண்பர் ஆராய்ச்சிச் செம்மல் **முனைவர் அர.பூங்குன்றன்** அவர்களும் ஈரோடு **புலவர் முனைவர் செ.இராசு** அவர்களும் எம்மை இத்துறையில் பணியாற்ற ஊக்குவித்ததமைக்குப் பெரிதும் நன்றி பாராட்டி வணங்கி மகிழ்கின்றோம். இம்முயற்சியில் நாங்கள் ஈடுபடத் தோன்றாத் துணையாக விளங்கிய இறையருளை நினைந்து நெஞ்சாரப் போற்றி வணங்குகின்றேன்.

அவிநாசி — அன்பன்

1, திசம்பர் 2003 — **முனைவர் மா.கணேசன்**

பொருளடக்கம்

அவிநாசி வட்டம்

1. அவிநாசி – 13
2. பழங்கரை – 33
3. கரியாக்கவுண்டனூர் – 35
4. கருவலூர் – 36
5. கஞ்சப்பள்ளி – 37
6. சேவூர் – 38
7. திருமுருகன்பூண்டி – 68
8. அன்னூர் – 86
9. நடுவச்சேரி – 118
10. ஆலத்தூர் – 124

உடுமலை வட்டம்

11. கடத்தூர் – 127
12. கொழுமம் – 148
13. சோமவாரப்பட்டி – 149
14. ருத்திராபாளையம் – 151

கோயம்புத்தூர் வட்டம்

15. கோயம்புத்தூர் – 152
16. வெள்ளலூர் – 157
17. கோயில்பாளையம் – 162
18. இடிகரை – 175
19. ஒற்றைக்கால்மண்டபம் – 188
20. துடியலூர் – 189
21. இக்கரை போளுவாம்பட்டி – 193
22. பேரூர் – 203
23. சுண்டக்காமுத்தூர் – 225

திருப்பூர் வட்டம்

24. பெருமாநல்லூர் – 226
25. சர்க்கார் பெரியபாளையம் – 240
26. பெருந்தொழுவு – 255
27. கொடுவாய் – 258
28. அலகுமலை – 267

பல்லடம் வட்டம்

29.	சூலூர்	–	268
30.	பட்டணம்	–	269
31.	செலக்கரிச்சல்	–	270
32.	இருகூர்	–	271

பொள்ளாச்சி வட்டம்

33.	ஆனைமலை	–	272
34.	கரப்பாடி	–	278
35.	பெரியகளந்தை	–	279
36.	குள்ளிசெட்டிபாளையம்	–	282

மேட்டுப்பாளையம் வட்டம்

37.	வெள்ளியங்காடு	–	284
38.	மருதூர்	–	284
39.	பெள்ளாதி	–	285
40.	இரும்பறை	–	286
41.	இலுப்பநத்தம்	–	287

தகவலுக்கான குறிப்புரை

இந்தியத் தொல்லியல்துறை வெளியிட்ட கீழ்க்காணும் கல்வெட்டுக்கள் இந்நூலில் இடம் பெறவில்லை. ஆய்வாளர் வசதிக்காக அவை பற்றிய (வெளியிட்ட பகுதிகளை) குறிப்பு தரப்படுகிறது.

South Indian Inscriptions - vol-V

1. பேரூர் 223–246
2. திருமுருகன்பூண்டி 247–255

S.S.I. Vol - XXXVI

1. குமரலிங்கம் 109–143
2. சங்கராமநல்லூர் 144–180
3. அவிநாசி 181–213
4. கண்ணாடிப்புத்தூர் 223–233
5. சோழமாதேவி 234–255

மகாகவி பாரதியார் நூலகம்
வெளியீடுகள்

1. உடுமலை நாராயணகவி : பன்முகப் பார்வை. ரூ. 100.
2. நாமக்கல் கவிஞர் : பன்முகப்பார்வை. ரூ. 100.
3. நாமக்கல் கவிஞர் : பன்முக ஆய்வு. ரூ. 100.
4. சங்க இலக்கியம் : பன்முகப் பார்வை. ரூ. 100.
5. சங்க இலக்கியம் : பன்முக ஆய்வு. ரூ. 100.
6. சங்க இலக்கியம் : பன்முக நோக்கு. ரூ. 100.
7. மொழிஞாயிறு தேவ நேயப் பாவாணர் : பன்முகப் பார்வை ரூ. 125.
8. கிறித்துவ இலக்கியம் : பன்முகப் பார்வை. ரூ. 125.
9. இசுலாமிய இலக்கியம் : பன்முகப் பார்வை ரூ. 125.
10. தமிழ் இலக்கியம் : வாழ்வியல் விழுமியம் : பன்முகப் பார்வை ரூ. 125.
11. மகாகவி பாரதி : பன்முகப்பார்வை ரூ. 125.
12. மகாகவி பாரதி : பன்முக ஆய்வு ரூ. 150.
13. தமிழ் கற்பித்தல் : அணுகுமுறைகளும் செயல் நெறிகளும் ரூ.100.
14. உ.வே.சா. காலத்தில் தமிழர் வாழ்வியல் ரூ. 100.
15. தமிழ் இலக்கியம் : வாழ்வியல் அறம் ரூ. 150.
16. நாட்டுப்புற வழிபாட்டு மரபுகள் ரூ. 150.
17. சங்க இலக்கியம் : இலக்கிய வளமும் வாழ்வியல் அறமும் ரூ. 150.
18. தமிழ் இலக்கியம் : வாழ்வியல் நெறி ரூ. 150.
19. கவியரசு கண்ணதாசன்: ரூ. 150.
    கவிதைச் செழுமையும் கருத்தியல் மேன்மையும்
20. மகாகவி பாரதி : கருத்தியல் திரட்டு ரூ. 150
21. மகாகவி பாரதி : பன்முக நோக்கு ரூ. 125.
22. உடுமலை வட்டார நாட்டுப்புறப் பாடல்கள் :
    கருத்தமைப்பும் மக்கள் பங்கேற்பும் ரூ. 125.
23. இசுலாமியச் சிறு கதைகளில் வாழ்நெறி மதிப்பியல் ரூ. 125.
24. சங்க இலக்கியம் : கருத்தியல் வளம் ரூ. 170.
25. திருக்குறள் : கருத்தியல் வளம் ரூ. 150.
26. தமிழ் இலக்கியம் : கருத்தியல் வளம் ரூ. 150.
27. நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும் ரூ.170.
28. மகாகவி பாரதியார் : கருத்தியல் வளம் ரூ. 170.
29. பாவேந்தர் பாரதிதாசன் : கருத்தியல் வளம் ரூ. 130.
30. தமிழ்ப் புத்திலக்கியம் : கருத்தியல் வளம் ரூ. 170.
31. கவிஞர் சிற்பி : கருத்தியல் வளம் ரூ. 150.
32. கவிஞர் சிற்பி : கவிதை வளம் ரூ. 150.
33. சங்க இலக்கியத்தில் ஆயர் வாழ்வியல் ரூ. 60.

அவிநாசிக் கல்வெட்டுக்கள்

எண்–1

இடம் : அவிநாசியப்பர் கோயில் கருவறை – வடக்குக் குமுதவரியில் தீர்த்தக்குழிக்கு மேற்கில் உள்ள சாசனம்

அரசன் : குலோத்துங்கன் (யா.12)கி.பி.1161

செய்தி : அர்த்தசாமத்து பாலமுதுக்கு முப்பது பசுக்களைக் கொடுத்து திருநுந்தா விளக்கும் எரிக்க ஏற்பாடாயிற்று.

கல்வெட்டு

1. ஸ்ரீகுலொத்துங்க சொழ தெவ னெந் எமக்குச் செல்லா நின்ற யாண்டு ப
2. ந்திரண்டாவது அவிநாசி யாளுடையாற்குதிருவத்த யாமத்துக்கு பாலமுது ....
3. ரிசி பெரியசிகாழியாந் வசம் நாங்குடுத்த பசுமுப்பதுங்கைக் கொண்டொம்
4. நாளொன்றுக்கு பரகெ(ச)ரிஅறுநாழி பாலமுதும் திருநுந்தா விளக்குஒன்றும் ....

(மற்ற வரிகள் தரையில் புதைந்துள்ளன)

எண்–2

இடம் : கல்யாண மண்டபம் தெற்கு குமுதம்

அரசன் : சடாவர்மன் சுந்தரபாண்டியன் (யா.22)

செய்தி : உடையான் வணிகராதித்தன் சந்தியாதீபம் எரிக்க ஸ்ரீபண்டாரத்தில் பத்துப்பணம் ஒடுக்கினான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொச்சட பந்மரான (திரிபுவனச் சக்கரவர்த்தி) கள் ஸ்ரீ (சு)ந்தரபாண்டிய தெவற்கு யாண்டு (22)வது புரட்டாதி மாதம் 27 தியதி . . . னிகரை இ . . ரசெ. . . . ரவளநாட்டு . . . ந்தது . . மா காபா . . . ர்பா (அடி)
3. சகீழ்தளத்துழான் தெவன் உடையான் வணிக ராதித்த னென் உடையார் அவிநாசி ஆளு டைய நாயனாற்கு
4. திபவிளக்கு ஒன்றுக்கு இறைநாளில் ஸ்ரீ பண்டாரத்துக்கு ஒடுக்கின பணம் பத்துக்கும் இந்த சந்தியா திபம் . . . . . .

எண் – 3

இடம் : பெருங்கருணாம்பிகை கோயில் அர்த்த மண்டப வடக்குச் சுவரில் உள்ளது.

அரசன் : கோனேரின்மை கொண்டான் – வீரராசேந்திரன் ? கி.பி. 1222 நாள் 322 அரசனின் கருவூலத்தில் முதலிட்டு (Deposit) வைத்த பாப்பார் சான்றார்க்குப் பல்வேறு சிறப்பு உரிமைகள் வழங்கப் பெற்றன. அவற்றுள் சீனக்குடை பிடித்துக்கொள்ளும் உரிமை குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவந சக்கரவர்த்தி கொநெரிந்மை கொண்
2. டாந் வடபரிசார நாட்டிற் பாப்பார் சாந்ருற்கு நம்மொலைகுடு
3. த்தபடியாவது இவர்கள் நம் சரக்குக்குப் பொருள் வைத்தமை
4. யில் இவர்களுக்கு நாம் குடுத்த வரிசையாவது மெலெ
5. ற்றமந்துலாகமுங் கிழெற்றங்குதிரையுந் தழையுஞ்
6. சினக்குடையுஞ் செகண்டியும் பெற்று வருவார்களாக
7. வும் மைச்சுக்கு சாந்திடப் பெறுவர்களாகவும் இரட்டை
8. த்தலைக்கடைக்குக் கொற் கட்டிக் கொள்ளப் பெறுவா(ர்)
9. களாகவும் படைக்கணிக்கு ஆரம் பூணப் பெறுவார்களாகவு
10. ம் பச்சைப்பிடாம் பொர்க்கப் பெறுவார்களாகவும் தங்
11. கள் மக்களுக்குப் பொந்நிந் காறை கட்டப்பெறுவார்கள
12. ாகவும் கல்லியாணத்துக்கு கட்டணங்கட்டியெறி ஊர்
13. சூழப் பெறுவார்களாகவும் இவ்வரிசைகள் இவர்கள் மக்கள்
14. மக்களுக்கு சந்திராதித்தவரை செல்வதாகவும் இப்படி செ
15. சம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் கொள்ளப் பெறுவார்கள
16. ாகவும் நம்மொலை குடுத்தொம் இவை எல்லாம் வல்ல சொ
17. ழமுவெந்த வெளாந் எழுத்துயாண்டு பதிநஞ்சாவது
18. நாள் முந்நூற்றிருபத் திரண்டிநால் இப்படிக்கு வாண
19. ராய தெவந் எழுத்து.

எண்–4

இடம் : அவிநாசி பெருங்கருணாம்பிகை கோயில் மகாமண்டப வடசுவரில் உள்ளது.

அரசன் : இல்லை

செய்தி : சோழமண்டலத்து .... தனியூர் ஸ்ரீவீர நாராயணச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ கற்பகச்சேரிக் குண்டுச்சீரங்கநாத பட்டனும்கன...... தவி பட்டனும் ஏற்படுத்திய குண்டுரான் சந்திக்கு, அமுதுபடி முதலியவற்றுக்கு, பல்வேறு இடங்களில் பலதடியால் உள்ள நிலங்களைத் தேவதானத்தார் எடுத்துக் கொண்டு பூசைமுட்டாமல் நடக்க ஏற்பாடு செய்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம். . . . மெல் செல்லா நின்ற . . .

விரோதி (ஸம்வத்ஸரத்து) கற்கடக நாயிற்று பூர்வபட்ச..... திதியும் நாயற்றுக் கிழமையும் பெற்ற மூலத்து நாள் கொங்கு மண்டலத்து வடபரிசார நாட்டு உடையார் அவிநாசி ஆளுடைய நாய(னார்)க்கு சொழமண்ட ....

2. ட்டுத் தனியூர் ஸ்ரீ விரநாராயணச்சதுர் வெதிமங் கலத்து ஸ்ரீ கற்பகச் செரிக் குண்டுச் சிரங்க நாதபட்டன் கன . . . . தவிபட்டனான நாயனென் இன்னாயனார்க்கு குண்டூரான் சந்தி என்று நான் கட்டிய சிறுகாலைச் சந்தியில் இடைத் தூபத்தில் கட்டின சந்திக்கு அமுது செ(ய்ய)

3. அரிசி --- பருப்பு 2 நாழி கறியமுது பலம் 5 உப்பு அமுது ஆழாக்கு மிளகு அமுது 25 செவிடு நெய் அமுது ஆழாக்கு தயிர் அமுது அடைக்காய் அமுது 5 இலை அமுது 60 ஆக ஆண்டுக்கு நாள் 365அரிசிக்கு உருப்படி இந்த வகைப்படி விஞ்சனத்துக்கு விலைபடியும் நிரவி .. ன உ

4. ஙநாகடா . . களலுக்குறும் மான்யமாகக் கொண்டுடையெனாய் அனுபவித்துப் பொந்த ..... ஙகரயசு . . . ஒரு பூ நிலத்தில்விட்ட நிலமாவது கரைவழிநாட்டு திருவாலந்துறையான விக்கிரம சொழச் சதுர்வெதி மங்கலத்து (உ)

5. ட்கிடை .... நிலத்தில் விட்ட நிலத்துக்கு எல்லையாவது சொழநாகன் சுற்று கிழ் பாற்கெல்லை எழுர் . . .க்கு --- ட்ட . . . பாய்கிற வடக் கொடிய உட்ச் சிறுகவர் செவ்வைக்கு மெற்கும் தென்பாற்கெல்லை கிழக் கொடிய காணிக்கவற்ச் செவ்வைக்கு வடக்கும் மெற்பாற் கெல்லை

6. வாச செவ்வைக்கு கிழக்கும் வடபாற்கெல்லைஎழுர் ஊர் குடுத்து ...... கு வடக்கும் ஆக இந்த பெருநான்கெல்லை உட்பட்ட ..... கறக்கு ஒருங். . . . வவுட்பட்ட தடி பலவினால் நெல்விதை 7 கலம்......

7. று பொன் நிலத்துக்கு கிழ்பாற்கெல்லை தொட்ட கவற்கு மெற்கும் தென்பாற்கெல்லை எழுர் ஊர் நிலத்துக்கு (வடக்)கும் மெற்பாற்கெல்லை இந்த ஸபைப் பற்று நிலத்துக்கு கிழக்கும் வடபாற் கெல்லைக் அழகிய ....

8. தாக்கும் விட்ட நிலத்துக்கு தெற்கும் ஆகஇந்நான்கெல்லைக்கு உட்பட்ட தடிஉல் நெல் விதை முந்திரியினால் நிலம் 8மா ஆக நிலம் 6மாவும் பெருர் நாட்டுக் குல செகரநல்லூரில் நான் விட்டநிலம் ஆவது எத்தியன் பட்ட கள நிலறிக்கு கிழை வயலிலெ வி

9. கிழ் பாற்கெல்லை தொட்டக் கவற்கு மெற்கும் தென்பாற்கெல்லை உடையார் திருவான் பட்டி ஆளுடைய நாயனார் தெவதானம் சபைப் பற்றுக்கு

வடக்கும் மேற்பாற்கெல்லை பெருரில் அத்தியன்பட்டகள நிலம் அழ

10. கிய திருச்சிற்றம்பல முடையார் தெவதானத்துக்கு தெற்கும் ஆக இன்னான் கெல்லைக்குட்பட்ட தடி நாலினால் விதை 200 னால் ஊற்கும் உட்பட்ட நிலமாவது கீழ்பாற் கெல்லை இவ்வூரவர் நிலத்துக்கு மேற்கு தென்பாற்கெல்லை தொட்டகவறுக்கு

11. ம் வடபாற்கெல்லையும் குலசெகரநல்லூர் ஊரவற்கு நீங்கின எல்லை வரம்புக்குக் கிழக்கும் தெற்கும் உட்பட்ட தடி இரண்டினால் நிலம் 60 ஆக நிலம் 200மாவும் வட பரிசாரநாட்டுப் புக் கொளியூர்க்குள வயலில்என் இறையிலி

12. நிலம் 500மா ஆக நிலம் இன்னிலம் அறைக்காணியும் நான்கட்டின குண்டூரான் சந்திக்கு வைத்த .... க்கு 286 ----புக்கொளியூர் குள வயல் நிலம் 10 மாவுக்கு அளக்கும் நெல் 600

13. தான் வெண்டிய பயிர் செய்து பண்டாரத்தில் ஆண்டு ஒன்றுக்கு மாத்தாய் 26.......இவக்கு அளவு ஆக உதகம் பண்ணிக் குடுத்தென் குண்டூர் நாயனென் இந்நிலம் ஒன்பதுமா அறை காயு முதலைக்குளத்திலெ முதலைவாய்ப் பிள்ளைக்கு

14. டி அளந்த நெல்லுத் திருமலையிலெ கல்வெட்(டிய) படி தெவதானத்தில் எருத்திலெ ஸ்ரீ பண்டாரத்தார் எடுத்துக் கொள்ளக் கடவார்களாகவும் இப்படிக்கு செம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் கொண்டு சந்திராதித்தவரையும் செல்வதாகவும் இப்படிக்குக் குடுவை குண்டு ஸ்ரீரங்நாதப(ட்டன்).......

(இக்கல்வெட்டில் ஒவ்வொரு வரியிலும் இறுதிப் பகுதி பள்ளியறைச்சுவரில் மறைந்துள்ளது).

எண்–5

இடம் : கல்யாணமண்டப வடக்கு அதிட்டானத்தில் உள்ளது

அரசன் : சிங்கைய தண்ணாயக்கன் 17ஆம் நூற்றாண்டு.

செய்தி : சிதகாரகண்டன் சந்திக்கும், திருநாளுக்கும் நித்த நிமந்தங்களுக்கும் கரைவழி நாட்டில் ஓர்ஊர் தேவதானமாக வழங்கப்பட்டது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ மகாபிரதான இம்மடி (இராகு)த்தராயன் சிங்கய தண்ணாயக்கர் அவி(நாசி ஆளுடையார்) (கே)ரயில் தானத்தார்க்கு நம் ஓலை குடுத்த தன்மமாவது நாயனார்

2. அவிநாசியாளுடையார்க்கு சிதகாரகண்டன் சந்திக்கும் (சி)தகா(ர) கண்டன் திருநாளுக்கும் ந(நி)த்த நிமந்தங்க(ளுக்கு)ம் உடலாக கரைவழி நாட்டு...
3. . . . ஸ்ரீமுக சம்வத் சரத்து ஐப்பசி மாதமுதல் முதலாக இறையிலி (தெ) வதானமாக குடுத்தொம் இவ்வூர் நான்கெல்லைக்கு உட்பட்ட நன்செய் புன்செய் மெனொக்கியமரம் கிழ்நொக்கிய கிணறு
4. மெ(ல் நொக்கிய) மரம் கிழ்நொக்கிய கிணறு இறைபுரவு சித்தாயம் எலவை உகவை மன்றுபாடு தெண்டக்குற்றம் சுங்கம் செலுட்டிசு(ங்) கம் சொறும்சட .... சந.......
5. .... கெ.........ஒலைச்சம்படம் அச்சு...........க்கும் யா..........வழவரில்வரி தறிஇறை கடமை மற்றும் எப்பெர்ப்பட்ட இறைகளும் ச.....ம்....
6. ளுடைய நாயனார்க்கும். . . . . . கல்லிலும் செம்பிலும் வெட்டி(க்குடுத்தோம்) சந்திராதித்தவரை செல்லுவதாக . . . .
7. நந்தமரானார் எப்பெர்ப்பட்டாரும் பாற்படுத்துக்குடுக்க இத்தன்மத்தை அழிவு செய்வான் வழியெ ழெச்சமறுவான் இது பன்மா ஹெஸ்வர ரட்சை.

எண் – 6

இடம் : சிவன் கோயில் மகாமண்டப மேற்குச்சுவர் சண்டேசுரர் கோயில் கிழக்கில் உள்ள சாசனம்

அரசன் : வீரராசேந்திரன் கி.பி.1207–1255

செய்தி : பெருங்கருணாலய செல்வியார்க்கு பிராட்டி மாதேவி சிலம்பாமுவி (வீரராசேந்திரன் பட்டத்தரசி ?) அமுதுபடி விஞ்சனங்களுக்கு அரிசிதானம்.

கல்வெட்டு

1. ஸ்ரீவிரராசெந்திர தெவற்கு யாண்டு.....கு.....ாகவது
2. ஆதிமாதத்து அவிநாசியாளுடையார் திருக்காம கொட்
3. டநாச்சியார் பெருங்கருணைச் செல்வி(யார்க்கு)....... (பிரா)ட்டி
4. மாதெவி சிலம்பாமுவி யெந் எங்கள் ...... கா........ா
5. கததாலெ எழுந்தருளுவிச்ச இவற்கு அமுது(படிஒன்)
6. றுக்கு இருநாழியும் திருமுன்னொடுக்கிக்கு (டுத்த அரி)சி நாழி யரிசியு
7. ம் ஆக அரிசி முந்நாழி உரிக்கு ஒரு .... விஞ்சநமுட்பட.........

எண் – 7

இடம் : கருணாலயச் செல்வியார் கோயில் வடக்குஜகதி வரியில் உள்ளது.
அரசன் : வீரபாண்டியன் ? (யா. 27)
செய்தி : கரைவழி நாட்டுப் புத்தெற்றூரான் உடையார் வேணாடுடையார் எழுந்தருளுவித்த விஸ்வேஸ்வர தேவர்க்கு இவ்வூரில் பண்படுத்தப்பட்ட ஒருபோகம் விளையும் நிலத்தில் விளைந்த எண்கலநெல்லும், அச்சு வர்க்கமான வரிகளும் வழங்கப்பெற்றன.

கல்வெட்டு

1. .... பாண்டிய தெவற்கு 27வது உடையார் அவினாசி ஆளுடைய நாயனார் சீ பண்டாரத்தாற்கு இன் நாயனர் தெவதான மாக கரைவழி நாட்டு புத்தெற்றூரான் அ
2. .... லெ உடையார் வெணாடுடையார் எழுந்த ருளுவித்த நாயனார் விஸ்வேஸ்வர தெவற்கு தெவதானமாக எங்களூரில் திருமுகப்படி திருத்திக் கார் ஒரு பூவாகப் பயிர் செய்த நி(லம்)
3. .... கொலாலெ அளந்து கண்ட நிலத்துக்கு எண்கலமாக வந்த நெல்லும் அச்சுவற்கத்து தந்த வரி எலவை திருமுன் காட்சி கொண்டது முதல் குற்றதெண்டம் காற்
4. .... ட்ட வற்கத்துக்கும் கலத்துக்குப் பத்தரையாக வந்த பணமும் உடையார் அவிநாசியாளுடையார் கொயிற்கணக்கர் எழுதிந காவிந் படிக்கு இவ்வாண்டு முதல் ஆண்டுதொறு
5. .... ஊரும் ஊராளிகளொம் இது பன்மா ஹெஸ்வர ரட்சை.

(மெக்கன்ஸி,கோயில் திருச்சுற்றை உயர்த்திக் கட்டியபோது நிலத்தில் மறைந்த கல்வெட்டு)

எண் – 8

இடம் : அம்மன் கோயில் வடக்குச்சுவர் குமுதவரி.
அரசன் : வீர ராசேந்திரன் (யா.15+1) கி.பி.1223–24
செய்தி : பொங்கலூர்காநாட்டு கானூர் முதலிகளில் வீரராசேந்திரனும், வீரராசேந்திர இருங்கோளன் மனைக்கிழத்தி சடைமேலிருந்தாளும் பெருங்கருணாலயச் செல்விக்கு அமுது படிப்புறமாக கொழுஞ்சிப் பாடியான உடைய பிராட்டிச் சதுர்வேதி மங்கலத்தில் ஒருமா நன்செய் நிலம் தானம் செய்து கல்வெட்டிக் கொடுத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்ரீவிரராஜெந்திர தெவற்கு யாண்டு பதினைஞ்சாவதற் கெதிராவது பொங்கலூர்கா நாட்டு காநூர் முதலிகளில் அட்டர்லைச் செவ கந் வளத்து வாழ்வித்தாநாந விரராசெந்திர இருங்கொ
2. நாநாந விரராசெந்திர இருங்கொளர் மனைக் கிழத்தி சடை மெலிருந்தாளும் யிவ்விருவொம் ஆளுடையா ரவிநாசி யாளுடையார் திருக்காமக் கொட்ட நாச்சியார் பெருங்கருணாலயச் செ(ல்வி)
3. (அ)முது படிப்புறமாவது கொழுஞ்சி பாடியாந உடைய பிராட்டிச் சதுர்வெதி மங்கலத்து ஊற்கு தெற்கு குலொத்துங்க சொழ மந்நறையில் எங்கள் ஊராண்மைக் காணிநிலத்தில் பிரா
4. .... வககில் கதவல மடையிலெ ஒருமாச்செய் கல்வெட்டிக் குடுத்தொம் இந்நிலம் ஒருமாவும் இந்நாச்சியாற்கு சந்திராதித்தவரை அமுதுபடி செல்வதாக செம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் குடுத்தொம் இதுபந்
5. (மாஹேஸ்வர ரட்சை) இவை சிங்கள ராய நெழுத்து. இவை வானவன் முவெந்த வெளாநெழுத்து இவை வாணராய தெவநெழுத்து.

எண்–9

இடம் : அர்த்தமண்டப வடக்குச்சுவர்
அரசன் : விக்கிரமசோழன்
செய்தி : இக்கல்வெட்டு வடபரிசார நாட்டில் பூலுவநாட்டார் செய்த தானத்தைக் குறிப்பது.

கல்வெட்டு

1. கொப்ரகெசரி பம்மரான திரிபுவன சக்கர வர்த்தி விக்கிரம சொ
2. ழ தெவற்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநெ(ல்) யாண்டு 12 - வ
3. து வடபரிசார நாட்டில் பூலுவ நாட்டடொ(ம்) திருவெகம்பமுடையாரான
4. மாதெவராண்டாற்கு அமைஞ்சுகுடுத்த பரிசாவது ஆலத்தூரில் பூலுவ குடிக்கு நாட்
5. டில வரிப் பெருமாள் மெடு வெண்டு கொள் சாமந்த பெரெடு கொண்டு எங்கள் நாட்டைத் தெடுபெ
6. து.........குடிவிழுக்காடும் தெவா(ப) ணடாரத்துக்கு நாங்கள் புடவைமுதநது அம்மைஞ்சு

7. குடுத்தொம் பூலுவநாட்டொம்.............
8. ச்சு பொதுவார் இது செம்பிலும் சிலையிலும்......
9. விலங்கல் சொலும்வர் நம்ஒருவன் அல்லலு(றுவ) தாகவும்
10. அவழி(ஏ)ெழுச்ச)மறுவாண்.

எண்–10

இடம் : அம்மன் கோயில் மகாமண்டபத் தென்சுவர் கொடுங்கையின்கீழ்

அரசன் : சுந்தரபாண்டியன்

செய்தி : சோழமண்டலத்து ராஜராஜ வளநாட்டுப் பெரும்புலி யூருடையான் முதலைவாய்ப் பிள்ளைக்குக் குடுத்த வேளானுக்கு ஆணை ஓலை கொடுத்து, கோயில் கணக்கு, ஊர்க்கணக்கு மற்றும் ஒரு தேவர்க்கு வீட்டு மனையும் இறையிலி நிலமும் வழங்கும்படி ஆணையிடப்படுகின்றது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ சண்டேசுரன் ஓலை சாகரஞ்சூழ் வையகத்துக் கண்டீஸ்வரன் கருமமாராய்க – பண்டே அறஞ்செய்தான் செய்தானறங்காத்தான்பாதம் திறம்பாமல் சென்னிமெல் வைத்து–அருளால்
2. ஆதி சண்டெஸ்வரன் ஆதெசம் வாஹதன்ம சொழ மண்டலத்து ராஜராஜ வளநாட்டு பெரும்புலியூரு டையான் எழும்பொதழகியான் திருவிடையாட்ட முடையானான .... (முதலைவாய்ப் பிள்ளைக்கு) குடுத்த வெளானுக்கு
3. நம்மொலை குடுதத படியாவது தாரண ஸம்வத்ஸரத்து விக்ர நாயறறு பூர்வ பட்சத்து தசமியும் திங்கட்கிழமையும பெற்ற உத்திராட நாள் வடபரிசார நாட்டு உடையார் அவிநாசி ஆளுடைய நாயனார்
4. கொயில் கொயில் கணக்கும் திருமடைவிளாகம் காலபா உட்பட ஊர்க்கணக்கு மகாநி .... தெவர்கதும்............(குடு)த்த படியாவது
5. சனநதத் தெருவில் கீழ்சிறகில் மனை ......னையாவது தெருவில் சதாக ....க்கு மெற்கும் தென் பாற்கெல்லை........ வடக்கும்
6. இந்த முதலைவாய்ப்பிள்ளைக்குக்குடுத்த வெளான் கொ.....டையமனைக்கு.........ல் கிணற் றில் ஒன்று பா...... கிழக்கும் வடபாற்கெல்லை நாற்பத் தெண்ணாயிரவன்
7. திருமடத்துக்குத் தெற்கில் இன்னான்கெல்லைக்குள் பட்ட .... ரும் தென் பாற்கெல்லை புக்கொளி

யூற்குளத்துக்கு வடக்கும் மெல்பாற் கெல்லை பள்ளிதிரு வெகம்பமுடையான்

8. கெலலை தாநத்தாரில் ஆளுடையநாயனார் வெட்ட ...... மெற்கும் தென்பாற் கெல்லைக்குட்பட்ட நிலமும் இதில் கீழ்னொக்கிய கிணறும் மெனொக்கிய மரமும் எழுவன.........

9. தொட்டத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை நள்ளாற்றுக்குத் தெற்கும் இன்னான் கெல்லைக்கு கொயிலில் பெறும் இலக்கை ஒரு நிமந்தத் துக்கு மாதம் ஒன்றுக்கு காலால்

10. ஸ்ரீப்பன்மறும் எப்பெறபட்டனவும் குடுத்து இவனுக்கு விருந்தது அறுபதும் தனக்கு அறுதியாக பெறக்கடவனாகவும் இக்கொயில்

11. நெல்லு பதினைங்கலமும் ஆண்டொ ன்றுக்கு பிடவை முதல் பணமு.......ம் கைப்பெற்று எழுவானாகவும் விஷு அயனம் .... திருனாள்படியால் உள்ள பெறு பெறுகவும் ெ

12. வடும திரு...............ன கணக்கும் மற்றும் உள்ள கணக்கானவை ஊர்க்(க)ணக்கால் உள்ள சுவாதந்திரயங்களும் பெற்று இவன் உழும்.........ரும் இறையிலியாக உழுது பொதுவானாகவும் இவனுக்கு இக்காணி பெ

13. ற்று மற்றும் எப்பெற்பட்டனவும் பெறக்கட வானாகவும் தனபிராப்தி மற்றும் எப்பெற்பட்ட சர்வபிராப்திக்கும் உரித்தா வதாக சந்திராதித்த வரை இவன் மக்கள்

14. மக்கள் செல்வதாக நம் ஓலை குடுத்தொம் முதலைவாய் பிள்ளை குடுத்த வெளானுக்கு இப்படிக்கு செம்பிலும் சிலையிலும்

15. வெட்டிக்கொள்க இப்படிக்கு அருளால் ஆதி சண்டேஸ்வரன் காஸ்யபன் சீகாழி மொழி பாகன் எழுத்து யான தட்டுருவ விட்ட

16. இப்படிக்கு திருகல இராமபிரான் எழுத்து சுந்தரபாண்டிய சக்கரவர்த்தி எழுத்து இப்படிக்கு மாதெவாண்டான் எழுத்து இப்படிக்கு ஆளுடையான் எழுத்து இப்ப டிக்கு தெவெந்தரப்பிச்சன் எழுத்து

17. இப்படிக்கு ஆளுடையநாயன் எழுத்து இப்படிக்கு கூத்தப் பெருமான் எழுத்து இப்படிக்கு

18. அருளால் ஆதி சண்டேஸ்வரன் ஸ்ரீகரணத் தான் எழுத்துஇது பன்மாஹெஸ்வர ரட்சை.

எண்–11

இடம் : கல்யாண மண்டபம் தூணில் உள்ளது

அரசன் : ஸ்ரீசுந்தரபாண்டியன் (யா.28) கி.பி. 1244

செய்தி : இக்கோயில் திருமடைவளாகத்திலிருக்கும் முத்தின் சீவிகை பெற்றானான தவசி ஒருவர் திருநடை மாளிகையில் சண்டேஸ்வரரை ஏற்றி வைத்து இரண்டாம் பிரகாரத்தில் வீரபாண்டியன் திருஓலக்கமண்டபத்தில் ஸ்ரீநிலசோபானம் உபானம் முதல் பாஅறுதியாகத் திருப்பணி செய்தார்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொச்சடைப்பன்மரான திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தெவற்கு
2. யாண்டு 28-வதுஅவினாசி யாளுடைய நாயினார் கோயில்
3. திருமடை விளாகத்துகும்பிட் டிருக்கும் தவசியரில் முதலி முதலியான முத்தின் சிவிகை பெற்றானென் திருநடை மாளிகையில்
4. சண்டெஸ்வர நாயினார் ஏறி யருளப் பண்ணினெனும் இரண்டாம் பிர காரத்து விரபாண்டியன் திருவொலக்க மண்டபத்து தெவர் ஸ்ரீனில சொபானம் உபானம் துடங்கி
5. பாவறுதியாக உள்ளதில் திருப்பணி செய்வித்தென் முதலி முத்தின் சிவிகை பெற்றானென் இது என் தன்மம் பன்மா ஹெஸ்வர ரட்சை.

எண்–12

இடம் : அம்மன் கோயில் கருவறை வடக்குச்சுவர் மடிப்பில் உள்ளது.
அரசன் : குலோத்துங்கன் (யா4 தைமாதம்) கி.பி.1153–54
செய்தி : அவிநாசி ஆளுடையார் அமுதுபடி, சாத்துப்படி, திருப்பணிக்கு வடபரிசாரநாட்டு ஆலத்தூரான நிலைமை அழகிய சோழநல்லூர் வருவாய்களையும், நான்கெல்லைக் குட்பட்ட இவ்வூரிலுள்ள நன்செய் புன்செய் மற்றுமுள்ள பொருள்களையும் குலோத்துங்க சோழன் தாரை வார்த்துக் கொடுத்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கொனெரின்
2. மை கொண்டான் குலொத்துங்க சொழதெவ
3. னென் நமக்குச் செல்லா நின்ற யாண்டு நாலாவது தைமாதம்
4. வடபரிசார நாட்டு உடையார் அவினாசி ஆளுடைய நாயனாற்கு நாம்
5. குடுத்த ஊராவது இந்நாட்டு ஆலத்தூரான நிலைமை அழகிய சொ
6. ழநல்லூர் இன்நாயனாற்கு நாம்குடுக்கையில் இ

7. வூரால் வரும் நத்தவரி மன்றுபாடு தெண்டக்குற்றம்
8. மற்றும் எப்பெற்பட்ட இறைபுரவு சிற்றாயம் உள்ள
9. துஇன் நாயனாற்கு அமுதுபடி சாத்துப்படி திருப்ப
10. ணிக்குக் குடுக்கையில் இ(வ்)வூற்கு எல்லையாவது(கீ)
11. ழ் பாற்கெல்லை கீளாநாலிக்கு மெற்கும் மெல்
12. ற்கெல்லை முழ்கு சுனைப்பாழிப் பள்ளத்துக்குக் கிழக்கு தென்(பா)
13. ற்கெல்லை வளஞ்சியன் பள்ளத்துக்கு வடக்கும் வடபாற்(கெல்லை)
14. கொழிப்பாழி ஒழுகறை ஒருகல்லுக்குத் தெற்கும் இன்னா(ன்கெ)
15. ல்லைக்குட்பட்ட நன்செய் புன்செய் மெனொக்கியமரம் கீழ்
16. நொக்கிய கிணறு தட்டங் கொற்குத் தொழி யாமல் இன் நாயனாற்கு
17. (த)ாரை வா(ர்)ர்த்துக் குடுத்தென் இப்படி
18. .... எநன் தனாப்பெற
19. .... யாண்டு நாலாவது நாள் 184 இப்படிக்கு..........

எண்–13

இடம் : பள்ளியறையில் – கிழக்குச்சுவரில் உள்ளது
அரசன் : வீரவல்லாளன் (வெகுதான்ய வருஷம் மார்கழி)
செய்தி : அவிநாசி சிவப்பிராமணரில் நாற்பத்தெண்ணாயிரச் சக்கரவர்த்தியும், சீயாழிமுருகனான அவிமுக்த நாயக நம்பி உள்ளிட்டாரும் அவிநாசி பண்டிதன் உள்ளிட்டாரும் பெம்ம செட்டியிடம் பெற்றுக் கொண்ட பணம் **360**க்கும் இக்கோயிலில் மூன்று நந்தாவிளக்கு எரித்து வருவதாக இசைந்து கையொப்பமிட்டுள்ளனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தெவர் ப்ருத்விராஜ்யம் பண்
2. ணிய ருளா நின்ற வெகுதான்ய ஸம்வத் ஸரத்துமார்க
3. ழிய் முதல் உடையார் அவநாசி ஆளுடைய நாயனார் கொ
4. யில் காணி உடைய சிவபிராமணரில் காசிப கோத்திரத்து தாந்தாரைக் காப்பான் குடுவகம்பன் நாற்பத் தெ
5. ண்ணாயிரச் சக்கரவர்த்தியும் இக்கொத்திரத்துசியாழி முருகன் அவிமுத்த நாயக
6. நம்பி உள் இட்டாரும் காப்பியகோத்திரத்து அவினாசி அவிமுத்தன் ஆனஅவிநாசி யாண்டான் உள்ளிட்டாரும்இ
7. ம் முவரொம் பெருமா காலால்விண்ட (செமயார்)

செட்டியார் மகன் ெ(பம்ம)செட்டி
8. யார்க்கு நாங்கள் கல்வெட்டிக் குடுத்தபடியாவது உடையார் அவிநாசி ஆ
9. ளுடைய நாயனாருக்கு இவர் வைத்த நன்தா விளக்கு மூன்றுக்கு இறைநாளில்
10. நாங்கள் பற்றிக் கொண்ட பணம் 360 இப்பண முன்நூற்றறு பதுக்கும் இத்திரி
11. நன்தாவிளக்கு மூன்றும் எங்கள் மக்கள் மக்கள் குடங்கொண்டு கொயில் புகுவான்
12. இந்தவிளக்கு மூன்றும் சந்திராதித்தவரை செலித்தி பொதக் கடவொம்மாக கல்வெட்டி
13. டிக் குடுத்தொம் பெம்ம செட்டியார்க்கு நாற்பத் தெண்ணாயர சக்கரவர்த்தியும் சியா
14. ழி முருகநான அவிமுத்த நாயக நம்பி உள்இட்டாரும் அவிநாசி பண்டிதந் உள்இட்
15. டாரும் இவனைவொம் இப்படிக்கு நாற்பத்தெண் ணாயிரச் சக்கரவர்த்தி எழுத்து
16. இப்படிக்கு சியாழிமுருகநான அவிமுத்த நாயக நம்பி உள் இட்டார் எழுத்து
17. இப்படிக்கு அவிநாசி அவிமுத்தநான அவிநாசி பண்டி(த)ர் எழுத்து
18. பன்மாஹெஸ்வர ரட்சை.

எண்–14

இடம் : பள்ளியறையில் கிழக்குச்சுவரில் உள்ளது
அரசன் : வீரராசேந்திரன் (யா.42) கி.பி.1249
செய்தி : வீரசோழவளநாட்டு வயிரம்பள்ளி உத்தம சோழீஸ்வரர் கோயிற் காணியுடைய சைவ புரந்தரச் சக்கரவர்த்தி அவிநாசி ஆளுடையார் கோயிலில் சந்தியாதீபமொன்று எரிக்க பழஞ்சலாகை அச்சொன்று முதலாக வைத்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராஜெந்திர தெவற்கு யாண்டு42வது விரசோழ
2. வளநாட்டு வயிரம்பள்ளியான உத்தமசொழச் சதுர்வெதிமங்க
3. லத்து உத்தம சொழி ஸ்வரமுடையார் கொயிற் காணியுடைய
4. சிவபிராமணந் சாலங்காய கொத்திரத்துஉடையான் முதலியா
5. ன சைவ புரந்தரச் சக்கரவர்த்தியெந் அவிநாசியா ளுடைய(யா)
6. ற்கு னாந் வைத்த சந்தியாதிபம் ஒன்றுக்கு ஒடுக்கின

பழஞ்சலாகை
7. அச்சு ஒன்று துகிலுடையங் கொண்டு சந்திராதித்தவ
8. ரை செல்வதாக இதுபன்மாஹெ(ஸ்) வரரட்சை.

எண்–15

இடம் : பெருங்கருணாம்பிகை கோயில் கருவறை – அர்த்தமண்டபம் குமுதவரி
அரசன் : வீரபாண்டியன்
செய்தி : அவிநாசி கோயிற் காணியுடைய கொல்லன், தச்சன், தட்டான் ஆகியோருக்கு உரிமை வழங்கிய சண்டேஸ்வரர் ஆணை.

கல்வெட்டு

1. சுபமஸ்து சண்டேஸ்வரன் ஓலைசாகரஞ்சூழ் வையகத்து கண்டீஸ்வரன் கருமமாராய்க – பண்டே அறஞ்செய்தான் செய்தானறங் காத்தான் பாதம் திறம்பாமல் சென்னிமேல் வைத்து. சண்டெஸ்வரன் ஆதேசம் நம் உடையார் அவிநாசி ஆளுடைய நாயனார்......... நப்பதியில் காணி உடைய கொல்லன் தச்ச(ன்) தட்டானுக்கு
2. நம் ஓலை குடுத்தபடியாவது இவர்கள் நன்மை த்திமைஆக சங்கும் பெரிகையும் புகுந்து கொட்டி சங்கு ஊதக் கடவதாகவும் இவர்கள் மக்கள் மக்கள் சந்திராதித்தவரைக்(கு)ம் இச்சங்கும் பெரிகையும் குடுத்தோம் இது செம்பிலும் சிலையிலும் வெட்டிக்கொள்க.

எண்–16

இடம் : பெருங்கருணாம்பிகை கோயில் முன்மண்டப வடக்கு பீடத்தில் உள்ள கல்வெட்டு
அரசன் : கோனேரின்மை கொண்டான் – வீரராசேந்திரன் (யா.40 நாள் 301) கி.பி.1247–48
செய்தி : இக்கோயில் சிவபிராமணர்கள் கோயில் உபையங்களைச் (திருவிளக்கெரிப்பது முதலியன) செலுத்தாததனாலும் ஸ்ரீபண்டாரத்து கெட்டுப் போன அணிகலன்களைத் திருப்பித் தரமாட்டாமையாலும் ஸ்ரீபண்டாரத்தில் சிறிதாக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாமையாலும் அவர்களுடைய சிவப்பிராமணக் காணியை சண்டேசுரப் பெருவிலையாக அறவிலையாக எழுதிக் கொடுத்தனர். ஏலம் கூறிப் பெருவிலைக்கு விற்கப்படும் முறை இக்கல்வெட்டால் அறியப்படுகின்றது. இக்காணியைப் பெருவிலைக்கு எடுத்துக்கொண்ட வேறு ஒருசிவப் பிராமணர் இக்காணிக்கு உரிமையுடையவரானார்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவர்த்தி கொநெரிந்மை கொண்டாந் ஆளுடையார் அவிநாசி ஆளுடையார் கொயில் தெவகந்மிகளுக்கு நம் ஓலை குடுத்தபடியாவது இக்கொயிற் காணியுடைய சிவப்பிராமமணந் காசிவ கொத்திரத்து அவிநாசி அவிநாசியாந்சீகாழியாநும் அ
2. விநாசி சாந்தாரைக் காபாநும் இவர்கள் பாட்ட மாரும் தவப்பநும் இவர்கள் தாங்களும் இக்கொயிலில் உபையம் உள்ளிட்டவை
செலுத்தமாட்டாமையாலும் பண்டாரத்துக் கெட்ட திருவாபரணங்களில் பொந்தும் அச்சும் இறுக்க மாட்டாமை யாலும் பிந்பு இவர்கள் இந்நா.
3. யநார் பண்டாரத்திலெ சிறுது அச்சு வாங்குகையாலும் இவையிற்(றா)ல் வந்த முதல் இவர்கள் குடுக்க மாட்டாமை தண்டெ சுரப் பெருவிலையாக இவர்கள் காணியுள்ளது. அறவிலையாக எழுதி குடுத்தமையில் இவர்கள் இப்படி செய்கையால் காணியற விட்டமையில் இக்கொயிலுக்குக் கா
4. ணியாளரை வெறெயிட்டுக் கொண்டு காணியாளரை வெறெயிட்டுக் கொ(ண்ட) மைக்கு இ(ப்படி) செம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் கொள்வாராக நம் ஓலை குடுத்தொம் இவை எல்லாம் வல்ல சொழ முவெந்த வெளாநெழுத்து யாண்டு 40வது நாள் 301 இவை விசையசிங்க
5. தெவந் எழுத்து இவை தியாக விநொத தெவந் எழுத்து இவை காடுவெட்டி எழுத்து இவை வாண ....எழுத்து இவை விலாடசிங்க தெவந் எழுத்து.

எண் – 17

இடம் : கருணாம்பிகை கோயில் மகா மண்டப வடக்குச் சுவர்.
அரசன் : வீரபாண்டியன் (யா. 19, ஐப்பசி) கி.பி. 1284.
செய்தி : மலைமண்டலத்து வாலிசேரி (கேரள நாட்டுத் தலைச்சேரி ?) செவ்வைக் கோட்டு இராமன் சங்கரன் அவிநாசி ஆளுடையாற்கு திருநந்தாவிளக்கெரிக்க நூறு பணத்தை ஸ்ரீ பண்டாரத்தில் செலுத்தினான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரபாண்டிய தெவர்க்கு யாண்டு பத்தொன்பது அற்பசி மாதம் மலை மண்டலத்

2. து வாலி செரி யிலிருக்கும் செவ வெரக் கொட்டு இராமன் சங்கர னென் உடையார் அவிநாசியா
3. ளுடைய நாயநாயனாற்கு நான் வைத்த திருநந்தா விளக்கு ஒன்றுக்கு ஸ்ரீ பண்டாரத்தில் ஒடுக்கி
4. ன பணம் நூறு இப்பணம் நூறும்ஸ்ரீ பண்டாரத்திலெ கை கொண்டு சந்திராதித்ய வரையா
5. க இந்நாயனார் திருமுன்பெ எரித்துப் பொதுவதாக இது பன்மாகெஸ் வர ரட்சை.

எண்–18

இடம் : அவிநாசி லிங்கேஸ்வரர் கோயில் முன்மண்டபம் (கொடிக்கம்ப மண்டபம்) தூணில் உள்ளது.

அரசன் : இல்லை – கலியுகம் 4749 – கி. பி. 1648

செய்தி : பெரிய காழியப்ப கவுண்டரும் அவர் சகோதரர் சின்னக் காழியப்ப கவுண்டரும் இந்த ஒட்டுக்கால் மண்டபத்தைக் கட்டிவைத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ கலியுக சகாத்தம் 2. 4749 க்கு
3. மெல் செல்லானி
4. ன்றசித்தார்த்ததி
5. சித்திரை – மீ 3 (தியதி)
6. நாலூர்பற்று 7. நாட்டுகவையம்
8. புத்தூரில் இருக் 9. கு ம் வெள்ளாளர் பி
10. ள்ளந்தைக் குலத் 11. தில் பெரிய காழிய
12. ப்ப கவுண்டர் அவர் 13. கள் சின்னக் காழிய
14. ப்ப கவுண்டர் அவர் 15. கள் உபையம் அன
16. ஒட்டுக்கால் மண்ட 17. பம் கட்டி முடித்த
18. ஏர் அவிஞசிலி 19. ங்கர் லட்சிப்பார்.

எண்–19

இடம் : நுழைவாயிலில் விநாயகர் கோயில் மண்டபத்தூண்

அரசன் : சுந்திரபாண்டியன் (யா. 27)

செய்தி : திருக்கனப்பேற்றில் (காளையார் கோயில்) அதளையூர் நாடாழ்வான் சந்தியா தீபத்துக்குப் பணம் கொடுத்தது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ சுன்திர பாண்டிய தெவற்க்கு யாண்டு 27-வது பாண்டி மண்
2. டலத்து திருக்கானப் பெற்றில் காளைய்(ப்) பெருமாளான அதளையூர் நாடாழ்வா

3. னென் அவிஞசி ஆள் உடையாற்க்குச் சந்தியா தீபம் திருவிளக் கொன்றுக்கு ஒடுக்கின ப

4. ணம் உ............ம் சந்தியா........தில் விளக்கு ஒன்று (எரி)விதாக இ.........

எண்–20

இடம் : கருணாம்பிகை கோயில் மகா மண்டப தெற்குச் சுவர்.

அரசன் : குலோத்துங்கன் (யா. 11) கி.பி. 1160

செய்தி : வடபரிசார நாட்டு வெள்ளானூரார் பெருங்கணாலயச் செல்வியார்க்கு குடிக்காணம் குறுணி நானாழி கம்பு அளந்தது பற்றியது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ குலோத்துங்க சொழ தெவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லி

2. யாண்டு பதினொன்றாவதுக்கு எதிராவது வட பரிசாரநாட்டு வெள்ளானூரொம் ஆளுடையார் அவிநாசி யாளுடையார்

3. திருக்காமகொட்டத்து நாச்சியார் பெருங்கருணைச் செல்வியார்க்கு நாங்கள் அமைஞ்சு குடுத்தபடியாவது ஒருகுடிக்காணம் குறுணி

4. நானாழி கண்பு ஆண்டு வரை தொறும் குடுத்து வருவொமாகவும் இது சந்திராஆதித்தவரை ஆண்டார் மஹா தெவாண்டார் செய்ய...

(அடுத்த வரி தரையில் புதைந்துள்ளது)

எண்–21

இடம் : பெருங்கருணாம்பிகை கோயில் மகாமண்டப வடக்குச் சுவர்

அரசன் : வீரபாண்டியன், கி.பி. 265 – 1280.

செய்தி : குண்டூரான் சந்தி அமுதுபடிப் பிராசாதமான சோற்றை மாகேஸ்வரர்களுக்கு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சண்டெஸ்வரன் ஓலைச் சாகரஞ்சூழ் வையகத்து கண்டீஸ்வரன் கரும மாராய்க-பண் டெ அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம் திறம்பாமல் சென்னிமெல் வைத்து

2. ஆதெசம் நம்பக்தன் குண்டூர் நாயனுக்கு நம் ஓலை குடுத்த படியாவது உடையார் அவிஞசி ஆளுடைய நாயனுற்கு விரொதி சம்வத்சரத்து பூர்வபட்சத்து

3. முலத்துநாள் குண்டூரோன் சந்தி என்று சிறுகாலைச் சந்தி இடையபத்தில் தான்கட்டின ஸந்தியில் அமுது செய்தருளின பிராசதத்தினல் சொறு பதக்குக்குப் பெற்று பொ...மகனுக்குத் திருமுன் ஒடு

4. இருநாழி உரி கடவ(தாக) பன்மாஹெஸ் வரர் பெர் எழுக்குச் சொறு அ....மாஹெஸ்வரரர் பெர்மூன்றுக்கு பெர் ஒன்றுக்கு சொறு நாழி உரிஆகநா.....ஆகச் சொறு 2 பதக்கும் தவ

5. ....ச்சிந்திக்கு ஆண்டு ஒன்றுக்கு நெல்லு நூற்று ஐம்பத்திரு கலனெக ....எந்து பொதக் கடவார் களாகவும் இப்படி செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்ளவும்

6. இதற்கு சில(வு) இரண்டுப்படி அரிசி ப...கை யிலெ சந்திராதித்த வரையும் அ..........மாதவாண் டான் எழுத்து இப்படிக்கு ஆளுடையான் எழுத்து ....ஸ்ரீ கரணத்தான் சம்பந்தன் எழுத்து.......

7. ன தட்டுருவவிட்ட சுந்தரபாண்டிய சக்கர வத்தி எழுத்து இப்படிக்கு தெவெந்திரப்பன் எழுத்து.........

8. இப்படிக்கு ஆளுடை நாயன் எழுத்து இப்படிக்கு கூத்தப் பெருமாள் எழுத்து......

9. இவை ஆடிமாதம் இருபத்தொன்பதாம் தியதி முதல் சந்திராதித்யவரை செலவரை

(ஒவ்வொரு அடியின் இறுதி பள்ளியறைச் சுவரில் மறைந்துள்ளது)

எண்–22

இடம் : அவிநாசி சங்கமன்குளத்தின் கிழக்கில் புஞ்சைக்காட்டில் குத்துக்கல்லில் உள்ள கல்வெட்டு.

அரசன் : அச்சுதராயர் (சகம் 1460) கி.பி.1538

செய்தி : இலிங்கண உடையார் அவிநாசியில் இருந்த பாலராச குளத்தின் தென்கிழக்கில், அவிநாசி லிங்கர் கோயிலின் ஈசான மூலையில் சாலிங்க சமுத்திரம் என்ற பெயரில் ஒருகுளம் கட்டவும் இக்குளநீர் பாயும் வயலின் விளைச்சலில் மேல்வாரத்தில் பாதியை அவிநாசி லிங்கர் ஸ்ரீ பண்டாரத்துக்கும் பாதியை அரசுக்கும் அளக்கும்படி பாலராசதேவர் ஆணையிட்டு வெட்டிய கல்வெட்டு.

கல்வெட்டு

1. ஸ்ரீமன் மகாமண்ட
2. லெசுரன் அரியவிபாடன் பா
3. ஷைக்கு தப்புவராய கண்
4. டன் மூவர்மாகண்டன் க
5. ண்டநாடு கொண்டு கொண்

6. டநாடு குடாதான் பூறுவ ெ
7. தக்ஷிண உத்திரபக்கம் சதுச
8. முத்திராதிபதி ஈள முதலாக எ
9. ம்மண்டலமுங் கொண்டரு
10. ளிய இராதிராசன் றாச பரமெ
11. ஸ்வரன் நரவாகன சக்கிரவ
12. த்தி நரலொக சூரியன் பதிநெ
13. ட்டு கொட்டத்து வன்னியர் க
14. ண்டன் துலுக்கற் தளவிபாடன்
15. துலுக்கர் மொகம் தவிழ்த்தான்
16. இராயர் மகாராயர் கிருஷ்ணராயர் இ
17. ம்முடி அச்சுத தெவ மகாராயர்
18. பிறுத்வி இராச்சியம் பண்ணிஅ
19. ருளாநின்ற சகாத்தம் 1460
20. க்குமெல் செல்லாநின்ற ன
21. ந்தன வருஷம் சித்திரை மாதம்
22. முதல் இறாயசத்துக்கு கொண்டமா
23. தய்யன் குமாரன் திம்மப்ப ணாயக்
24. கருக்கு தெக்ஷிண புசமான பாலறா
25. ச உடையாருக்கு செல்லாநின்ற
26. கொங்குமண்டலத்து ஸ்ரீமன்மகா
27. தெவ தெவொத்தமன் ஸ்ரீ அவிந
28. ாசிலிங்கன் திருப்படிக்கு பா
29. லதெவ மகாராசாவின் ஊளியத்து
30. பகவரான ராயசத்துக்கும் தானீகஅவி
31. நாசியப்பன் உள்ளிட்டாரும்
32. ஸ்ரீமது அனெக பிரும்மாண்ட
33. பாண்ட கெற்ப கெற்பிகிறுதி
34. வித மதுசூதன திருகாதீஸ்வர
35. ற் அனெக தெவமகுட மணிகிற திதபகபாபெ
36. ....சிவல்லவாக அவ................
37. ....ணகும்ப்ப தெவன்..................
38. ....விம......................

(எழுத்துக்கள் சிதைந்துள்ளன).

பக்கம்-2

புடைச்சிற்பங்கள் சந்திரன் - சிவலிங்கம் பிரபையுடன் - நந்தி மேலேகுடை - சூரியன்

39. இரெசா புரத இலிங்கண உஎ
40. டயார் தெவ(ர்)கு இத்தடாக நின்ன
41. மய சாதினம் குடுத்தபடியாவது
42. இற்றைநாள் அவினாசி கிராம
43. த்துக்கு வடக்கு முன்னாள்
44. பளையகுளம் பாலருச உஎ

45. டயார் பொன்னிட ஒத்தட்டுவி
46. த்து தம்மிட பெரால் பாலசமுத்தி
47. ரம் என்று கட்டின அந்த பால
48. சமுத்திரத்துக்கு தென்கிளை மூ
49. லையில் அவினாசி லிங்கன் செ
50. காயிலுக்கு ஈசான மூலையில்
51. இலிங்கண உடையா தெவர் த
52. ம்மிட பெரால் தம்மிட தன்மம
53. ாக சாலிங்க சமுத்திரம் எனறுஒ
54. ரு குளம் கட்டக் கட வாராகவும்
55. கட்டுமிடத்தில் முட்டின பொன்
56. தம்மிட கையில் இட்டுக்கட்ட
57 கடவாராகவும் அந்த சாலிங்க
58. சமுத்திரத்தின் கிழெ நீர்பாச்சல்நி
59. லம் உள்ளதில் பயிர்நஞ்செய் நெ
60. ல் விளைச்சல் கமுகு தென்னை
61. மரம் வெற்றிலை வாழை மற்றும்
62. உண்டான நீர்பயிர் சகல சுவாமி
63. யங்களில் உண்டான சகல ஆத
64. ாயத்தில் அவினாசி லிங்கன் கொ
65. யில் பண்டாரத்துக்கு பாதியும்
66. இலிங்கண உடையார் சிங்காத
67. னத்துக்கு பாதியுமாக சந்திராதி
68. த்திய வரைக்கு செல்லக்கட
69. வதாகவும் இந்த சாதனம் செம்
70. பிலும் சிலையிலும் வெட்டுவித்து
71. க் கொள்ளக்கட வாராகவும் குளத்து
72. பாச மாறுத்தி கிரையம் குளத்துக்குஇ
73. டக் கடவாராகவும் இப்படி சம்மதித்து
74. இந்ததடாக நின்றைய சாதனம்குடு
75. த்தொம் பாலையதெவ மகாராசா
76. வின் உள்ளம்படி எழுத்து.

எண்–23

இடம் : கருணாம்பிகை கோயில் மகாமண்டப வடக்குச்சுவர்

அரசன் : இல்லை, யா. கி. பி. 1289.

செய்தி : அவிநாசி ஆளுடைய நாயனார் கோயிலில் சிறுகாலைச் சந்திக்குப்பின் குண்டூர் நாயன் ஏற்படுத்திய இடைச்சந்தியில் அமுதுபடிக்கு நெல்வழங்கி அச்சோற்றை மாஹேஸ்வரார் கட்கு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

கல்வெட்டு

1. சண்டேஸ்வரன் ஓலை சாகரஞ்சூழ்வையகத்துக் கண்டூஸ்வரன் கருமமாராய்க- பண்டே அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம் திறம்பாமல் சென்னிமேல் வைத்து ஆதிசண்டெசுரன்
2. ஆதெசம் நம்பக்தன் குண்டூர்நாயனுக்கு நம்ஓலை குடுத் தபடியாவது உடையார் அவிநாசி ஆளுடைய நாயனாற்கு விரொதி சம்வத்சரத்து பூர்வபக்ஷித்து கற்கடகநாயற்று
3. மூலநாள் குண்டூரான் சந்தி என்று சிறுகாலைச் சந்தி இடையபத்தில்தான் கட்டின ஸந்தியில் அமுதுசெய் தருளின பிரசாதத்தினால் சொறுபதக்குக்குப் பெற்று பொ.............ம கனக்குத் திருமுன் ஓடுக்குச்சொறு முன்னாழிய...........
4. இருநாழிஉரி கடவ(தாக) பன்மாஹெஸ்வரர்பேர் ஏழுக்குச் சொறுஅ................மாஹெஸ்வராபேர் மூன்றுக்கு பெர் ஒன்றுக்குச் சொறு நாழிஉரிஆக நா....... ஆகச் சொறு - உபதக்கும்தவ
5. ....ச்சந்திக்கு ஆண்டு ஒன்றுக்கு நெல்லுநூற்று ஐம்பத்திரு கலனெகு(றுணி)அளந்து பொதக்கட வார்களாகவும் இப்படி செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்ளவும்
6. இதற்கு சில(வு) இரண்டுப்படி அரிசப..........கையிலெ சந்திராதித்தவரையும்அ மாதவாண்டான் எழுத்து இப்படிக்கு ஆளுடையான் எழுத்து ஆதி சண்டெஸ்வரன் ஸ்ரீகரணத்தான் சம்பந்தன் எழுத்து.
7. ன தட்டுருவ விட்ட சுந்தரபாண்டிய சக்கரவத்தி எழுத்து. இப்படிக்கு தெவெந்திரப்பன் எழுத்து.............
8. இப்படிக்கு ஆளுடையநாயன் எழுத்து இப்படிக்கு கூத்தப்பெருமான் எழுத்து............
9. இவை ஆடிமாதம் இருபத்தொன்பதாம் தியதிமுதல் சந்திராதித்ய வரை செல்வரை...........

எண்–24

இடம் : மாணிக்கவாசகர் செப்புத்திருமேனியின் பீடத்தில் உள்ள தேவநாகரி எழுத்தில் கன்னடமொழியில் உள்ள சாசனம்.

பொருள்: மகாராயரின் திருமகள் புவனேசுவரிதேவியின் திருமணம் இனிது நடந்தேறியதை முன்னிட்டு அவிநாசி தேவர் (அவிநாசிலிங்கேசுவரர்) பேரருள் பாலிக்க வேண்டி மகாராணி கோதாவரிதேவியார் ஒரு சிறப்பு விருந்து நடத்தி அதன் அடையாளமாக இச்சிலை செய்து வழங்கினார்.

பழங்கரை

எண் – 25

இடம் : முன்தோன்றீஸ்வரமுடையார் கோயில் கருவறை வடக்குச்சுவர்
அரசன் : வீர ராசேந்திரன் (யா. 7) கி.பி. 1214
செய்தி : பழங்கராயநல்லூர் முன்தோன்றீச்சுரமுடையார்க்கு வாணிக மடிகையார் நாற்பத்தெட்டுக் கலம் நெல் அளக்க இசைந்தனர். வீர நாராயணநல்லூர் குறிச்சியூரவர் இந்நாயனார்க்கு அமுது படிக்கு நெல் அளக்க இசைவு தெரிவித்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராசெந்திர தெவற்கு யாண்டு ஏழாவது அணைச்சுப் பூண்டியில் ....
2. வாணிக ம(டி)கைய ரொம் எங்களுக்கு குறுச்சியார் குடுத்த......... .... யார் அளக்க கடவ நெல் காலால் நாற்பத்தெ(ண்)
3. கலமும் எங்கள் தொந்றியாண் டாற்கு நீர் வாத்துக் குடுத்தொம்........... யா .... ண்டாற்கு நீர் வார்த்துக் குடுத்தொம்
4. (இவ)ர்கள் நீர் வாத்து குடுத்தமையால் இந்நெல் ஆண்டுவரை தொறும் நாற்பத்
5. தெண் கலமும் சந்திராத்த வரை அளந்து வருவொமாக செம்பிலும்சி
6. லையிலும் வெட்டிக் கொள்ளப பெ(று) வா(ர்) களாகப் பிடிபாடு குடுத்தொ(ம்)
7. விரநாராயண நல்லூர் குறிச்சி யூரொம் ஆளு டையார்முந் தொந்றீச்சுரமு
8. டையாற்கு இந்நெல் .... கடவாக விட்டு குடுப் பொமாகவும் இ துடைப்படி சொறும் கடைக்
9. ணார் மாற்றும் கிடக்காக கட் டி லும் விட்டு குடுப்பொமாகவும் இது மாற்று வான் வ
10. ழி ஏழெச்சமறுவாந் இது பந்மாஹெஸ் வரர கெஷ.

எண் – 26

இடம் : கருவறை மேற்குச்சுவர்
அரசன் : வீரராசேந்திரன் (யா. 25) கி.பி. 1232
செய்தி : பழங்கராய நல்லூரில் இருக்கும் கைக்கோளரில் காளி அவிநாசி தோன்றீச்சுரமுடையார் எழுந்தருளும் போது சிறப்பமுது செய்ய நெல் தன்மமாகச் செலுத்த இசைந்துள்ளார்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரரா செந்திர தெவற்கு
2. த் திருநல்லியாண்டு இருபத்தஞ்சாவது
3. .... பழங்கறா ய நல்லூார் ஊரும் ஊரி
4. விருக்கும் கைக் கொளரில் காளி அவிநாசி
5. கந்பக பக்கிட பழஞ்சலாகை............
6. படியாவது எங்கள் நாயநார் தொன்றீசரமுடை(யார்)
7. (எழுந்தருளு) கைக்கு சிறப்பமுது செய்ய (யாண்)டு வரைதொறுங் இந்த
8. நெல் சந்திராதித்ய வரை பிடி பாடாகக் கொண்டு தந்மமாக செலுத்துவதாக
9. இது பன்மாஹெஸ் வரர ரட்சை.

எண்–27

இடம் : கருவறை மேற்குக் குமுதம்

அரசன் : கோனேரின்மை கொண்டான் வீர ராசேந்திரன் ? (யா.7)

செய்தி : இவ்வூர் முன்தோன்றீச்சுரமுடையார் கோயில் சோழ பட்டனுக்கு அர்ச்சனாபோகமாக வழங்கிய நிலத்தை அனுபவிக்கவும், விற்கவும், ஒற்றவும் தன்மதான ஸ்ரீதனத்துக்குரியதாகவும் இவ்வரசன் ஆணை ஒலை கொடுத்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ (கொனெரின்மை) கொண்டான் (வட பரிசார நாட்டில் .... உடையார் தொன்றியீச்சுர (முடையார் கொயில்) சொழபட்டன்
2. மெ.......... கெ க படியாவது யநிறரில் பிராமணன் ல மராக்க .... ர தன்மமாக பெ
3. று மெழுவன முளைப்பனவும் அர்ச்சநா பொகம் கம்பிடப்படிலிவர் (க்கு) எப் பெற்பட்டனவும் குடுத்தொம் இவர் மக்கள் மக்களுக்கு .... தொன்றி......
4. விலையொற்ற தர்மதான ஸிதநத்துக் குரித்தாவதாக(வும்) இப்படி செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள் (வார்களாக) யாண்டெழாவது நம் ஓலை குடுத்தொம் இது பன் மாஹெஸ்வரரட்சை.

எண்–28

இடம் : பழங்கரை முன்தோன்றீசுவரர் கோயில் முன்னுள்ள குத்துக்கல்

அரசன் : அச்சுதராயர் – கி.பி.1540

செய்தி : அச்சுதராயர் காரிய கர்த்தரான வரதப்பண்ண நாயக்கர் நிர்வாகத்தின்போது வடபரிசார நாட்டாரும் காரை ஊரும் (பழங்கரை) செய்த நிலதானம்(?) பற்றியது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ மதுமகா மண்
2. ட லெசுரன் அரியரராயவிபாடந்
3. பாஷைக்குத் தப்புவ ராயர்க
4. ண்டந் மூவராயர் கண்டந்
5. கண்ட நாடு கொண்டு கொண்
6. டநாடு குடாதாந் துலுக்கர்கள்விபா
7. டந் துலுக்கர் மொகந்தவிழ் ந்தாந்ர
8. ர சாதி ராசந் ராசபரமெசுரந் ஸ்ரீவீரராஜ
9. சத்ரதாயம் பிருத்விர
10. ஈஜ்யம் பண்ணி அருளாநி (ன்ற) கா
11. லத்து சகாந்த்தம் 1462
12. க்குமெல் செல்லா நின்ற பிலவ
13. வருஷம் அற்பசி மாதம் 15 தியதி ஸ்ரீ வி
14. ர அச்சுதராயர் காரியத்துக்கு
15. கடவதாந ஸ்ரீமது வரதப்
16. பண்ணர்கள் நாயக்கந்
17. தாமாந் கொங்கு ஈளுபுரத்து
18. பாறபத்தியம் ஸ்ரீமது தெமா
19. சயப்(ப)நும் சதணாயக (தண்ணாயக்கர்) கொட்டை
20. (டசீ)மை வடபரிசார நாட்டு
21. நாட்டவரும் காரை
22. ஊரும்.......... தந்மம்
23. பண்ணிக் குடுத்தப.........
(இடையில் சில வரிகள் சிதைந்துள்ளன)
24. எற் பெற் பட்டனவாக சுவாமி
25. யமும்.......... அனுபவித்து
26. க் கொண்டு வரக் கடவரா
27. கவும் .... றதான மானிபம் பூ
28. றுவ மற்றும் சந்திரா
29. தித்தவரை நடத்தி வர கடவதாகவும்.

கரியாக் கவுண்டனூர்

எண்-29

இடம் : வயலில் உள்ள கல்லில் வெட்டப்பட்டுள்ளது.
அரசன் : சுந்தரபாண்டியன் (யா.4) கி.பி.1284
செய்தி : மன்னியூர் நாயனாருக்கு வீரபாண்டிய நல்லூர் தேவதானமாக வழங்கப்பட்டது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்
2. டிய தெவற்கு யாண்டு - 4
3. வது குழிமங் கல மா
4. (ம)(ர) ந விரபாண் டிய நல்
5. லூர் மந்நியு ராளு
6. டைய நாயநார் தெவ
7. தாநம் இது பந்மா
8. ஹெஸ் வரர ட்சை.

கருவலூர் (வீரராசேந்திர விண்ணகரம்)

எண் – 30

இடம் : மகாமண்டப தென்குமுதம்.

அரசன் : கோனேரின்மை கொண்டான் வீர ராசேந்திரன் (யா.20) கி.பி.1227

செய்தி : வீரராசேந்திரன் இப்பெருமாள் கோயில் ஸ்ரீகாரியஞ் செய்யும் அதிகாரிகளுக்கு எழுதிக் கொடுக்கும் உத்தரவு ஓலை. பெருமாள் அமுதுபடிக்கும் பல்வேறு கோயில் நிகழ்வுகளுக்கும் விழாக்களுக்கும் வேண்டிய செலவினத்தை ஈடுகட்ட புரோசக் குளமும் அக்குள நீர்பாயும் இறையிலி நிலங்களையும் தானமாக வழங்கினான்.

கல்வெட்டு

1. ஸ்ரீ ராஜ கொனெரி மென் கொண்டான் வடபரிசார நாட்டுப் பழங்கருவலூற் கெசரில் வீரராசெந்திர விண்ணகரெம் பெருமாள் கோயிலில் ஸ்ரீகாரிய
2. ஞ் செய்வார்களுக்கு நம் மொலை குடுத்த பரிசாவது இவ்வெம் பெருமானுக்கு அமுதுபடிக்கும் பலபடி நிமந்தங்களுக்கும் திரு விளக்குக்கும்
3. குடுத்த குளமாவது கருவலூர் புரொசக் குளம் குடுத்தொம் இக்குளம் தாங்களெ அடைத்து இக் குளத்தால் விளைந்த நிலம் இவ்வெம்பெ
4. பருமானுக்குத் திருவிடையாட்டமாக இறையிலி முற்றூட்டும் செல்லுவதாகவும் இப்படி செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்வார்களாக நமக்கு இரு
5. பதாவது முதல் நம் மொலை குடுத்தொம் இவை சொழகுல மாணிக்க மூவெந்த வெளான் எழுத்து இவை யிலாடத்தரையன் எழுத்து இவை கொதல ராயன் எழுத்து இவை வில்லவராயன் எழுத்து.

கஞ்சப் பள்ளி

எண்–31

இடம் : தேனீஸ்வரர் கோயில் மதிலுக்குத் தென்புறம் உள்ள குத்துக்கல்
அரசன் : இல்லை
செய்தி : ஸ்ரீமத் ராமப்ப அய்யர் அவர்கள் கஞ்சப்பள்ளி தேனீஸ்வரர் சிவகாமி அம்மனுக்கு அபிசேக நெய்வேத்தியத் திருவிளக்குத் திருப்பணிகளுக்காக நன்செய் புன்செய் நிலங்களும் பணமும், தென்னை, இலுப்பை மரங்களும் உள்ளூர் வரிகளும் தானமாக வழங்கினார்.

கல்வெட்டு

1. தாது வருஷம் வை
2. காசி மீஉ 23 - தேதி ஸ்ரீமது
3. ராமப்ப அய்யரவர்கள்
4. காரியத்துக்குக் கர்த்தரான
5. சிதம்பரநாதபிள்ளையவர்க்கு
6. சேர் முப் பிறதி வீட்டை பண்ணி
7. வித்த சுவாமி தேனீசுவரமுடையா
8. ர் சிவகாமி அம்மனுக்கு அவி
9. ஷேக நெய்வெத்தியம் திருவிழ
10. க்கு நடக்கிறதுக்கு புது குழம் நஞ்
11. சை நடுப்பற்றில் எருக்கிலைந் தாற்றி
12. கிழபுறம் விரை மிடா 2 பொதி மெல் புறம்
13. நிலம் விரை கூத்தையான் குழம் ந
14. ஞ்சை யிலுண்டான நிலமும் விட்டு
15. ஒருமா நிலத்துக்கு விலக்கு பணம் 3
16. முக்கை பணம் 3 முருகன் குழத்துக்கு வடமெ
17. தாற்றுக்காடு பணம் 4 சன்னதிக்கு எதிர்
18. நாலு பணத்தின் பலையும் வெள்ளை மா
19. ா ருமாதி தெ மெற்குச் சின்னமாமரமும்
20. இலுப்பை மர(ம்) உ. உள்ளூர் உழவாறு சுங்க(ம்)
21. இதுவெல்லாம் விட்டு நடத்தி வரவும். இப்ப(டி)
22. சன்னதி பரிபாலனமாக வழங்கப் பண்ணி
23. ன பேர் அறுபத்து மூவர் பெற்ற பேர்
24. பெறுவர் இதுக்கு விக்கினம் பண்
25. ணின பெர் கெங்கைக் கரையில்
26. காராம் பசுவையும் கவலைப் பசுவை
27. யும் மாதா பிதாவையும் புத்திர
28. னையும் கழுத்தறுத்துக் கொன்ற தொ
29. ஷத்திலே போகவும்.

சேவூர்

எண்–32

இடம் : திருக்கபாலீச்சுரமுடையார் கோயில் பிரகார மேற்குச் சுவரில் உள்ளது.

அரசன் : வீரபாண்டியன் – 15ஆம் ஆட்சியாண்டு கி.பி. 1268

செய்தி : பாண்டியமண்டலத்து முட்டநாட்டு மாத்தூர் வியாபாரி சொக்கன் பெருமாள் மகன் பெருங் கருணையாளன் சேவூர் திருக்கபாலீச்சுவரமுடையார் கோயிலில் சுப்பிரமணியரை எழுந்தருளுவித்துக் கோயிலும் கட்டி அமுது படி சந்தியாதீபம், பூசனைக்குரிய தூபதீபம் ஆகிய மரியாதைகளுக்காக வராகன் புள்ளிக் குளிகைப்பணம் முன்னூற்றிருபதும் ஸ்ரீபண்டாரத்தில் ஒடுக்கினான்.

கல்வெட்டு

1. *ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தெவற்கு யாண்டு யரு 15-வது பாண்டிமண்டலத்*
2. *து முட்டநாட்டில் மாத்தூர் வியாபாரிகளில் சொக்கன் பெருமாள் (ஆன பெ)*
3. *ருங்கருணையாளனென் செவூர் நாயினாற் திருக்கபாலீசுர முடையார் கொயிலி*
4. *ல் இளையபிள்ளையாரையும்யெழுந்தருளு வித்துக் கொயிலுஞ் சமைத்து நாளெ*
5. *என்றுக்கு அமுதுபடிபர கெசரி இருநாழி யரிசியும் நெயமுதுங் கறியமுது தயிர*
6. *முது இலையமுது அடைக்காயுட்பட இருநாழி நெல்லுந் தண்டு கூலியுஞ் சந்தி*
7. *யாதிபம் இரண்டு விளக்கும் எழரை நாழிகை எரிவதாகவும் துபதீபம்*
8. *திருவளதிக்காப்பு திருவாட்டக் காலத்தில் எடுப்பதாக ஒடுக்கின வராகன்*
9. *புள்ளிக்குளிகைப் பணம் முன்னூற்றிருபதும் கைக்கொண்டெ......*

எண்–33

இடம் : திருக்கபாலீச்சுரமுடையார் கோயில் பிரகார மேற்குச் சுவரில் உள்ளது.

அரசன் : வீரராசெந்திரன் – 5ஆம் ஆட்சியாண்டு கி.பி.1211.

செய்தி : பூலுவ ஊரவர் செய்த ஒருதானத்தைக் குறிப்பிடுவதாகலாம்

கல்வெட்டு

1 ஸ்வஸ்தஶ்ரீ வீரராஜெந்திர தெவற்க்கு
2. யாண்டு அஞ்சாவது வடபரிசாரநாட்
3. டிச் செவூரான செம்பியந் கிழாநடி நல்
4. லூரிலப் பூலூவ ஊரவரொம் உடைய
5. ஏர் தி(ரு)க்கபாலிசுரமுடையார் கொ(ல்)
6. யில் திருபுவன சுந்தரநாயிநாற்கு எ....................

எண்–34

இடம் : மேற்படி கோயில் முன்மண்டப வடக்குச் சுவர்.
அரசன் : கோனேரின்மை கொண்டான் –(வீரராசெந்திரசோழன்)
செய்தி : இவ்வரசன் வடபரிசாரநாட்டு அரைசூரானகுலதீபநல்லூரை கபாலீச்சுரமுடையார்க்குத் தேவதானமாக வழங்கினான். இவ்வூர் நொய்யலாற்றங்கரையில் வடக்கிலிருந்தது அவ்வூர்க்குரிய நஞ்சை, புஞ்சை வரிகள்இக்கோயிலுக்கு உரியனவாகின்றன.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஶ்ரீ கொனெரின்மை கொண்டான் ஆளுடையார்
2. திருக்கபாலிச்சுரமுடையார் தெவர் கன்மிகளுக்கு நம்
3 மொலை குடுத்த படியாவது வடபரிசாரநாட்டு
4 அரைசூரான குலதிபநல்லூரர் தெவதானமாக
5 நாம் குடுத்தமையில் இவ்வூற் கெல்லையாவது நொ
6 ய்யிற் கரைக்கு வடக்கும் கெணித் தாழ்வுக்குக் கிழக்க............

எண்–35

இடம் : திருக்கபாலீச்சுரமுடையார் கோயில்
அரசன் : இராசகேசரி குலோத்துங்க சோழன் (யா. 2) – கி.பி. 1151
செய்தி : யாதவரில் மதுராந்தகன் மும்முடிச்சோழன் கபாலீச்சுரமுடையாற்குச் சந்தியாதீபம் எரிக்க முதலாக வைத்த ஒருகழஞ்சு பொன்னை இக்கோயில் காசுவகோத்திர சிவப்பிராமணன் மழவன்பட்டன் மகன் சித்திரமெழி பட்டன் பெற்றுக் கொண்டு அதன் வட்டிக்குச் சந்தியாதீபம் எரித்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஶ்ரீ கொராஜகெசரிபந்ம ரான திரிபுவனச்சக்கர த்திகள் ஶ்ரீகொ லொ
2 த்துங்க சொழ தெவற்கு யாண்டு இரண் டாவது

யாதவரில் மது
3. ராந்தகன் மும்முடிசொழனென் ஆளுடை யார்
க்கபாலிச்சுரமுடை
4 யாற்கு நான் வைச்ச சந்தியா தி(ப)ம் மொந்றுக்கு
ஒடுக்கின பான் கழஞ்சுங் கொ
5 ண்டு இவ்விளக்கொந்று எரிப்பெனா கக்
கைக்கொண்டென் இக்கொயில் காணியு
6 டைய்யாரில்பி ராமணன் காசுவ கொத்திரத்து
மழவந்பட்டன் சித்திரமெழி
7 பட்டனெந்.............

எண் – 36

இடம் : அம்மன் கோயிலுக்குச் செல்லும் நிலைக் காலில் வழியில் உள்ளது.
அரசன் : அரசன் பெயர், காலம் குறிக்கப்பெறவில்லை.
செய்தி : சேவூரான செம்பியன் கிழானடி நல்லூரில் வாழும் தட்டாரில் சிறுக்கூத்தன் மாறனான மன்றுள் ஆடவான் செய்த தன்மம் இந்நிலைக்கல்.

கல்வெட்டு

1. செவூரான செ-
2. சம்பியன் கி-
3. ழாநடி நல்-
4. லூரில் தட்-
5. டாரில் சிறு
6. க் கூத்தன்
7. மாற னான
8 மன்றுளா-
9. டுவான் த-
10. ந்மம்

எண் – 37

இடம் :சிவன் கோயில் அர்த்தமண்டப கிழக்குச் சுவரில் உள்ளது.
அரசன் : வீரராசேந்திரன் (யா. 20) கி.பி.1227
செய்தி : இவ்வரசனின் பட்டத்தரசி வானவன் முக்கோற்கிழானடிகளின் பெண்டுகளில் அறையன் வல்லி என்பவள் கபாலீச்சுரமுடையாற்கு சந்தியாதீபமொன்று எரிக்க ஒருகழஞ்சு பொன் முதலாக வைத்தது.

கல்வெட்டு

1. ஸ்ரீ விரராஜெந்திர தெவற்கு இருபதாவது ஆளுடை
2. யார் திருக்கபாலிசுரமுடையார்க்கு நம்பிராட்டியார் வா-
3. னவன் முக்கொற்கிழானடிகளி பெண்டிகளில் அ-
4. றையன் வல்லியென் வைத்த சந்தியாதிப மொன்று-
5. க்கு ஒடுக்கின பொன் கழஞ்சு இப்பொன் கைக்கொ-

6. காண்டென் ஆழ்வான் திருநட்டனான சித..........
7. னென் இக்கொயிலில் குடங்கொ(ண்)டு கொயில் புகுவான்
8. செலுத்துவானுக்கு இது சந்திராதித்தவற் செல்வதாக இது
9. பன்மாஹெஸ்வ ரரகெஷ.

எண்–38

இடம் : சிவன் கோயில் மகாமண்டப ஜகதியில் உள்ளது.

அரசன் : கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியன் (யா. 27) கி.பி.1278

செய்தி : வடபரிசார நாட்டு வெள்ளாநாட்டார், பூலுவநாட்டார் என்ற இருசபையாரும் சேவூரான செம்பியன்கிழானடி நல்லூரைக் கபாலீஸ்வரருக்குத் தானமாக வழங்கினர். இவ்வூரால் வரும் பல்வேறு வருவாய்களும் இக்கோயிலுக்கு உரியனவாக்கினர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ கொற்சடபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்திரபாண்டிய தெவற்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற யாண்டு 27-வது வைகாசிமாதம்......... வடபரி சாரநாட்டு வெள்ளா நாட்டாரும் பூலுவநாட் டொமும் (வடபரிசார நாட்)டு செவூரான செம்பியன் கிழா
2. நடி நல்லூர் ஆளுடையார் திருக் கபாலீச் சுரமுடையநாயனார்க்கு நாங்கள் உதகம் பண்ணிக் குடுத்த ஊர் இன்னாட்டு நான் கெல்லைக் குட்பட்ட .... மெல் (நொக்கிய) மரம் கிநொக்கிய கிணறும் உதகம் பண்ணிக் குடுத்தொம் இவ்வூர் ஒட்டச்சு
3. முன்காட்சி மன்றுபாடு தெண்டக் குற்றம் இறை புரவு சிற்றாயம் சுமை சுங்கம் சாரிகை தறிஇறை தட்டார் பாட்டம் ஈழம் புன்செய் தெரி வெருது மற்றும் எப்பெயப் பட்டனவும் கொண்டு பெரியநாட்டா திருநாள் எழுந்த ருளுவிக்க கடவதான உதகம் பண்ணிக்
4. குடுத்தொம் இப்படிக்கு செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்ளப் பெறுவதாகவும் இப்படி சம்மதித்து இன்னாயனாற்கு இயவர் உதகம் பண்ணிக் குடுத்தொம் வெள்ள நாட்டொமும் பூலுவநாட்டொமும் இப்படிக்கு நாட்டார் பணிக்க நாட்டுக் கணக்கு அமலாதித்த
5. தெவன் எழுத்து இதுபன்மா ஹெஸ்வரர கெஷ.

எண்–39

இடம் : சிவன் கோயில் அறப்பெருஞ்செல்வியார் கோயில் வடக்குக் குமுதத்தில் உள்ளது.

அரசன் : கோனேரின்மை கொண்டான்

செய்தி : கோனேரின்மை கொண்டான் திருக்கபாலீச்சரமுடையார் கோயில் அறப்பெருஞ் செல்வியார்க்கு அமுதுபடி பூச்சுப்படிக்கும் முப்பத்திரண்டு அறம் வளர்க்கவும் உக்கிரம் என்னும் வீரசோழ நல்லூரை ஈடாக வழங்கினான். இவ்வூரின் நான்கெல்லைக்குட்பட்ட நஞ்சை புஞ்சை நிலங்களால் வரும் பல்வேறு வரிகளை.

கல்வெட்டு

1. *திரிபுவனச் சக்கரவர்த்தி கொனெரின்மை கொண்டான் செவூர் ஆளுடையார் திருக் கபாலீச்சரமுடையார் திருக்காம கொட்ட*
2. *நாச்சியார் அறப் பெ(ருஞ் செல்வியார்)க்கு நம்மொலை கு(டுத்தபடியாவது) இந்நாச்சியாற்கு அமுதுபடி பூச்சுப்படி(க்கு)*
3. *ம் வளற்கவும்..........உக்கிரமாந வீரசொ(ழநல்லூ) ரெற்றி இவூற் கெல்லை கிழக்கு கழிக்குவத*
4. *லைக்கு மெற்கு............ வழிக்கு வடக்கும் மெற்கெல்லை புகக்கெ.........ஏலிக்குக் கிழக்கும் வடக்கெல்லை உவளைமலை....... (தெ)ற்கும் இந்நான்கெ*
5. *கல்லைக்குட்பட்ட (நஞ்செய்பு)ந்செய்.........லுள்ள இறைபுரவு சிற்றாய மெலவை யுகவை மந்றுபாடு தெண்டக்குற்றஞ் சுமைசுங்கஞ்சாரிகை மற்று மெற்பெற்ப.*
6. *ட்ட(வு)ம் இந்நாச்சி(யார்க்கு) குடுத்தமையில் இவூற்கு நஞ்சாமந்தர் நங்கந்மிகள் புகக்கட வாரல்லராகவும் இந்நாச்சியார் அறப்பெருஞ் செல்வியார் தெவர் கந்மிகளெ..........*

எண்–40

இடம் : சிவன் கோயில் மகாமண்டபத் தென்சுவரில் உள்ளது.

அரசன் : வீரநஞ்சனஉடையார் கி.பி.1509 மாசி மாதம்

செய்தி : வேறுநாடுகளில் எங்கும் இல்லாது கொங்கு மண்டலத்தில் வடபரிசாரநாடு முதலாகிய ஏழுநாடுகளில் மட்டும் கைக்கோளர் செலுத்தும் சூளைத்திறை என்ற கட்டளை இரண்டு ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. இவ்வாண்டு முதல் இச்சூளைத்திறைக் கட்டளை நீக்கப்படுகிறது. இவ்வாணையின் பிறகும் சூளைத்திறை கொள்வாருண்டாகில் அவர்கள் நஞ்சனஉடையார் பாதத்துக் குத்தப்பினவர்களாகக் கடவர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ வீரநஞ்சன உடையாற்குச் செல்லா நின்ற சுக்குல வருடத்து
2. மாசி மீ வெகுள 16 ஸ்ரீமது ஆழ்வார் வடபரிசார நாடுகு
3. றுப்பு நாடு நாலூற்பற்றுநாடு பெருர் நாடுவீர சொழ வளநாடு
4. ஒடுவங்கநாடு வெங்காலநாடு யின்னாட்டிலுள்ள கைக் கொளற்கு நிருபங்
5. குடுத்தபடி கொங்கு மண்டலத்துக்கும் வெற்று ஒரு நாட்டி
6. லுமில்லாத கட்டளை இந்த நாட்டி லெ இரண்டு வருஷ
7. ம் சூளை திறையும் என்று நடந்த அளவுக்கு இவ்வருஷ முதல்
8. இவன்றென்றைக்கும் நாம் இந்த நாடுகளுக்கு சூளைதிறை விட்
9. டொம் இந்த மானியம் (என்)
10. றும் இந்த மானியம் நடக்க கடவதாகவும் இம் இதுபிறகு சூ
11. ளை திறை கொண்டவர் களுண்டாகில் நஞ்சண உடை
12. யார் பாதத்துக்கு தப்பினவர்களாக கடவதாகவும்
13. இப்படிக்கு ஆழ்வான் எழுத்து.

எண்–41

இடம் : கபாலீசுவரர் அறப்பெருஞ்செல்வியார் கோயில்களுக்கிடையில் உள்ள சுவரின் வடபக்கம்

அரசன் : திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் (வீரபாண்டியன்)

செய்தி : இவ்வரசன் அறப்பெருஞ் செல்வியார் கோயிலின் பல்வேறு அறங்களுக்கு முதலாக இறைபுரவு முதலிய பல வரிகளை நீர்வார்த்துக் கொடுத்தான். இக்கல்வெட்டுச் சிதைந்துள்ளது.

கல்வெட்டு

1. ஸ.வஸ்தஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்தி கொனெரின் மை கொண்டான் செ(அறப்பெ)
2. ருஞ் செல்வியார் தெவர்கன்மி களுக்குநம் ஓலைக் குடுத்த (படியாவது) .... தி
3. ருவறத்துக்கும் உடலாவதாகவும்........வட...........
4. ன் செயாலுள்ள இறை புரவுசி.................
5. கு உதகம் பண்ணிக்கு(டுத்த)......... இவ்வற்கு தஞ்சம் ....

6. வார்களாகவும் இ.............. யெய்
7. இப்படிக்கு ச்ந்திராதித்த செலு
8. களுக்கு இத்தன்மம் நந்தமா எப்பெறபட்ட ....
9. இவை இருங்கொளந் எழுத்து இவை வழுதி ....
10. இத்தன்மம் அழிவுசெய்வான்வழி எ6(ழச்சமறுவா) ....ந்இது....
11. ....பன்மாஹெஸ்வர ரக்ஷை.

எண்–42

இடம் கபாலீசுவரர் கோயில் அர்த்தமண்டப வடக்குக் குமுதம்

அரசன் : திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துவங்க சோழன் (யா. 13) கி.பி.1162

செய்தி : குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் வீற்றிருந்தான் புகலியும் மற்றொருவனும் இரண்டு சந்தியாதீப மெரிக்க ஆணையச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை வழங்க சிவபிராமணன் நாளும் இவ்விளக்கெரிப்பானாக.

கல்வெட்டு

1. பந்மராந திரிபுவந சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலொத்து
2. டு பதிந்முன்றுவது மாசிமுதலாக..........
3. முடையார் கொயிலில் 2 சந்தியா தீபம்..........
4. யும் விற்றிருந்தாந் புகலியும்........பொ...............
5. டு கடவ ஆனை(ய)ச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலா (கை)
6. ....கவுங் குடங்கொடு கொயில் (புக)வானும் செலுத்து வா.....

எண்–43

இடம் : கபாலீசுவரர் கோயில் மகாமண்டப தென்குமுதம்

அரசன் : வீரராசேந்திரன் –(யா. 24) கி.பி.1230

செய்தி : வீரராசெசந்திரனின் சாமந்தரில் குன்றன்......... பாரசிவரில் வீற்றிருந்த வறியான், இடங்கை நாயகன் நித்தப் பறையன் உள்ளிட்டோர் பிடாரியார் கோயிலில் சந்தியா தீபமெரிக்க ஏற்பாடு செய்தனர்.

கல்வெட்டு

1. ஸ்ரீவீரராஜெந்திர தெவக்கு யாண்டு இருபத்து நால...........1
2. பாக்குடியில் இருக்குஞ் சாமந்தரில் குன்றன் இ.................
3. உடைய பாரசிவரில் விற்றிருந்த வறியான்............
4. இடங்கை நாயககந் நித்தப்பரையன் உள்ளிட்டாரும் வடுக............

5. யாரும் இவர்..........(சி)ற்பிடாரி யாற்கு சந்தி திபத்துக்கு..........
6. இது பன்மாயெசுவர ரெக்ஷை.

எண்–44

இடம் : தென்சுற்று மதிலில் தட்சிணாமூர்த்தி கோயில் எதிர்
அரசன் : வீரசோழதேவர் (யா. 2) (1182–1206) கி.பி.1184–5.
செய்தி : சேவூர் கபாலீசுவரர் கோயிலில் .... நாட்டில் மாந்தோட்டத்தில் வியாபாரி ஈசானச் சிலைச் செட்டி க்ஷேத்திர பாலப் பிள்ளையாரை எழுந்தருளச் செய்து அமுதுபடி, முதலியவற்றை வழங்கியதாகக் கல்வெட்டுக் கூறுகின்றது.

கல்வெட்டு

1. ....ந்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சிரிவீர சொழதெவற்க்கு யாண்டு இரண்டாவது
2. ....திருக்கபாலீச்ஸுரம்முடையார் கொயில்காணி யுபையரில் சிவப்பிராமணன் உபயெ
3. ....நாட்டில் மாந்தொட்டத்தில் வியாபாரி ஈசான ச்சிலைச் செட்டி பொன்னம்பலக் கூத்தனான
4. ....யிலில் நான் எழுந்தருளுவித்த க்ஷேத்திரபாலப் பிள்ளையாற்கு அமுதுபடி உள்ளிட்ட
5. ம் கறியமுதும் அடைக்காயமுதும் இலையமுதுட்பட நாழிநெல்லு
6. செ கபதும் புதுச்ச(லா)கை ஒன்று கொண்டு டென் ஆழ்
7. கு...........ன் செலுத்துவிதாகத் தருகிராசெ.

எண்–45

இடம் : அர்த்தமண்டபத் தென்சுவர்
அரசன் : வீரசோமீஸ்வரதேவன் சுபானுவருஷம், கார்த்திகை மாதம்
செய்தி : வடபரிசார நாட்டுச் சேவூரான செம்பியன்கிழானடி நல்லூர் வெள்ளாளன் ஒருவன் கபாலீச்சுரமுடையாருக்குச் சந்தியாதீபமெரிக்கப் பத்துப்பணம் கொடுத்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ விரசொமிஸ் வரதெவற்க்கு
2. பிருத்விராஜ்யம் பண்ணி யருளா நிற்க
3. நலியாண்டு ஸுபானு வருஷத்து கார்த்தி
4. கை மாதம் 2 தியதி வடபரிசாரநாட்டுச் செவுரா
5. ன செம்பியந் கிழாநடி நலூரில் உடையா
6. ர்திருக்கபாலிஸ்வரமுடையாற்க்கு மெற்படி
7. யூரில் வெள்ளாழந் பைய்தலையரில் நடுவ

8. ....டையானென் வைத்த சந்தியாதீபம் ஒன்று
9. (கு)டுத்த(ப)ணம் பத்து இப்பணம் பத்தும் கை...........

எண்–46

இடம் : அக்கசாலீச்சுரம் (அனுமந்தராயர்) கோயில் மேற்குச் சுவர்

அரசன் : வீரபாண்டியன் – கி.பி.1267

செய்தி : வடபரிசார நாட்டு வியாபாரிகள் அக்கசாலீச்சுரமுடையார் திருப்பள்ளியறை நாச்சியார் வடிவுடைமங்கையார்க்கு அமுதுபடிக்கு நெல்லும் திருநந்தாவிளக்குக்கு எண்ணெயும் செலுத்துவதாக இசைந்தனர். அக்கசாலை அதிகாரிகள் இந்நெல்லையும் எண்ணெய்யையும், வியாபாரிகளிடம் இழுத்தும் பறித்தும் பெற்று இத்தன்மம் காப்பதாகக் கல்வெட்டிக் கொடுத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தெவற்கு(திரு வெழுத்)திட்டு(ச்செல்)
2. லா நின்ற திருநல்லியாண்டு 12 வது (வட)பரிசாரநா(ட்டு) (வியாபாரிக)
3. ளொம் செவூரில் அக்கசாலிஸ்வரமுடை யார் திருப்பள்ளியறை நாச்சியா
4. ர் வடிவுடை மங்கையாற்கு அமுதுபடிக்கு நாளொன்றுக்கு பரையரி அரிசி
5. முன்னாழிக்கு அஞ்சிலிரண்டில் படி நெல் எழு(நா)ழி உரியும் கறியமுதுக்கு நாளொன்
6. றுக்கு நெல்உரி ஆக நாளொன்றுக்கு பரையரி(நெ)நல் குறுணி ஆக ஆண்டொன்றுக்
7. கு அமுதுபடி நெல்முப்பதின் கலமும் செலுத்து வொமாகவும் திருநந்தா விளக்கு
8. ஒன்றுக்கு நாளொன்றுக்கு காணத் தால் எண்ணெய் ஆழாக்கும் மாதமெ(ா)
9. ன்றுக்கு எண்ணை முன்னாழி முவ்வுழக்கும் ஆக ஆண்டொான்றுக்கு எண்ணை
10. ஐங்குறுணி ஞ்ஞாழியும் முட்டாமற் செலுத்து வொமாகவும் இத்தன்மம் ச
11. ந்திராதித்தவரை செல்வதா(க)வும் இது தண்டும் பொழுது இழுத்து பறித்
12. தும் தண்டுவதாகவும் இதன்(ம)ம் (ர்) (ஆ)மொருவர் (நெ)சலுகின்ற......... பெற கட
13. கடம............
14. ட்டுக் கொள்வொமாகக் கல்வெட்டிக்கு டுத்தொம் அக்கசாலைகளொம் பன்மாஹெஸ்வர ரட்சை.

எண்–47

இடம் : அக்கசாலீச்சுரம் அர்த்தமண்டப அதிட்டானம் மேற்கு
அரசன் : வீரராசேந்திரன் (யா. 46) கி.பி.1253
செய்தி : பிள்ளையார் நெற்றிமாலையழகிய பெருமாள் திருவாசல் காத்த சொக்கன் அக்கசாலீச்சுரமுடையார் கோயில் சிவராத்திரிக்காகப் பழஞ்சலாகை அச்சொன்று முதலீடாக வைக்க சிவப்பிராமணர் ஐவர் அவ்வச்சைக் கைக்கொண்டனர். சிவராத்திரி நாலுசந்திக்கும் வேண்டிய அமுதுபடிப் பொருள்களையும், பஞ்சதிரவியப் பொருள்களையும் வழங்கிட விளக்கமாகக்குறிக்கப்பட்டன.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ விரராஜெந்திர தெவற்கு யா(ண்டு) நாற்பத்தாருவது பிள்ளையார் நெற்றி மாலெய்யழகிய பெருமாள் திருவாசல் காத்த சொக்கநெந் ஆளுடையார்
2. அக்கைசாலெ யிசுவரமுடையார்க்கு நாந் செய்த தந்மமாவது சிவரா(த்)திரிக்கு நாநெ(ஒ)டுக்கிந பழஞ்சலாகை அச் சொந்றுங் கைக்கொண்டொம் இக்கொயிலிற் கா
3. ணியுடைய சிவப்(பிராம)ணந் காசிவ கொத்திரத்தில் ஆழ்வாந் சுந்த(ர) நாந விரசொழபட்ட னுள்ளிட்டாரும் புகலி சக்கரவத்தி யுள்ளிட்டாரும் வடுகந் பிள்ளா
4. னுள்ளிட்டாரும் சிவலவ(த்) தெவ நாந இடங்கை நாயக பட்டனும் உய்யந சியநாந விரபத்திர பட்டனும் இவ்வனை வொம் இவர் சிவராத்திரிக்கு தந்த (அச்சொந்று)
5. ....கொண்டு செலுத்தும்படியாவது அமு(து)படி கா.......ருத சந்திந ஏலுக்கு சொழிய த்தால் பத அரிசியால்கலந் கறியமுது............
6. கைகு.......காயும் சந்தி நாலுக்கு ஒரு பிடிநெ (ய்)யும் சந்தி நாலி(னு)க்கு அடைக்காயமுது எட்டும் சந்தி நாலுக்கு இலெயமுது இருபது முந் சந்திக்கு பஞ்சதிரவிய மாடியரு
7. ஊநெ(ய்யி)னுக்கு நாலுரி தயிர் உரி கொமுத் திரநாழிச் சாணத்நாறடியும் அமாக்காபுரம் மஞ்சக்காப்பும் இந்நாலு சந்திக்கு
திருவிளக்கு எண்பதும் இந்நாலு சந்தி ஒருசந்தி சொறு நீக்கி ....
8. ல்ல பத்திரி பறிப்பா(நு)க்கும் திரு மஞ்சண மெடுப்பாநு(ம்)க்கு(ம்) விறகிடு வாநுக்(கு)ம் நி.......

9. கொள்ள குடங்கொ(ண்)டு கொயில் புகுவாந் சந்திராதித்தவரை.

எண்–48

இடம் : அக்கசாலீசுவரர் கோயில் கருவறை கிழக்குச்சுவர்
அரசன் : வீரபாண்டியன் – (யா. 11) கி.பி.1276 ஆடி மாதம்.
செய்தி : வாணிகமடிகையார் அக்கசாலீச்சுரமுடையார்க்கு எண்ணெய் காப்பிட ஆண்டொன்றுக்கு செக்கு ஒன்றுக்குக் காணத்தால் உழக்கெண்ணெய் வீதம் அளந்துவரும்படி கல்வெட்டிக் கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஶ்ரீ வீரபாண்டிதெவற்
2. கு யாண்டு பதினொன்ருவது ஆடி
3. மாதமுதல் வடபரிசாரநாட்டு வா
4. ணிகை மடிகையொஞ் செவூர் ஆ
5. ளுடையார் அக்கைசாலீச்சுரமுடை
6. யா(ர்)க்கு திருஎண்ணைக்காப்புக்கு யா
7. ண்டு ஒன்றுக்குச் செக்கொன்று
8. க்கு காணத்தால் உழக்கெண்ணெ
9. நாட்டிலுள்ள செக்குக்கு ஆண்டொ
10. ன்று மளந்து வருவதாகக் கல்வெட்
11. ட்டிக்குடுத்தொம் இதுபன்(மாஹெ)
12. ஹஸ்வர ரட்சை.

எண்–49

இடம் : மேற்குக் குமுதத்தில் உள்ளது.
அரசன் : வீரராசேந்திரன் (யா. 28) கி.பி.1235 மார்கழி
செய்தி : சேவூரிலிருக்கும் கைக்கோளரில் காளி அவிநாசியான எல்லாம் வல்ல சோழகங்கன் என்பவன் அக்கசாலீச்சுரமுடையாற்கு சந்தியாதீபவிளக்கு இரண்டுக்கு வைத்த பழஞ்சலாகை அச்சு இரண்டனையும் சிவப்பிராமணர்கள் பெற்றுக் கொண்டு இச்சந்தியா தீபம் எரித்துவர இசைந்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஶ்ரீ விரராசெந்திரதெவற்கு யாண்டு இருபத்தெட்டாவது மா(ர்கழிமா)தம் முதல் வடபரிசாரநாட்டு செவூரில் விருக்குங் கைக் கொளரில் காளி அவனாசி
2. யாந எல்லாம் வல்லசொழகங்கநெந் ஆளுடையா அக்சாலிச்சுர முடையாற்கு (சந்தியாதி)ப விளக்கு

இரண்டுக்கு வச்ச (பழஞ்சலாகை அச்சு) இரண்டும் கைக்கொண்டோம் செவூரில் இ(ரு)

3. க்கும் சிவப்பிராமணரில் காசுவ கொத்திரத்தில் திருநட்டந் சிவல்லவனும் ஆழ்வாந் திருநட்டனும் (கங்கந்)புகலியும் வடுகன் நாய்........வொமும்)இவிரண்டச் சுங் கைக்கொண்டு சந்தி(யா

4. தீபம் (எரித்து) வருவொம்மாகவும் சந்திராதி ச்சவரை இக்கொயிலுக்கு (கு)ட மும் குச்சியு (ங்கொ)ண்டு(ெ) காயில் பு(குவாரெ) சலுத்தக் கடவொம் (இது) பன்மாஹஸ்வர ரட்சை.

எண்–50

இடம் : கருவறை வடக்கு அதிட்டானம்

அரசன் : வீரராசேந்திரன் யாண்டு சிதைந்துள்ளது.

செய்தி : சேவூர் வெள்ளாளன் உத்தமரில் சாத்தன் ஆண்டான் அக்கசாலீச்சுரமுடையாற்கு சந்தியாதீபமெரிக்க ஒடுக்கின அச்சொன்றும் மக சிவப்பிராமணர் நால்வர் பெற்றுக்கொண்டு தீபமெரிக்க இசைத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ விரராசெந்திரதெவற்கு யா(ண்டு)............ வடபரிசாரநாட்டு செவூரில் வெள்ளாந்(ந) உத்தமரில் சாத்தந் ஆண்டாநெந் உடையார் அக்கை சாலிச்சுரமுடையாற்கு சந்

2. தியாதிபம் ஒந்றுக்கு(ஒடுக்கின) அச்சு ஒன்று) அச்சொ ந்றும் இக்கொயில் (கா)ணி யுடைய சிவப்பிராமணந் காசுவ கொத்திர த்து ஆழ்வாந் சுருதநாந விரசொழிபட்டந் உள்ளிட்டாரும் புகலிசக்கரவத்

3. தி உள்ளிட்டாரும் வழி.......வலவந் தெவநாரும் இடங்கை நாயகப்பட்டநும் உய்யநாயந் விரபத்திரபட்டநும் இவ்வனைவொம் அச்சு ஒ(ன்)றுங் கொண்டு குடங்கொ(ண்)டு கொயில்

4. புக்கவாந் சந்திராதித்தவரைச் செலுத்துவொமாக பன்மாஹெ சுரி ரட்சை.

எண்–51

இடம் : அக்கா சாலீசுவரர் கோயில் கிழக்குக் குமுதம்.

அரசன் : வீரராசேந்திரன் (யா. 28) கி.பி.1235 மார்கழி

செய்தி : அக்கசாலை அதிகாரிகள் அக்கசாலீச்சுரமுடையார்க்கு சந்திக்கு அரைப்பணமும் குடிக்குப் பதக்குக்கம்பும் கொடுக்கவும் அமுதுபடிக்கு ஆண்டொன்றுக்கு முப்பது

கலம் நெல் வழங்கவும் (வேலை செய்பவனுக்கு ?) கம்பு பன்னிருகலம் வழங்கவும் புடவை முதலுக்கு அரைஅச்சும் கொடுக்கவும் உறுதி செய்தனர். இவைகளை வசூலிக்கும்போது இழுத்தும் பறித்தும் (உடைமைகளைப் பறிமுதல் செய்தும்) கொள்வார்களாக, என்றும் ஏதேனும் ஒருநிலையில் செலுத்த இயலாதபோது இத்தன்மத்தை நாட்டார் ஏற்றுச் செய்ய வேண்டுமெனக் கல்வெட்டிக் கொடுத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராசெந்திர தெவற்கு த்திருவெழு த்திட்டுச் செல்லா நிற்ற (திரு நல்)லி யாண்டு இருபத்தெட்டாவது மா(ர்க)ழி மாத முதல் வடபரிசாரநாட்டு அக்கைசாலைகளொம் செவூரில் ஆளுடையார் அக்கைசாலிச்சுர முடையாற்கு நாங்கள் கல்(வெட்டிக்குடு)

2. த்தபடியாவது .... (சந்)திக்கு அரைப் பணமுங் குடிக்குப் பதக்குக் .... டுத்து வருவொமாநொம் ந........கு அமுது படி நாளொந்றுக்குப் பரைய(ரி)யருசி முந் நாழிக்கு அஞ்சிரண்டிற் படிநெல் எழு நாழியுரியும் கறியமுதுக்குநாளொன்று

3. க்குநெல்உரிஆக....பரையரி நெல் குறு(ணியும்) ஆக ஆண்டு(டொன்று)க்கு அமுதுபடி முப்பதிங் கல(மு)ஞ் செலுத்தி (வரு) வொமாகவுங் குடி(க்)குப் பதக்குக் கண்பிலெ மாண பொ(க)த்துக்குப் கண்பு ஆண்டொந்றுக்குப் ப(ந்)நிருகலமும் ஆண்டொ(ன்றுக் குப்பு)

4. டவைமுதல் அரை அச்சு .... குடுப்பொமாகவும் மெஎல்லற்ற முள்ளதுப் பண்ட........... ருவத.......... தண்டும் பொது இழுத்தும் பறிச்சுந் தண்டுவதாகவும் இத்தை யா ரெநுமொருவந் சிறுந்நாருண்டாகில்

5. இதுக்கு எதெநுமொருதட்டு முட்டு வரில் நாட்டொமெற்ப இகல் வெட்(டி) க்குடுத்தொம் அக்கைசாலைகளொம் இது பந்மாயெசுர இரக்ஷெ

எண்–52

இடம் : அக்கசாலீசுவரர் கோயில் கிழக்குக் குமுதம்.
அரசன் : வீரராசேந்திரன் (யா. 46) கி.பி.1253
செய்தி : தென்னவர் முடிசூடிப்பெம்மான் என்பவர் அக்கசாலீச்சுர முடையார் உள்ளுத்தைக்கு(கருவறையில் ?) விளக்கெரிக்க பணம் கொடுக்க சிவபிராமணர் பெற்று விளக்கெரிக்க இசைத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்ரீவஸ்திஸ்ரீ விரராசெந்திர தெவற்கு யாண்டு நாற்பத்தாருவது அக்கசாலீ பவாமுடையார் ....
2. தெந்தவர் முடிசூடி பெம்மான் உள்ளுத்தைக்கு வைத்த விளக்கு அச்சொன்றுக்கு பெருமாள்
3. சொழப் பல்லவறையனும் கொதை பெரியநாத பகை வென்ற சொழப் பல்லவறையனும் நதிருவ.......
4. தொம் இக்கொயில் காணியுடைய சிவப்பிராமண காஸ்யப கொத்திரத்தில் ஆள்வான் வீரசொழ பட்டன்.......

(கல்வெட்டு முடியவில்லை கீழே மறைந்துள்ளது)

எண்–53

இடம் : அழகப்பெருமாள் விண்ணகரம்.
அரசன் : சுந்தரபாண்டியன் (யா. 27) கி.பி.1304 ஆவணி
செய்தி : இக்கல்வெட்டு நன்செய் நிலத்தை மன்றறியச் செய்த விலைப்பிரமாணம் பற்றியது. வெள்ளாளன் வகையரில் அடியாற்கடியான் பெரிய கேசன் பிள்ளையும் சிறுவன் ஆண்டானும் விண்ணகர அழகப்பெருமாளுக்குத் திருவிடையாட்டமாக இந்நாட்டு வியாபாரிகளுக்கு நிலத்தை விற்றனர். இவ்வூர்க் கிழவர் குளம் இவர்களுரிமைப்பட்டது. இக்குளத்தில் மூன்றிலொன்றும் நிலமும் மூன்றிலொன்றான சகல பிராப்திகளும் உட்பட மண்ணறுதியாக விற்றுக் குடுத்தனர்.

கல்வெட்டு

1. (ஸ்வஸ்திஸ்ரீ கொச்சட பன்)மரான திரிபுவன சக்கரவர்த்திகள்.........பாண்டிய தெவற்கு யாண்டு இருபத்தெழாவது ஆவணி மாத முதலாக மதிநாள் பக்கம் பஞ்சமி நாள் முலங்கிழமை வெள்ளிப் பொழுது இது நாளிது பருவமாக வடபரிசார நாட்டுச் செவூரான செம்பியன் கிழானடி நல்லூர் (மன்ற)த் திருந்து மன்றறியச் செய்த நன்செய் நிலம் விலெ பிரமாணமாவ(து) இவ்வூர் வெள்ளாழன் வகையரில் அடி யாற் கடியான் பெரிய கெ(ச)
2. ன் பிள்ளை சிறுவன் ஆண்டானும் இவ்வனை வொம்....... (இ)வூர்த்திருமெற் கொயில் அழகப் பெருமாள் விண்ணகர எம்பெருமானுக்குத் திருவிடையாட்டமாக இன்னாட்டில் வியாபாரிகளுக்கு நாங்கள் விற்ற நன்செய் நிலம் இவ்வூர்க்கிழவர் குளம் எங்கள் காணியான இக் குளத்தில் இவ்வூர் நாயனுர் திருக்கபாலீசுவரமுடைய நாயனார் தெவதான மான பல தடியினால் பன்னீரடிக் கொலால் இருநூற்

றெழுப பத்தாறு குழி நீங்கலாக இக்கு
3. (ளத்தில் மு)ன்றி லொன்ருய் வருங் குளமும் (நி)லமும் மெனுக்கிய மரமும் கிழ்நொக்கியகிணறும் இக்குளத்தில் முன்றிலொன்ருய் வரும் ஸகல பிராப்திகளும் உள்பட விற்ருேம் இதுக்கு எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்ருடு வராகன் பள்ளிக் குளிகை பணம் ஆயிரம் இப் பணம் ஆயிரமும் இவ்வாட்டை ஆவணிமாதம் நாங்கள் பண்டாரத் துக்குத் தெண்ட மிறுக்குற பொன் னுக்கு இப்பணம் ஆயிரமும் இவ்வியாபாரிகள் ெ..........
4. ....து அமுதுபடிக் குடலாக ெ........... நடத்திக் கொண்டு இருக் கையில் இவர்கள் பக்கல் இப்பணம் ஆயிரமுங் கைக்கொண்டு இக்கிழவர் குளம்முழுவதும் முன்றிலொன்றும் நாங்களும் அனுபவித்துப் பொந்(த) ஸகல பிராப்திகளும் உள்பட மண்ணறுதியாக விற்றுப் பொருளறக் கொண்டு விற்றுவிலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்தொம் இப்படிக்குச் செம்பிலும் சிலையிலும் வெட்டி இன்னிலத்தில் திருநாம........க் கல்லும் நாட்டிக் கொள்ளக் கட(வது)
5. ....பிரமாணம் பண்ணிக் குடுத்தொம் இவ்வனைவொம் இன்னுட்டில் வியாபாரி களுக்கு........... வைநம்ப .... எழுத்து இப்படிக்கு காவன் கண்ணன் எழுத்து இப்படிக்கு சிறுவன் ஆண்டான் எழுத்து இப்படிக்கு கொங்காழ்வி அருளாளப் பெருமாள் எழுத்து இப்படிக்கு நம்பி சாத்தன் எழுத்து இப்படிக்கு முடி கொண்ட காமிண்டன் பந்த பெருபிள்ளை எழுத்து இப்படிக்கு சமந்தப் பெருமாள் எழுத்து............ எழுத்து நாள் இப்படிக்கு அடியாற் கடியான் பெரிய கெசன்................

எண்–54

இடம் : அழகப்பெருமான் கோயில் அர்த்தமண்டப வடக்கிலுள்ள இணைப்புக்கோயிற் சுவரின் மூன்று பக்கங்களிலுமுள்ளது.

அரசன் : சுந்தரபாண்டியன் (யா. 27) கி.பி.1304

செய்தி : இதுவும் முன்புள்ள கல்வெட்டுப்போல மன்றத்திலிருந்து புன்செய் தோப்புநிலம் விலைப்பிரமாணம் செய்தது பற்றியது. சிறுவன் ஆண்டான் மேற்படி கோயில் ஸ்ரீசேனாபதி ஆழ்வாற்கு மண்ணறுதியாக விற்ற நிலத்தின் நான்கு எல்லைகளும் கூறி, வாழிக்கல் நட ஏற்பாடாயிற்று.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொற்சடபன் மரா(ன) திரிபுவனச் சகரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தெவற்குத் திருவெழுத்திட்டுச்செல்ல(ா)நின்ற திரு நல்லியாண்டு

27 வது சித்திரை மாத முதல் ம.....த..... னுள் பக்கம் பஞ்சமிநாள் மூலங்கி

2. ழமை வெள்ளிப்பொழுது இந்நாளிது பருவ-மாக வடபரி சாரநாட்டுச் செவூரான செம்பியன் கிழானடி நல்லூரில் மன்றத் திருந்து மன்றறியச் செய்த புன்செய் தொப்பு நிலம் பிரமாணமாவது இவ்வூர் வெள்ளாழன் கொம்.............

3. மையரில் சிறுவன் ஆண்டான் இவ்வூர் திருமெற்கொயில் அழகப் பெருமாள் விண்ணகர எம் பெருமான் (கொ)யில் ஸ்ரீசெனுபதி ஆழ்வாற்கு நான் மண்ணறுதியாக விற்ற புன்செய் தொட்டத்துக்கு எல்லையாவது மெ(ல்) பாற்கெல்லே

4. சங்காழ்வான் குளத்தில் வ(ய)லுக்கு கிழக்கும் வடபாற்கெல்லே சங்காழ்வான் குளத்தில் வயலுக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை தென்னவன் தட்டான் தொட்டத்துக்கு மெற்கும் தென்பாற்கெல்லே சிறுவன் ஆண்டானும் அ(வ)

5. ல்லாளப்பெரும் தொட்டத்து(க்கு) வடக்கும் இந்நான் கெல்லேக்குள்பட்ட நிலமும் மெனுக்கிய மரமும் கிணுக்கிய கிணறும் மற்றும் எப்பெற்பட்டன (சகல)

6. பிராப்திகளும் உட்பட விற்ற இதுக்கு எம்மிலி சைந்த விலேப்பொருள் அன் ரூடு (வராகன்) பள்ளிக்குளிகை பணம் 300 இப்பணம் முன்னூறும் கொண்டு இத்தொப்பில் எப்பெற்பட்ட உரிமைகளுட்பட மண்(ண) றுதியாக விற்று பொருளறக் கைக்கொண்டு விற்று விலைப்பிரமாணம் ப(ண்)ணிக்குடுத் தொம் இப்படி

7. க்குச் செம்பிலுஞ் சிலேயிலும் வெட்டி இத்தொட்டத்தில் வாழிக்கல்லும் நாட்டிக் கொள்ளக் கடவதாகவும் இப்படி சம்- மதித்து புன்செய்த் தொட்டம் நிலவிலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்தென் சிறு

8. ன்.....ஆண்டானென்.......... அழகப் பெரு மாள் விண்ணகர எம்பெருமான் கொயில் ஸ்ரீசெனுபதி ஆ(ழ்வ)ாற்கு. இப்படிக்கு சிறுவன் ஆண்டான் எழுத்து (செவூர் வெள்ளாழன் வகையில் இவர் கெசன்

9. ஆண்டான் எழுத்து இ(ப்படிக்)கு வடபரி(சார நாட்டு)......ல்லூர் வெள்ளாழன் வெள்ளெலிகளில் சொக்கன் செ(ாக்க)ன் எழுத்து (இப்படி) அறிவென் செவூர் உகையில் பிள்ளை சுகெசன் ஆண்டான் எழுத்து இப்படி அறிவென்

10. செவூர் ....கான் எழுத்து இப்படிக்கு முடிகொண்(ட) காமிண்டன் (எழுத்து) இப்படிக்கு............. இப்படிக்கு நடுவன் எழுத்து இப்படிக்கு................

(கடைசிவரிகள் சிதைந்துள்ளன)

எண் – 55

இடம் : அழகப்பெருமாள் கோயில் அர்த்தமண்டபம் மேற்குச்சுவர்
அரசன் : வீரவல்லாளன் – கி.பி.1331 (சகரை 1253)
செய்தி : இம்மடி ராகுத்தராயன் மாதப்பதண்ட நாயக்கர் குமாரன் இராச்சய தண்டநாயக்கர் ஆட்சிக்காலத்தில் வியாபாரி குளத்தூருடையான் அருளாளப் பெருமாள் காழியப்பனான துண்ணந்துழாய்தாசன் அழகப் பெருமாளுக்கு ஒருவிளக்கு ஏழரை நாழிகைப்பொழுது எரிக்க இக்கோயில் பட்டரிடம் பணம் கொடுத்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ மன் பிரதாப ச்சக்கரவாத்திகள் பொசள பூஜபல விரவல்லாள தெவர் பிருத்திவிராஜ்யம் பண்ணி யருளா
2. நின்ற சகரயாண்டு ஆயிரத்திருநூற் றைம்பத்து முன்று இதன் மெல் செல்லா நின்ற .... சம்வத்
3. ஸரத்து மகர நாயிற்று பூர்வபக்ஷத்து சப்தமியும் வெள்ளிக் கிழமையும் உத்தரமும் பெற்ற இ(ந்)
4. றை நாள் ஸ்வஸ்தஸ்ரீ மொடகுலயதிலிலைகமல மார்த்தாண்ட சித்தகரிப........ ம்மடிராகுத்த ராய மாத
5. ப்பதண்ட நாயகர் குமாரன் இர(ா)ச்சய தண்ட நாயக்கர் நாள் வடபரிசாரநாட்டுச் செவூர
6. ான செம்பியன் கிழானடி நல்லூர் திருமெற் கொயில் நாயனர் அழகப் பெருமாள் கொ
7. யிற் காணியுடைய கவி(சி)ய கொத்திரத்து வட கொபுரத்தாழ்வான் விற்றிருந் தானும் காஸ்யப கோத்திரத்து பச்சை
8. வாரணப் பெருமாள் அழகப் பிள்ளையும் இவ் விருவொம் மெற்படியூரிலி ருக்கும் வியாபாரி குளத்தூருடையான்
9. அருளாளப் பெருமாள் காழியப்பனான துண்ணந் துழாய் தாசன் பக...... நதநாயனர் அழகிய பெருமாளுக்கு இவன் த.......
10. ம்மமாக சந்திரா (தித்த)வரையில் ஒரு லிளக்கு ஏழ ரை நாழிகை எரிப்பதாக இவன் பக்கல் (நா)ங்கள் உபை யமாகப் பற்றின இப்பணம்..........

எண் – 56

இடம் : அழகப்பெருமாள் கோயில் அர்த்தமண்டபம் வடசுவர்
அரசன் : வீரவல்லாளன் – கி.பி.1322
செய்தி : இராச்சய தெண்ணாயக்கர் அழகப்பெருமாள் விண்ணகர சேநாபதி ஆழ்வார்க்கு வெள்ளாளன் கொம்மையரில் சிறுவன்

ஆண்டான் விற்ற தோட்டத்திற்கு, கல்வெட்டினபடி அனுபவிக்கும் காலத்தில், சிக்கல், ஏற்பட்டு நிலம் வீணே கிடக்கையில் அவ்வில்லங்கம் தீர்த்து முன்பு இருந்தபடியே அனுபவிக்க இராச்சயதண்ணாயக்கர் ஆணையிட்டுக் கல்வெட்டியது.

கல்வெட்டு

1. ஸ்ரீமது பிரதாப சக்கரவத்திகள்கரவதிகள் பொசள புஜபல விரவல்லாள தெவர் ஸரிகதை யருளா நின்ற சகரை ஆண்டு ஆயிரத்து இருநூற்று நா ற்பத்து நா
2. லு இதன் மெற் செல்லா நின்ற துந்துபி ஸம்வத் ஸரத்து மெஷ நாயற்று பூர்வபக்ஷத்து ஸப்தமியும் வெ(ள்) ளிக்கிழமையும் பெற்ற புணர் (பூசத்து)
3. ஸ்வஸ்தஸ்ரீ மொட குலைய குலகமல மார்த்தாண்ட சித கரகண்ட இம்மடி இராகுத்தராயன் மாதப்ப தெண்ணாயக்கர் குமாரன் (இ) இராச்சுய தெண்ணாயக்கர் வட (பரிசார நாட்டு செ)
4. வூரான செம்பியன் கிழானடி நல்லூர் திருமெற் கொயில் நாயனுர் அழகப் பெருமாள் விண்ணகர் எம்பெருமான் கொயில் ஸெநாபதியாழ்வாற்கு (இவ்)
5. வூர் வெள்ளாழன் கொம்மையில் சிறுவன் ஆண்டான் இவற்கு விற்ற தொட்டத்துக்கு இக்கொயிலில் கல்வெட்டினபடி அனுபவித்துப் பொந்த அளவில்
6. வெயிற் ங்கலப்பட்டு கிடக்கையில் இவ் விறங்கலமிட்டுமுன்னுல் வெட்டின படியெ சந்திராதித்த வரை(செ)ல்வதாக ....லமிட்டு தாராபூர் வ(மாகக்கு)
7. டுத்தொம் இராச்சிய தெண்ணுயக்க னென் ....தந்த..............
8. ....த்க்ஷ..............

எண்–57

இடம் : அழகப்பெருமாள் கோயில் கருவறை – தென்சுவர் ஜகதியில்
அரசன் : இல்லை
செய்தி : சேவூர் ஈழச் சான்றோர் அழகப்பெருமாளுக்கு நந்தா விளக்கெரிக்க கோயிற் காணியாளரில் வடகோபுரத் தாழ்வான் வீற்றிருந்தான் பச்சவாரணப் பெருமானழகப் பிள்ளை ஆகியோர் கையில் பணம் நூறும் ஒப்படைக்க அவர்களும் சந்திராதித்யவரை நந்தாவிளக்கெரிப்பதாக இசைந்தனர்.

கல்வெட்டு

1. வடபரிசார நாட்டுச் செவூரான செம்பியன் கிழானடி

நல்லூர் திருமெற் கொயில் நாயனுர் அழகப்பெருமாளுக்கு மெற்படி யூரில் ஈழச் சான்ருரொம் எங்கள் தன்மமாக ஒரு நந்தாவிளக்கு........... காணியாளரில் வடகொரபுத்தாழ் வான் விற்றிருந்தான் பச்சவாரணப் பெருமா

2. னழகப் பிள்ளைக்கும் இவ்விருவரு மாக நாங்கள் குடுத்த பணம் 140 இப்பணம் நூற்று நாற்பதும் பற்றிக் குடங் கொண்டு கொவில் புகு(து)வார் சந்தி(ரா)தித்த வரை செலுத்தக் கடவொம் ஒரு திருநந்தா விளக்கு.......... இன்நாயனுர்க்கு இவை பன்மாகெஸ்வரரகை்ஷ இவை ஸ்ரீ வைஷ்ணவர் ரகை்ஷ.

எண் – 58

இடம் : அழகப்பெருமாள் கோயில் கருவறை மேற்குச்சுவர்
அரசன் : வீரவல்லாளன் – கி.பி.1293
செய்தி : விக்கிரமன் கண்ணப்பனான தென்னவதரையன் அழகப் பெருமாளுக்கு பலிபீடத்தைத் தன் தானமாகச் செய்து வைத்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரவல்லாளதெவர் பிரதி விராஜ்யம் பண்ணி அருளா நின்ற ஸ்ரீமுக ஸம்வத் ஸரத்து சித்திரை மாசம் 31 பூர்வபக்ஷத்து துவாதசியும் நாயிற்றுக் கிழமையும் பெற்றபூசத்து நாள் வடபரிசாரநாட்டில் (செவூரான் செம்பியன் கிழானடி நல்லூர்) திருமெற் கொயில் நாயனார்..............
2. விக்ரமன் கண்ணப்பனான தென்னவதரை யனென் இன்னாயனாற்கு பலி பீடம் என்னுடையத் தந்மமாகச் சமைப்பித்தென் இது பதினென் மண்டலத்து ஸ்ரீவைஷணவரரகை்ஷ பன்மாஹெஸ்வரரகை்ஷ.

எண் – 59

இடம் : அழகப்பெருமாள் கோயில் கருவறைத் தென்சுவர்
அரசன் : விக்கிரமசோழன் – 13ஆம் நூற்றாண்டு
செய்தி : கல்வெட்டு சிதைந்துள்ளது. பல்வேறு அமுதுபடிகளுக்குப் பணம் கொடுத்தது பற்றியது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்வதஸ்ரீ யாண்டு முன்ருவது ...... நா(ல)ாவது
2. றமான விக்கிரம் சொழ (தெவர்)க்கு யாண்டு.........
3. பரிசாரநாட்டில் செவூரான செம்பியன் (கிழான)
4. டிநல்லூரில் திருமெற்கொயில் அக...........

5. ண்ணகர அழகப்பெருமாளுக்கு வைத்தப
6. கமுது அடைக்காயிலை யமுதுக்குமாக
7. இவைக்கு வைத்த பணமொன்று இப்
8. ....பணமொன்றுமாக வாசறுதி.....தா
9. ....ஆற சுங்கஞ் செயும்
10. லூ......சிலரும் குடுத்து பொதுவானாக
11. .....கன் விலங்கினானொருவன் வழிவழி
12. யெழச்சமறுவான்.

எண் – 60

இடம் : அழகப்பெருமாள் கோயில் கருவறை வடக்கு மற்றும் மேற்குச் சுவர்

அரசன் : கோமாறபன்மரான சுந்தரபாண்டியன் (யா. 14) கி.பி.1240

செய்தி : சேவூர் ஊராளிகள் அழகப்பெருமாளுக்கு அமுதுபடி சாத்துப்படிகளுக்கும் நம்பிமார்க்கும் அரிசியும் நெல்லும் பணமும் கொடுத்தது பற்றியது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ் கொ(காமாறபன்மரான) திரிபுவனச் சக்கர (வத்திகள் சுந்தர) பாண்டிய (தெவற்குத திருவெழுத்திட்டு) செல்லா நின்ற (திரு நல்லி) யாண்டு) 14 வது மார்கழிமாத முதல் வடபரிசாரநாட்டுச் செவூரான செம்பியன் கிழாநடிநல்லூர் ஊரும் ஊராளிகளொம் எங்களூர் அழகப்
2. பெருமாள்...........பெருமானுக்கு அமுது படிக்கு......... க்காலால் அரிசி
நாழியும் வழிநடையாக அழிந்து பொதும் அரிசி உரியும் ஆக அரிசி நாழிஉரிக்கு நெல்லுப் பதிணைங்கலமும் கறிய(மு)து உள்ளிட்ட வி
3. ஞ்சனத்துக்கு.........திருப்பரிசட்டத்துக்கும் (ஆ)வணி(மாத)..........டும் இர
ண்டும் திருவாராதனம் பண்ணும் நம்பி மார்க்கு உட்பட புடவை முதலுக்குப் பணம் பத்தும் ஆக இ(வ்)வகைப்படி சந்திராதித்தவரை செலுத்துவதாக
4. (செம்பிலும் சிலையிலும் வெட்டி) குடுத்தொம் ஊராளிகளொம் இப்...........சாத்த....... மூவநெழுத்து இப்படிக்கு ஆண்டான் ஒற்றியான் ஓதாதுணர்ந்தா நெழுத்து இப்படிக்கு கிழவன் நங்கனான நல்ல மங்கை (பாக) நெழுத்து

எண்–61

இடம் : அழகப்பெருமாள் கோயில் கருவறைச்சுவர்.
அரசன் : கோச்சடபன்மரான ஸ்ரீசுந்தரபாண்டியன் – கி.பி.1266
செய்தி : வடபரிசாரநாட்டில் நாட்டவர் திருவரங்கத் திருப்பதியில் வடதிருக்கோபுரத்தில் உள்ள எடுத்தகை அழகிய நாயனாற்கு நாள் ஒன்றுக்கு இரண்டு திருமாலை சாத்த ஆண்டொன்றுக்கு நாற்பது பணம் கொடுத்துக் கல்வெட்டுவித்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ கொச்சடப
2. ன்மரான திரிபுவன சக்கரவர்
3 த்திகள் ஸ்ரீசுந்தரபாண்
4. டிய தெவற்குத் திருவெழு
5. த்திட்டுச் செல்லா நின்ற திருந
6. ல்லியாண்டு 15வது ஆனிமாதம் முத
7. ல் திருவரங்கம் திருப்பதியில் வ
8. டதிருக் கொபுரத்தில் நாயனார் எடுத்
9. தகை அழகிய நாயினாற்கு வடபரிச
10. ஏர நாட்டில் நாட்டொம் இன்னாயனாற்கு
11. நாள் ஒன்றுக்கு இரண்டு திருமாலை தி
12. ரு முன்பெ எடுத்துக் காட்டி திருமெனி
13. யிலெசாத்தக் கடவதாகவும் இதுக்குஆ
14. ண்டு மொன்றுக்கும் நாற்பது பணம் குடுத்தொம் சந்திரா
15. தித்தவரை செல்விக்கச் செம்பிலும் சிலையி லும் வெட்டிக்
16. குடுத்தொம் நாயினார் எடுத்தகை அழகிய நாயனார் வட
17. பரிசார நாட்டில் நாட்டொம் இப்படிக்கு எங்கள் மகன் சந்தி
18. ராதித்தவரை செவிதாக நாட்டவர் பணிக்க நாட்டு கண
19. ....தெவன் எழுத்து.

எண்–62

இடம் : அழகப்பெருமாள் கோயில் கருவறை வடக்கும் மேற்கும்
அரசன் : கோச்சடபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீசுந்தர பாண்டியன்ய (யா. 24) கி.பி.1276
செய்தி : வடபரிசார நாட்டு வியாபாரிகள் எழுந்தருளச் செய்த மணவாள ஆழ்வார்க்கும் நாச்சிமார் இருவர்க்கும், உடையார் அதிகைமானார் உகந்தருளப் பண்ணின காளிங்க நர்த்தனப்பிள்ளைக்கும் அமுதுபடிக்கு அரிசியும் கறியமுது வெஞ்சனம் உட்பட்டனவற்றிற்கு ஆண்டொன்றுக்குப் பணம்

பத்தும் பரிசாரகனுக்கு ஆண்டுக்கு ஆறுகலம் கம்பும் புடைவை முதலுக்கு(ஆடைக்கு) பணமும் கோயில் கருவறையில் கைங்கர்யம் செய்வார் மேற்பார்வை செய்வார் கணக்கர் ஆகியோரிடம் வழங்க இசைந்து கல்வெட்டி வைத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ கொற்சடபன்மர(ா)ன திரபுவன (சக்) கரவத்திகள் ஸ்ரீசுந்திரபாண்
2. டிய தெவற்கு யாண்டு 24 வது வடபரிசார நாட்டுக் செவூரான செம்பியன்
3. கிழானடிநல்லூர் திருமெற்கொயி(ல்) நாயினார் அழகப் பெருமாள் கொயில் ஸ்ரீவயிற்
4. றின் கண்காணி செய்வார் ஸ்ரீக(ா)ரியம் கொயிற் கணக்கற்கு வடபரிசாரநாட்டு வியா
5. பாரிகளொம் திட்டுக்குடுத்த பரிசாவது இன்னாயினார் கொயிலில் நாங்கள் உகந்த
6. ருளப் பண்ணின மணவாள ஆழ்வாற்கும் நாச்சிமார் இருவற்கும் உடையார் அ
7. திகைமானார் உகந்தருளப் பண்ணின களிசமத்தன........ (ள்)ளைக்கும் இவ்வாட்டை
8. கார்த்தி(ம) மாதமுதல் இன்னாய(னாற்)கு நாளொன்றுக்கு அமுதுபடிக்கு கொங்குந.............
9. கறியமுது விஞ்சனம் உட்பட்டன வற்றுக்கு ஆண் டொன்று(க)குப் பணம் பத்தும் .... (கொயி)
10. லில் பரிசாரகற்கு ஆண்டொன்றுக்கு கண்பு அறுகலமும் புடவை முதலுக்குப்(ப)......
11. இவ்(வ)கைப்படியாறுள்ளவை இன்னாள் முதல் சந்திராதித்தன வரை எங்கள் மக்கள்
12. மக்கள் செலுத்து வொமாகவும் இப்படிக்குச் செம் பிலுஞ் சிலையிலும் வெட்டிக் குடுத்(த)
13. வ்வனைவற்கும் வடபரிசாரநாட்டு வி(யா)பாரிகளொம்

எண் – 63

இடம் : அழகப்பெருமாள் கோயில் கருவறை தெற்கு ஜகதி

அரசன் : கோமாறவர்மரான ஸ்ரீசுந்தரபாண்டியன் (யா. 24) கி.பி.1276

செய்தி : நரையனூர் நாட்டுப் பராந்தகன் (ஊர் ?) அரசிறை வரிக்கணக்கு அதிகாரிகளில் சொக்கன்பாவையான அதிகைமானாரிடம் சேவூர் அழகப்பெருமாள் உபையத்துக்கு சேவூர் ஊரும் ஊராளிகளும் பெற்றுக்கொண்ட பணம் பத்துக்கு வெள்ளிக்கிழமை ஒன்றுக்கு சில கடமையைச் செய்வதாக இசைந்து கல்வெட்டிக் கொடுத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ (கொமாற) பன்(ம)ரான திரிபு வனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தெவற்க்கு திருவெழுத் திட்டுச் செல்லா நின்ற (நல்)லி யாண்டு 24வது ஆனிமாதம் முதல் நரையனூர் நாட்டு பராந்தகன்
2. (ரா)சி புரத்து..... (புரவ(ரி) யாரில் (ந)க்கன் பாவையான அதிகை மானாற்க்கு வடப(ரிசார) நாட்(டு) செவூ(ரா)ன செம்பியன் கிழாநடி நல்லூர் ஊரும் ஊராளிகளொம் திட்டிக்குடுத்த பரிசாவது மெற்படியூர் திருமெற்க் கெ(காயில் நா)
3. (யனார்) அழகப் பெ(ரு)மாள் விண்ணகர் எம் பெருமா(னு)க்கு உபையத்துக்கு வாங்கினபணம் 10 இப்பணம் பத்துக்கு வெள்ளிக்கிழமை ஒன்றுக்கு ஒரு தெங்காய் முடி......சந்திர(ா)தித்த (வரை) சந்ராகிததவரை
4. பொதுவொமா(கவும்) (இப்)படிக்கு செம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் கொள்ளப் பெறுவதாகவும் இப்படி சம்மதித்து உபை(யதி)ட்டு குடுத் தொம் செவூர் ஊரும் ஊராளி (க)ளொம் அதிகைமானாற்க்கு இவெஸ்ரீ வைஷ்ண(வ) ரக்ஷை.

எண்–64

இடம் : அழகப்பெருமாள் கோயில் கருவறை – தென்புறம்
அரசன் : சுந்தரபாண்டியன் (யா. 24) கி.பி.1276
செய்தி : சேவூர் திருமேற்கோயிலுக்கு படை, உத்தரம், எழுத்தகம் ஆகியவற்றை விடைப்பேரில் மலையாளரும், ஆரிவாரும் கன்னடியரும், தெலுங்கரும் சவளக்காரரும் தன்மமாகச் செய்து கொடுத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொற்சடபன்மரான திரிபுவன ச் சக்கரவத்திகள் சிரிசுந்தரபாண்டிய தெ
3. வற்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்
4. ற திருநல்லியாண்டு 24 சவது வடபரிசா
5. ர நாட்டுச் செவூரான செம்பியன் கிழானடி
6. நல்லூர்த் திருமெற்கொயில் நாயினார் அழக
7. ப் பெருமா(ள்) கொயிலுக்கு உடையார் அ
8. திகைமானானர் நா(ளி)ல் விடை(ட)ப்பெரில் மலை
9. யாளரும் ஆரிவாரும் கந்(னா)டியரும் தெலுங்கரு
10. ம் சவளக்காறறும் செய்வித்த படை உத்தரமும்
11. எழுத்தகமும் இரண்டு படையும் இவர்கள் த
12. ன்மம்

எண்–65

இடம் : அழகப்பெருமாள் கோயில் மகாமண்டப மேற்குச்சுவர்
அரசன் : சுந்தரபாண்டியன் (யா. 27) கி.பி.1243
செய்தி : கோலிய நகரத்தார் சேவூர் அழகப்பெருமாள் கோயிலில் தங்கள் தன்மமான சில செப்புத் திருமேனிகளை(?) எழுந்தருளச் செய்தனர். கல்வெட்டுச் சிதைந்துள்ளது.

கல்வெட்டு

1. ஸ்ரீதிரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தெவற்குத்தி
2. ரு (வெழுத்திட்டுச்) செல்லாநின்ற திரு நல்லியாண்டு 27 ஆவது ஆவணி மாதமுதல் வடபரிசார நாட்டு
3. க்(கொலியநகரத்)தொம் மெ(ற்படி) நாட்டில் செவூரான செம்பியன் கிழான(டி) நெல்லூர்த் திருமெற்
4. கொ(யில்)... (அழ)கப் பெருமாளான சுந்தரபாண்டிய விண்ணகரா எம் பெருமான் கொயிலில் செல்
5. வ........... யாமலாரையும் எங்கள் தன்மமாக எழுந்தருளுவித்தொம் இவர்களுக்கு ஆண்டொ
6. ன்.............நம.................ந்த (பரிசா) முதல் குடுத்து இவர்களுக்கு எற் பெற் பட்டனவுமிகுதிக் குறையாரா
7. ஞ்சு............ இப்படிக்குடுத்(து) தன்மஞ்செய்தொம் வடபரிசாரநாட்டுக் கொலியநகர
8. த்தொம் (இ)ப்படிக்கு இவை ஸ்ரீ வெஷ்ணவரக்ஷை.

எண்–66

இடம் : அழகப்பெருமாள் கோயில் கருவறை வடக்கு ஜகதி.
அரசன் : கோவிராசகேசரி வீரபாண்டியன் (யா. 11) கி.பி.1276
செய்தி : சேவூர் வெள்ளாநாட்டாரும் பூலுவ நாட்டாரும் இக்கோயில் நம்பிமார்க்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் எழுதிக் கொடுத்த உறுதிமொழி, இந்நாயனார் சித்திரைத் திருநாள் எழுந்தருள்வதற்காக இவர்கள் நீர்வார்த்துக் கொடுத்த ஊரின் வருவாயால் இத்திருநாள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொவிராச கெசரிப் (பன்மரான திரிபுவனச்சக்) கரவத்திகள் ஸ்ரீவிர பாண்(டிய தெவற்கு யா)ண்டு 11 வது வடபரிசாரநாட்டு செவூரான செம்பியன் கிழாநடிநல்லூர் நா(யினார்) அழகப் பெருமாளான சுந்தர பாண்டிய
2. விண்ணகர எம்பெருமான் கொ(யி)ல் நம்பி மாற்கும் ஸ்ரீவை(வயி)ஷ்ண வர்களுக்கு இன்னாட்டு

வெ(ளாநாட்டொ)மும் பூலுவ நாட் டொமும் பிடிபாடு குடுத்(த) (பரிசா)வது இன்னாயினாற்கு பெரிய நாட்டார் நாளொன்று சித்திரைத் திருநாள் எழுந்

3. தருளுவதாக நாங்கள் 11-வது முதல்குடி ஏற்றிக் கொள்வ(த)ாக நாங்கள் நீர்வார்த்துக் குடு.......... மருதூ நான்கெல்லைக்குட் பட்ட நில நன்செய் புன்செய் கிணறு தொட்ட(ம்) மற்று(மெ)ப் பெற்பட்ட நிலமும் யகவது முதல்

4. குடிஏற்றிக்கொள்ள சந்திராதித்தவரை இறையிலி யாக செம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக்கொள் வார்களாகவும் இப்படி உதகம் பண்ணிக்குடுத்தொம் வெளா நாட்டொமும் பூலுவ நாட்டொமும் (இ)ப்படிக்கு நாட்டா(ர்)

4. பணிக்க நாட்டுக்கணக்கு ஆரிலாதித்த தெவன் எழுத்து.

எண்–67

இடம் : அழகப்பெருமாள் கோயில் அர்த்தமண்டப தென்புற அதிட்டானம்

அரசன் : இராசகேசரி வீரபாண்டியன் (யா. 15) கி.பி.1280

செய்தி : சேவூர் வெள்ளாநாட்டாரும் பூலுவ நாட்டாரும் அழகப்பெருமாள் அமுதுபடி உள்ளிட்ட விஞ்சனங்களுக்கு திருவிடையாட்ட இறையிலியாக காரையப்பாடி என்ற ஊரை நீர் வார்த்துக் கோயில் நம்பிமார் ஸ்ரீவைஷ்ணவர்களிடம் கொடுத்தனர். நான்கெல்லைக்குட்பட்ட நன்செய், புன்செய் முதலியவற்றால் கிடைக்கும் வருவாயால் இக்காரியங்கள் நடைபெற ஏற்பாடாயிற்று.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ கொலிராச கெசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விரபாண்டிய தெ(வற்)கு யாண்டு 15 ஆவது வடபரிசார நாட்டுச் செவூரான செம்பியன் கிழாநடி நல்லூர் நாயனார் அழ

2. கப் பெருமாளான சுந்தர பாண்டிய விண்ண கர எம்பெருமாள் கொயில் நம்பி மாற்கு ஸ்ரீவைஷணவர்களுக்கும் இன்னாட்டு வெளாநாட் டொமும் பூலுவ நாட்டொமும் பிடிபாடு குடுத்த பரிசாவது இ

3. ன்னாயனாற்கு அமுதுபடி உள்ளிட்ட விஞ்சனங் களுக்குத் திருவிடையாட்ட இறையிலி ஆக 15வது முதல் குடிஏற்றிக் கொள்வதாக நாங்கள் நிர் வார்த்துக் குடுத்த காரையப் பாடி நான்கெல்லைக்குட்பட்

4. ட நிலமு நஞ்செய்புன்செய்கிணறு தொட்டம் எப்பெற்பட்ட நிலமும்15வது முதல் குடி ஏற்றி கொள்ள

செம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் கொள்வாராகவும் நாட்டவர் சொல்லிப பணிக்

5. க இப்படிக்கு நாட்டுக் கணக்கு மன்னியூராண் டான் எழுத்து

எண்–68

இடம் : அழகப்பெருமாள் கோயில் கருவறை மேற்குச்சுவர்

அரசன் : வீரபாண்டியன் – கி.பி.1284

செய்தி : வடபரிசார நாட்டு வியாபாரிகள் சுந்தரபாண்டிய விண்ணகர அழகப்பெருமாளையும் நாச்சியாரையும் தங்கள் தன்மமாக எழுந்தருளச் செய்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ விரபாண்டிய தெவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லியாண்டு பத்தொன்பதாவது ஆவணி மூ30 ந்தியதி வடபரிசார நாட்டு வி

2. யாபாரிகளொம் மெற்படி நாட்டில் செவூரான செம்பியன் கிழானடி நல்லூர் திருமெற்கொயில் நாயினார் அழகப் பெருமாளான சுந்தரபாண்டிய விண்ணகர எ

3. ம் பெருமான் கொயிலில் மணவாள ஆழ்வாரையும் நாச்சி மாரையும் எங்கள் தந்மமாக எழுந்தருளி வித்தொம் வடபரிசார நாட்டு வியாபாரிகளொம் ஸ்ரீ வயிற்று வை

4. (ஷ்)ணவரகைஷ.

திருமுருகன் பூண்டி

எண்–69

இடம் : திருமுருகன்பூண்டி திருமுருகநாதர் கோயில் தெற்கு மேற்கு மற்றும் வடக்கு ஜகதியில் உள்ளது.

அரசன் : கோனேரின்மை கொண்டான்–சுந்தரபாண்டியன்

செய்தி : இவ்வரசன், இக்கோயில் தேவகன்மிகளிடம் நான்கு எல்லைக்குட்பட்ட நிலத்தை நிவந்தங்களுக்காகத் தானமாக வழங்கி ஆணைபிறப்பித்தான். இதில், நம்பியாரூரரை வழிப்பறி செய்த இடம் அந்நிலத்தின் எல்லையாகக் குறித்திருப்பதும் தேன்படுகாடும், மீன்படு சுனையும் பொன்படு குட்டமும் சேர்த்துக் கூறியிருப்பது அறியத்தக்கது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொநெரிமெல்கொண்டாந் ஆளுடயார் திருமுருகன் பூண்டி யாண்(டார்) கொ(யி)ல் தெவகந்மிகளுக்கு நம்மொலை குடுத்தபடியாவது மத்தடக்கி கடவுக்கு மெற்கும் கு(ரு)... பட்ட பாறைக்கு (வடக்)கும் ஆளுடைநம்பியை திருமுருகன் பூண்டி ஆளுடையார் அடிச்சுப் பறிச்சுக் கொண்ட பெரியபாை(த)... குக் கிழக்கும் கெணிக்குத் தெக்கும் இன்னு-

2. ன் கெல்லைக்குட்பட்ட தறை ஆளுடையார் திருமுரு(க)ந் (பூண்)டி யாண்டார்க்கு குடுத்தொம் இத்தால் வ(ந்)த இறை புரவு சிற்றுயம் எலவை யுகவை மந்று பாடு தெண்டகுற்றம் சுமை சு(ங்க)ம் சாரிகை தெந்படு...டு மிந்படுசுளனை பொரந்படுகுட்டம் மற்றும் எற்பயற்பட்(ட)னவும் இந்நாயநாற்கு உதகம் பண்ணிக் குடுத்தொம் உ(த்தம)சொழ தெவநெந்யிது செம்பிலும் சிலையிலும் வெட்டி

3. க் கொள்வதாகவும் யிது நந்தமர் பாற் படுத்துக்கு ....யிது மாற்றுவாந் வழி(எ)(ழெ)ச்சமறுவாந் யிப்படிக்கு செம்பியந் மந்திரி எழுத.

எண்–70

இடம் : திருமுருகநாதர் ஆலய தெற்கு ஜகதியில் உள்ளது.
அரசன் : விக்கிரமசோழன்(யா4)
செய்தி : இவ்வூரில் வாழும் தவசியரில் நம்பிகாளியனான பழையன் திருமுருகன்பூண்டி ஆலய ஆராவமுதக்கூத்தர்க்கு பெரிய திருமஞ்சனமாட வேண்டிய பொருள்களுக்கு ஸ்ரீபண்டாரத்தில் ஒடுக்கின பணத்தின் வட்டியைக் கொண்டு இவை நிறைவேற்றுவதாகக் கல்வெட்டிக் கொடுத்தான்.

கல்வெட்டு

1. (ஸ்வஸ்திஸ்ரீ விக்கிர)ம சொழதெவற்கு யாண்டு 4- வது மார்கழி மாதம் ஆளுடையார் திருமுருகந் பூண்டி நாயநா(னு)ர்க் கும்பிட் டிருக்கும் தவசியரில் நம்பி காளிய--------------

2. ....(ன்கு) பழை(ய) நெந் ஆளுடையார் ஆராத கூத்தற்குப் பெரிய திருமஞ்சணம் ஆடி அருள வெண்டும் பஞ்சதிரவியமும் பஞ்சர அமுதமும் தெந்நாழி---------

3. .....(டிநா)ழி இளநிர் உயரு (25) திருவிளக்குக்கும் அமுதுக்கு நெய்காணநாழி அடிக்கிழ் பரப்ப நெல்பதக்கு பூசிக்க தக்ஷிணை அரைப்பணம் திருமஞ்(ச)ணம் எடுக்கக்

காற்ப்பணம் அமுதுபடி அரிசி
4. ------க்கு.......ங் கறியும் உப்பும் மிளகும் அடைக்கா இலையமுதும் இது(க்)கு சிரி பண்டா--------- உபையங்கொண்டு சந்திராதி- த்தவரை செல்வதாக (இதுப)ந் மாஹெஸ்வரரகெஷ.

எண்—71

இடம் : திருமுருகன்பூண்டி திருமுருகநாதர் கோயில் மேற்கு மற்றும் தெற்கு ஜகதியில் உள்ளது.

அரசன் : ராஜராஜதேவன் (யா3)

செய்தி : இவ்வரசன் வடபரிசாரநாட்டுக் கலையனூர் ஊரார் ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய எண்ணெயில் திருமுருகன்பூண்டி மகாதேவர்க்கு திருநந்தாவிளக்கு எரிக்க ஆணைபிறப்பித்துக் கல்வெட்டுவித்தான்.

கல்வெட்டு

1. ராஜதெவநெ எமக்கு செல்லா நிந்ற யாண்டு முந்ருவது வடபரிசாரநாட்டு கலையநூரிலி ஊரார் ஆட்டைக்கு கடவ இறை எண்ணையில் லெ திருமுருக பூண்டி மஹாதெவற்கு திரு நந்தா(ன) விளக்கு ஒந்றுக்கு நித்த-
2. ம் எண்ணை காண ஆழாக்காக நாளொந்றுக்கு எண்ணை காணம் நாற்பத்து ஐஞ்ஞாழி எண்ணை நம் இறையில்லெ நிக்கிக் குடுத்தொம் சந்திராதித்தவரை செல்வதாகவும் செம்பி(ல்)லுஞ் சிலையி(ல்)
3. லும் வெட்டிக் கொள்வதாக நம்ஓலை குடுத்தொம் நந்தன எற்பெயற்படாரும் பாற்ப டுத்து குடுக்க இது மாற்றுவாந் எழெச்சம் அறு வாந் இதுபந் மாஹெஸ்வரர கெஷ.

எண்—72

இடம் : திருமுருகன்பூண்டி திருமுருகநாதர் கோயிலில் மேற்கு மற்றும் தெற்கு ஜகதியில் உள்ளது.

அரசன் : கோனேரின்மை கொண்டான்(யா 4)

செய்தி : இவ்வரசன் இக்கோயில் தானத்தில் உள்ள சிவபிராமணர், உவச்சர், தேவரடியார் ஆகியோர் வழங்கிய தானத்தையும், சுமை, சுங்கம் ஆகிய வருவாய்களையும் ஆளுடையார் திருமெய்ப்பூச்சுக்குக் கொடுத்ததாக ஆணை பிறப்பித்தான் (இக்கல்வெட்டின் பிற்பகுதியில் ஸ்வஸ்தஸ்ரீ ராஜாதி .... என்பது காணப்படுகிறது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொனெரின்மை கொண்டான் ஆளுடை

யார் திருமுருகந் பூண்டியார் கொயில் தெவகன் மிகளுக்கு நம் ஓலை குடுத்த படியாவது இத்தானத்தில் சிவ....

2. ப்பிராமண உகச்சர் தெவரடியா(ர்) தவநடை தாநப் பெறும் சுமைசுங்கமும் ஆளு(டை)யார் திருமுருகந் பூண்டி யாண்டாற்கு நாலாவது முதல் திருமெ(ய்)ப்புச்சும் குடுத்தொம் இப்படிக்கு

3. செம்பிலும் சிலையிலும் வெட்டி கொள்க இவை இவ(ர)டத் தரையந் எழுத்து நந்தமார பா படுத்து கொள்க இது பந்மாயெசுரர்ரக்ஷை.

எண் – 73

இடம் : மேற்கு தெற்கு ஜகதியில் உள்ளது
அரசன் : வீரராசேந்திரன் (யா. 27) கி.பி. 1234
செய்தி : சேவூரிலிருக்கும் கைக்கோளரில் காளி அவிநாசியான எல்லமாத முதலி திருமுருகன் பூண்டி நாயனார்க்கு திருமஞ்சனம் 50குடம் நாளொன்றுக்கு எடுப்பானுக்குக் கூலியாகப் பணம் வழங்கியது (பிற்பகுதி சிதைந்துள்ளது).

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ முருகன் பூண்டி நாயனுறக்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு இருபத்தியெழாவது சுவத்திஸ்ரீ விரரா செந்திரா

2. தவற்கு யா......றுக்கு இக்கொயில்.....(சே)ச வூரிலிருக்கும் கைக் கொளரில் காளி அவிநாசியான் எல்லதமாத முதலி வட

3. ராசராசபுரத்து பிராமணர் அவிநாசி....(பூ)ண்டி நாயனுறக்கு திருமஞ்சனம் ஐம்பதிங்குடம் நாளொன் றுக்கு.... வல்ல சொழக்கா...ஆ(ளுடையார்)

4. மையாரில் விச்சாந்தரைக்கா.....ன் ஆணை அச்சு சிரியக்கி பழஞ்சலாகை அச்சுமுன்றும் பணம் முன்றும் மெற்படி

5. ......ய தெவநெந்.......தவரை குடங்கொண்டு கொயில் புகுவாரில்........நக்கும் தட்டாரில் பறையன் சொண்டநான் செனுதிபதி தட்ட னும் வீரட்டன் சொற்நா.....வல்ல.

எண்–74

இடம் : திருமுருகன்பூண்டி திருமுருகநாதர் கோயில் முகமண்டபம்
அரசன் : வீரபாண்டியன், கி.பி. 1265 – 85
செய்தி : சோழ மண்டலத்து வடகரை விருதராச பயங்கர வளநாட்டு தனியூர் சுந்தரபாண்டிய சதுர்வேதி மங்கலம் கற்பகச்சேரி சூரியபட்டனுக்கு தர்மதானமாக அரசனால் நீர்வார்த்துக்

கொடுத்த மனைக்கும் விளைநிலத்துக்கும் நான்கு எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளன (கல்வெட்டின் இடைப்பகுதிகள் சிதைந்துள்ளன).

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ தண்டீஸ் வரன் ஓலே சாகரஞ்சூழ் வையகத்துக் கண்டீஸ் வரன்கரும் மாராய்க - பண்டே
2. அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தார் பாதம் திறம்பாமல் சென்னிமேல் வைத்து
3. நம்பக்தர்களில் சோழமண்டலத்து வடகரை விருதராச பயங்கர வளநாட்டுத் தனியூர் ஸ்ரீவிரநாரா யணனுன சுந்தரபாண்டிய சதுர்வெதி (மங்கலத்து)ஸ்ரீ
4. கற்பகச் செரிகுண்டு எம்பிள்ளானுன சூரியபட்டனுக்கு உதகபூர்வ தம்மதானமாக நம்மொலே குடுத்தபடியா வது விய சம்வஸ்திரத்து மாசி மாதத்து.........
5. ல் நாம் இவனுக்கு உதகம் பண்ணிக்குடுத்தமனேக்கு விளே நிலமுமாவது உடையார் திருமுருகன் பூண்டி ஆளுடைய நாயனுற் திருமடை விளாகத்து..........
6. தமனேக்கு எல்லே ஆவது வடக்கில்த் திருவீதியில் வடசிறகில் மெற்கடையகுடுத்த மனைக் கெல்லேயாக கீழ்பாற் கெல்லே...........
7. உலகுய்ய வுழு(த) மனேக்கு மெற்குந் தென்பாற்கு எல்லே திருவீதிக்கு வடக்கும் மெற்பாற்கெல்லே மலத்திரு வீதியில் க........ர..................
8. க்கும் வடபாற்கெல்லே குளங்கரைக்குத் தெற்கும் ....மனேயும் ஆவதாகவும் இந்நாயனுற் தெவதான..............கரைவழிந
9. ....ப் பட்ட மண்ணரையில்..............
10. மெற்பாற்கெல்லே திருவரங்கவதிக்குக் கிழக்கு வடபாற் கெல்லே வாய்க்காலுக்கு (தெற்கு).......... ஆக இந்நான்கு எல்லைக்குட்பட்ட தடிப்பல.....விதை...
11. இந்த மனேநிலமும் இவனுக்கு உதகபூர்வதன்மமாக இந்நாளில் குடுத்தொம்.........................விளே நிலம் ....(ஐ)ங்கலமும் விலே ஒற்றி தம்ம தான சித்தநம்.............
12. சர்வபிராப்திகளும் உரித்தாகக் கடவதாகவும் இப்படி குடுத்த மனே நிலத்துக்கும் விளேநிலத்து விதை (ஐ)ங்கலத்துக்கு கடமை குடிப்பாடு வெட்டி த...............வை...........மற்று..................
13. மற்றும் இந்த மனேயாளும் விளேநிலம் விதை ஐங்கலத் தாலும் நம்....................அனுபவித்து பாது............... வானுகவும் இப்படிக்கு உதகபூர்வ
14. ....குடுத்தொம் இப்படிக்கு.......................
15. இவைமாடபத்தியம் உலகுய்ய உழுதவர் எழுத்து

இப்படிக்கு....................ஆனந்தன் உத்தம...........எழுத்து இப்படி இவை அவிநாசி அப்பன் எழுத்து இப்படிக்கு பைரவப்

16. பெருமாள் எழுத்து இப்படிக்கு இவை முதலியான் எழுத்துஇப்
படிக்கு இவை அடிக் கிழத்தன்............ ஆனந்தக் கூத்தன் எழுத்து இப்படிக்கு.......................

17. ழித்தான் எழுத்து இது பன்மாஹெஸ்வரரக்ஷெ.

எண் – 75

இடம் : திருமுருகநாதர் கோயில் அர்த்தமண்டபத்துக் கிழக்குச்சுவர் அந்தராளத்தின் ஓரம்.

அரசன் : வீரசோழதேவன் (யா 18) கி.பி. 1201

செய்தி : இராசராசபுரத்திலிருக்கும் பிள்ளைப்பேருடையார்கள் திருமுருகன்பூண்டி நாயனார் கோயில் க்ஷேத்ர பாலப்பிள்ளை யாருக்கு (காலபைரவர்க்கு) அமுதுபடிக்கு வேண்டிய அரிசிக்கு நான்கு எல்லைக்கு உட்டபட்ட நிலம் தானமாக வழங்கினர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொ விராச கெசரி பன்மரான
2. திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிர சொழ தெவற்க்
3. கு யாண்டு பதின் எட்டாவது ரெயதுநாட்டு இ
4. ராச ராச புரத்திருக்கும் பிள்ளைப் பெருடையார்கள்
5. தி பல .....னும் எந்தம் பாண்டிய தெ
6. ....வ வொம் ஆளுடையார் திரு
7. முருகன்பூண்டி நாயனார் கொயில் க்ஷெத்ர பா
8. ல பிள்ளையார்க்கு தம்மம் மா கெ
9. நானாழி அரிசிக்கு உட்படுகையில் இந்நில
10. த்துக்கு எல்லை ஆவது கொயில் நாட்டுக் கிழவர்
11. மன்றாட்டு செய்க்கு மெற்கும் நிலமாநார்செய்க்
12. கு தெற்கும்அரங்க மெட்டுக்கு போகிற...கவருக்கு கி
13. ழக்கும் ஊராளி (......)ழகிற் கவருக்கு வடக்கும் (இந்நா)
14. ந் கெல்லைக்கு உட்பட்ட நிலம் விளைஞ்சு வருகிற
15. கலநெ இருதூணி குறுணி நெல்விதையும்
16. திருந்தாநிலம் மெடும் ப...............
17. ள் வாராகவும் இது சந்திராதித்தவரை செல்வதாகவும்.

எண் – 76

இடம் : அர்த்தமண்டப தென்சுவரில் உள்ளது.

அரசன் : குலோத்துங்க சோழன் (யா 3) கி.பி. 1152

செய்தி : இவ்வூரில் அகோர சிவன் என்பவர் இங்குள்ள அணைநீர் பாய்ந்து

விளையும் இறைநெல்லில் ஒரு பகுதியை இங்குள்ள திருமடத்துத் தவசியர்கள் அமுதுசெய்வதற்காக ஒதுக்கிக் கொடுப்பதாகக் கல்வெட்டுவித்துள்ளான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிவுவனச் சக்கரவர்த்தி'கள் ஸ்ரீகுலொத்து ங்க சொழ தெவற்கு யாண்டுமூன்ருவது ஆணித்திங்கள்
2. ....ப் பெரியு(ம்) அணையில் விளஞ்ச பொக த்தில் இறை நெல்லில் காணம் பதின்கல நெல்ஆண்டு........ம
3. டத்திலெ தபசியர் அமுதுசெய்ய நித்தகலம் ஒன்றுக்கு நாள்ஒன்றுக்கு அரிசிஅய்ழக்குக்கு..............
4. னுருகலனெ இருதூணிபதக்கு நானுழி உரிஆழாக்குக் காணத்தால் தால் நெல்நாற்கலென இருதூணி முக்குறுணி.........
5. புதூணிஆக ஆண்டொன்றுக்கு அதியமாசம் அகப்பட காண நாழியாற் கண்புற்றுக் கலத்துக்கு நீங்கு நெல் முக்குறுணி..........
6. ....வதாகவும் இப்படி சந்திராதித்தவரை செல்வதாக கல் வெட்டுவித்தென் அகொரசிவ னென் இதுபன்மா ஹெஸ்வரரக்ஷெ.

எண்-77

இடம் : முகமண்டபம் தென்புறம் கிழக்கு நோக்கிய மடிப்பில் உள்ளது.

அரசன் : கோனேரின்மை கொண்டான்

செய்தி : திருமுருகன்பூண்டி நாயனார்க்கு அமுதுபடிக்கு நாளொன்றுக்கு நாழியாக அஞ்சிரண்டு விகிதப்படி நெல் அளக்க நிலமோ ஊரோ தானம் அளிக்கப்பட்டிருக்கலாம் (பிற்பகுதி சிதைந்துள்ளது).

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொனெரி மெல் கொண்டான் ஆளுடையார்
2. ஆளுடையார் திருமுருகன் பூண்
3. டி நாயனுற் கொயில் தெவகன்மிகளுக்கு ந
4. ம்ஓலெ குடுத்தபடியாவது ஆளுடையார்
5. திருமுருகன் பூணடி யாண்டாற்கு திருவமுதுப
6. டி நாள் ஒன்றுக்கு அருசி நானுழியாக அஞ்
7. சிரண்டு நெல்குறுணி.

எண்-78

இடம் : திருமுருகன்பூண்டி திருமுருகநாதர் கோயில்

அரசன் : கோனேரின்மை கொண்டான்........
செய்தி : திருமுருகன்பூண்டி நாயனார் திருப்பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளப் பண்ணி அமுதுபடிக்கான அரிசிக்கும் வெஞ்சனங்களுக்கும் பெரிய அணையும் அணைக்கீழுள்ள பூமியும் தானமாக வழங்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொனரின்மை கொண்டான் ஆளுடையார் திரு
2. முருகன் பூண்டியாண்டார் கொயில் தெவகன்மி களுக்கு நம்ஓ
3. லேகுடுத்த படியாவது..............பூண்டி ஆளுடையார் திருப்பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளுவித்து
4. ....க வெவ பெரி(ய) அணையும் அணைக் கீழ் பூ(மியு)
5. ......பரகெசரியால் குறுணி நானாழி அரிசியும் வெஞ்சனங்களுக்கு........
6. சந்திராதித்தவரை செல்வதாக நம்மொலே குடுத்தொம் செ
7. ம்பிலும் சிலேயிலும் வெட்டிக் கொள்வாராக ....

எண்–79

இடம் : அந்தராள வடக்கு வாயில் மேல்
அரசன் : கோனேரின்மை கொண்டான் (யா 3வது நாள் 301)
செய்தி : திருமுருகன் பூண்டிக்கோயில் சிவபிராமணரில் காசியவன் பிள்ளை நாயனான பொன்னம்பல நம்பிக்கும் பொன்ன புகழ்வேந்தனுக்கும் சிவப்பிராமணக் காணி பற்றிச் சிக்கல் ஏற்பட்டுக் குலவெட்டும் உண்டாயிருக்க இவ்வரசனிடம் இது பற்றி முறையிட்டனர். கல்வெட்டுச் சிதைந்துள்ளதால் தீர்வு தெளிவாக இல்லை.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் கொனெரிமெல்
2. கொண்டான் வடபரிசார நாட்டில் ஆளுடையார் திருமுருக
3. ன்பூண்டி ஆளுடையார் கொயில் சிவபிராமணரில் காசியபன் பிள்
4. ளைநாயனுன பொன்னம்பல நம்பிக்கும் பொன்ன புகழ் வெந்த
5. நுக்கு நம்மொலை குடுத்தபடியாவது இந்நாயனார் கொயில்
6. சிவபிராமணக் காணிதங்களது மாதவகள் பெசிக்குல வ
7. ட்டு முண்டாயிருக்க தம்பியான நா வெமுருகாண்டான்

8. அஞ்சவைத்து தங்காணியை அழிவு செய்கையாலெ
9. தாநமக்கு மூன்றாவது நாளிலெ நம்பக்கலெ..........எங்கள்
10. காணி எங்களுக்கு ஆக வெணுமென்று நமக்கு தரும் அச்சு பத்
11. தும் தொண்டை மானார் பெறுவமுண்மைக்கு அச்சு மஞ்சும்
12. அச்சு பதினைஞ்சும் தாங்கள் வைக்கையில் இக்கொயில்
13. ரையநித..........த்தியங்களும் சைவாசாரி
14. யங்களும் மு..........ல கல..................
15. பவிக்கவும் ....கொயில் பரிகலக்கடு பண்ணி
16. க நாழியும்............ந படியில் அட்டீது செம்பாத
17. யும் அட்டீது.........அச்சந பொகமும் பிடி பி
18. டியிலும்........... இந்நான்கு எல்லைக்கு உட்பட்ட
19. தெவதாநமும் எழுத்து..........பட்டன் மற்றும் எற்
20. பட்டனவும் தன் மகன் மக்களுக்கு விலை ஒன்றி தன்ம
21. தானம் சீதனத்துக்கு உரித்தாகவும் இப்படிக்குச்
22. செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்ளப்
23. பெறுவானாகவும் இப்படிச் சந்திராதித்தவரை
24. செல்வதாக நம்
25. ஓலை குடுத்தொ
26. ம் 3 ஆவது நாள்
27. 301 இவை நந்
28. தியம்மந் எழுத்து
29. ....

எண்–80

இடம் : திருமுருகன்பூண்டி திருமுருகநாதர் கோயில் முகமண்டப வடகுவர்ப்பட்டி

அரசன் : வீரராசேந்திரன் (யா 44 சித்திரை) கி.பி.1251

செய்தி : இக்கோயில் சிவபிராமணரில் சீகாழியான் முதலிய நால்வரும் இக்கோயில் ஸ்ரீபண்டாரத்தில் பெற்றுக் கொண்ட ஆனையச்சுக் கொண்டு இரண்டு திருநந்தா விளக்கும், முன்புதொட்டு எரிக்கப்பட்ட இரண்டு நந்தா விளக்கு ஆக 4 விளக்குகளையும் எரித்து வருவதாகக் கல்வெட்டிக் கொடுத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராசெந்திர தெவற்கு யாண்டு 44வது சித்திரைத்திங்கள் வடபரிசார நாட்டில் ஆளுடைய
2. ஏர் திருமுருகன்பூண்டி நாயனாற் கொயிலி காணி உடைய சிவபிராமன காசியப கொத்திரத்தில்.......சீ
3. காழியானும் அவிநாசி சாத்தரைக் காப்பானும் எங்கள் மக்கள் அவினாசி ......அவினாசியும் அவினாசி

முரு(கனு)
4. ம் இந்நால்வரொம் ஆளுடையார் திருமுருகன்பூண்டி நாயனாற் ஸ்ரீ பண்டாரத்தில் நாங்கள் கொண்டு.........
5. ஆணையச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை யச்சு 24 சூ இரண்டு திருநந்தா விளக்கும் மந்பட்டு வருகிற திருநந்தாவிளக்கு 2ம் ஆக விளக்கு4ம் குடம் கொடு கொயில் புகுவார் எரிச்சு வருவதாகவும், இது சந்திராதித்த செல்வதாக செம்பிலும் சிலையி
6. லும் வெட்டிக் கொள்வார்களாக. இது பன்மா கெஸ்வரரகெஷை.

எண்–81

இடம் : திருமுருகன்பூண்டி திருமுருகநாதர் கோயில் மகாமண்டப முன்சுவர் மேற்கு

அரசன் : இராசகேசரி வீரசோழன்.........

செய்தி : இவ்வரசன் திருமுருகன்பூண்டி ஆண்டாருக்கு அமுதுபடிக்கும் கறியமுதுக்கும் விஞ்சனத்துக்கும் கலிப்பாரத்துக்கும் பூஜாவிருத்திக்கும் ஆக நெல் நூற்றுப்பதின் கலத்தையும் அளக்கும்படி ஒரு சதுர்வேதி மங்கலத்துச் சபைக்கும் வெள்ளானூராருக்கும் ஆணையிட்டுக் கல்வெட்டுவித்தான்.

கல்வெட்டு

1. ஸ்ரீராகேசரி ஸ்வஸ்தஸ்ரீ கொனெரின்மை கொண்டான் தெவகன்மிக(ளு)
2. க்கு ஆளுடையர் திருமுருகன்பூண்டி யாண்டாற்கு அமுதுபடி
3. முன்னுக்கு பன்னிருநாழி அரிசிக்கு நாளொன்றுக்கு அஞ்சிரண்டு வாசி ஏற்றி(ெ)நல்
4. முக்குறுணியாக ஆண்டொன்றுக்கு நெல் நூற்றெரு பத்திரு கலநெதூணி பதக்கு(ம்)க
5. கறியமுதுக்கும் விஞ்சனத்துக்கும் கலிப்பாரத்துக் குமாக நெல்பதினெழு கலனெதூணிப்பத
6. க்கும் ஆக நெல் நூற்றுப்பதின்கலமும் பூஜாவிருத் திக்கு நெல்முப்பதின் கலமும் ஆக நெ
7. ல் நூற்றறு பதின்கலமும் வீரசோழவளநாட்டு நல்லூராணஅமர புயங்கரச் சதுர்வேதி
8. மங்கலத்துச் சபையாரும் வெள்ளானூராரும் நமக்கு இறுக்கக் கடவ இறையிலே
9. இருபதாவது கார்முதல் நிக்கி(ந)ம் மொ(லை) குடுத்தொம் வீர சொழ தெவனென் இது சந்திராதித்
10. தவற் செல்வதாக செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்வாராகவும் ....இரண்டுவரிகள் தெரியவில்லை.

எண் – 82

இடம் : திருமுருகன்பூண்டி திருமுருகநாதர் கோயில் அர்த்தமண்டப வடக்குச்சுவர்

அரசன் : உத்தமசோழன்

செய்தி : விக்கிரம சோழ வளநாட்டிலுள்ள ஊரில் இருந்த வயலில் விளைந்த நெல்லில் ஒரு பகுதியையும், முருகன்பூண்டிப் பெருவாய்க்கால் நீர்பாய்ந்து விளைந்த நெல்லின் ஒரு பகுதியையும் திருமுருகன் பூண்டி மகாதேவர்க்கு அமுதுபடிக்கு வழங்கும்படி கல்வெட்டிக் கொடுக்கப்பட்டது (கல்வெட்டுப் பெரிதும் சிதைந்துள்ளதால் விவரங்கள் தெளிவாகக் கிடைக்கவில்லை).

கல்வெட்டு

1. *ஸ்வஸ்திஸ்ரீ கொவிராசாதிராச ஸ்ரீ உத்தம சொழநெந் எனக்குச் செல்லாநி*
2. *ன்ற..............வதுக்கு எதிராம் ஆண்டு வடபரிசார நாட்டு கரை*
3. *......பூண்டி மகாதெவற்கு விக்கிரம சொழ வளநாட்டு விக்கிரம*
4. *..........களில் நிலத்து உள் வயலில் மாங்கால் இருகலநெதூணியும் காடெற்றால்*
5. *.................அயிக்கம் மண்ணிற் கலம் திருமுருகன் பூண்(டி) புத்தலெ மடைக்குக் கிழக்கு எழு*
6. *..........லெயாக முக்கலமும் முருகன்பூண்டி மண்ணல...... ச்ச படறத்துக் மெ*
7. *............ரு பாட்டிற் பெருவாய்க்காலுக்கு வடக்கு தெ...........ணி................பட்டன சுவர்*
8. *.................வண்ணக்க மெற்கு கலனெமுக்குறுணியும் பளிசை காயிந்தல்................*
9. *யூம் ஆக எற்றிக் காணம்தன் முக்கல்னெ தூணி பதக்குக்கு நெ.........தயும் திரு*
10. *முருகன் பூண்டி மகாதெவற்கு அமுதுபடைக்க...............தெச்சி நா*
11. *ழியாக சந்திமுன்றுக்கு அ.......ய் நநிக நாழிக்கு............ அமுது படிக்கு*
12. *குடுத்தொம் இப்படி செம்பிலும் சிலெயிலும் வெட்டிக் கொள்வார்களாக எதிராதிக்கு தவ...........*

எண் – 83

இடம் திருமுருகன்பூண்டி திருமுருகநாதர் கோயில் கருவறை வடக்குச் சுவர்ப்பட்டி வரிகளில் உள்ளது

அரசன் : வீரபாண்டியன்

செய்தி : இக்கோயில் தேவரடியாரில் ஆடக்கொண்ட நாச்சியின் மகளாகிய சவுண்டய நங்கைக்கும் மற்றும் நாச்சியின் தங்கை மக்கள் தோழியான திருவுண்ணாழியர் நங்கைக்கும் இவள் தங்கை காங்கயநாச்சியான ஆலாலசுந்தர நங்கைக்கும் இக்கோயிலில் சிறப்பித்து வழங்கப் பெற்ற வரிசைகளும், திருநாட்களில் பிச்சவேடம் பூண்டு முன்அரங்கு ஏறும் உரிமையும் வழங்கப்பெற்றனர். மேலும் திருத்தேரிலும் திருநட்டப் பூங்கோயிலில் திருநடைக்காவணம் உள்ளிட்ட ஆசனங்களில் வீற்றிருக்கும் உரிமையும், மார்கழித் திருவாதிரையின்போது திருவெம்பாவைப் பாடலுக்கு ஆடல் புரியவும் மூன்றாம் அறையான கருவறை வரை செல்லவும் மேலும் பல்வேறு முதல் மரியாதைகளும் இவர்களுக்கு ஆதிசண்டேசுவரர் அருளால் வழங்கப் பெற்றதை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு

1. தண்டீஸ்வரன் ஓலே சாகரஞ்சூழ் வையகத்துக் கண்டீஸ்வரன் கரும மாராய்க ...... பண்டே அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தார் பாதம் திறம்பாமல் சென்னிமேல் வைத்து அவர்களால் சண்டெஸ்வரன் ஆதெசம் நம்

2. உடையார் திருமுருகன்பூண்டி ஆளுடைய நாயனார் கொயில் தெவரடியாற் ஆடக்கொண்ட நாச்சிமகள்.......... பெருமாளான சவு ண்டய நங்கை(க்கு)ம் இவள்தங்கை மக்கள் தொழியான திருவுண்ணாழியர் நங்கைக்கும் இவள்

3. தங்கை காங்கய நாச்சியான ஆலால சுந்தர நங்கை க்கும் நம் ஓலே குடுத்தபடியாவது ஈஸ்வர சம்வத்சர.... ராக........ாக முதல் இவர்களுக்கு நாம் குடுத்த திருவந்தி காப்புக் குடுக்கையில் இவர்கள் திருவந்திக்காப்பும் எடுத்துப் பணியுமுறை

4. யுஞ் செய்து உடையார்க்கு பணியாக .... காலந்தொறும் திருநீற்றுக் கா.......திருக் கண்ணும டை வண்காட ....ரலியற் இக்காள ....உள்ளிட்டாரையும்....... பார்க்கவும் திருநாளுக்கு நடெ

5. ஸ்வரநாயனார் எழுந்தருளும் பொழுது முன்னரங்கு ஏறக் கடவார்களாகவும் இவர் திருமுன்பு பிச்ச வெஷம்......... ....கவும் இந்த ஹொதுசவத்துக்கு ஏறியருளும் திருதெர் திருநட்டப்பூங்கொயில் திருநடைக்கா

6. வண முள்ளிட்ட ஆசநங்க ளெறக் கடவார்களாகவும் திருமார்கழித் திருவாதிரை மூன்றா (வத) ாயுள்ள திரு வெம்பாவைக்கு கைநாட்டி மூன்றாம் அறை முதலாயுள்ள அறையுங் கடக்கக்கடவ

7. ாகளாகவும் மெற்சாத்தும் பரிவட்டமும் பெறக்கட

வார்களாகவும் இந்தத் திருவந்திக் காப்பால் வந்த பிராப்தியங்களான வரிசைகளும் பெறக்கடவார் களாகவும். இப்படிக்கு இவர்கள் மக்கள் மக்கள் சந்திரா
8. தித்தவரை அனுபவித்து வருவார்களாகவும் இப்படிக்கு செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்வார்களா கவும் (நாம் நம்ஓலே) குடுத்தொம், இப்படிக்கு அருளிச் செயல்படிக்கு தெவர்கள் சீர்காழிப் பிள்ளை எழுத்து பால்வண்ணத் தாண்டான் பெருமாள் எழுத்து - அண்ணுமலையான் எழுத்து அடிக்கிளத்தை எழுத்து சத்தி
9. ன் எழுத்து மாடாபத்தியம் காஞ்சிபுரத்து சொமனு தெவன் எழுத்து கானக் கா.......... எழுத்து கண்டியதெவன் எழுத்து - ஆனந்தக் கூத்தன் எழுத்து முத்திக்குநாயகன் எழுத்து திருவம் பலப்பட்டி காட்டிய கைய்யன் எழுத்து ஆனந் தக் கூத்தனுர் எழுத்து இவை அருளால் ஆதி சண்டெஸ்வர ஸ்ரீ கரணத்தான் எழுத்து.

எண் – 84

இடம் : திருமுருகன்பூண்டி திருமுருகநாதர்கோயில் முகமண்டப மேற்குச்சுவர் – வாயிலுக்குத் தெற்கு

அரசன் : வீரசோழன், கி.பி. 1183 – 1206

செய்தி : வடபரிசார நாட்டு திருமுருகன்பூண்டி மகாதேவர் கோயில் சிவபிராமணன் காசிபன்வெண்காடனுக்கும், திருமடை விளாகத்தில் இருக்கும் ஸ்ரீநிவந்தக்காரருக்கும் வழங்கப் பெற்ற உரிமைகளைக் குறிப்பது இக்கல்வெட்டு. வீட்டுக்கு முற்றம் வைத்துக் கட்டவும், குதிரை ஏறி வரவும், பேரிகையும் சேகண்டியும் கொட்டவும், வீட்டிற்கு இரண்டு நிலையும், இரட்டைத் தலைவாசலும் வைத்துக் கட்டிக் கொள்ளவும் உரிமை வழங்கியிருப்பது அறியத்தக்கது.

கல்வெட்டு

1. விரசொழனென் எமக்குச் செல்லாநின்றயாண்டு........வடபரி
2. சார நாட்டில் திருமுருகன்பூண்டி மகாதெவ
3. சிவபிராமணன் காசியபன் வெண்காடன் சிவ(ன்)
4. கொயில் திருமடை விளாகத்தில் இருக்
5. கும் சிரிநிமந்த காற்கும் குடுத்த உரிமைகளாவன
6. முற்றம் குதிரையும் பெரிகையும் செகண்டியும் கொட்டவும்
7. இரண்டு நிலையும் இரட்டைத் தலைக் கடையும்
8. கொள்ளப் பெறுவார்களாகவும் இப்படி இவ்வரிசைகள்
9. செம்பிலும் சிலையிலும் செய்யிது கொள்ளவும் குடுத்தொம்.

எண்–85

இடம் : முயங்கு பூண்முலை வல்லிஅம்மன் கோயில் அர்த்தமண்டப வடக்குக் குமுதவரியில் உள்ளது.

அரசன் : கோச்சடைய வர்மனான சுந்தரபாண்டியன்(யா 44 ஆவணி)

செய்தி : சோழ மண்டலத்து ஆடிப்புலியூரைச் சார்ந்த ஒருவன் (மயிலே .... வானவன்) கொடுத்த பொருளைக் கொண்டு காங்கேயன் என்பவன் இடுகு நுண்ணிடை மங்கையார் கோயில் அர்த்த மண்டபத்தினுடைய தளத்தை கல்லிட்டுப் பாவிக் கொடுத்தான்.

கல்வெட்டு

1. ஸ்ரீ கொச்சடைய பந்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தெவர்க்கு யாண்டு நாலாவது ஆவணிமீ சொழ மண்டலத்தில் ஆடிப்புலியூர்
2. வுடையான் மயிலெறுவானவளததா நான்திருப்பணிக் காங்கெயநென்உடையார் திருமுருகன் பூண்டி யாளுடைய நாயனர் நாச்சியா
3. ர் இடுகு நுண்ணிடை மங்கையார் கொயில் அத்த மண்டபம் தளமிசைப் பித்தென் இதுபன்மா ஹெஸ்வரரக்ஷை.

எண்–86

இடம் : முருகநாதர் ஆலயக் கருவறைப் பின்புறம் குமுதவரியில் உள்ளது.

அரசன் : வீரபாண்டியன்

செய்தி : ஆதிசண்டேசுவரர் ஆணையாக பக்தன் ஆழ்வான் அண்ணாமலையானுக்கு கோயில் தானத்தார் கொடுத்த மன்றாட்டு ஒன்றும், முன்பு தானத்தார் கொடுத்த மன்றாட்டு ஐந்தும் ஆக ஆறு மன்றாட்டுகளையும் ஏற்று கோயில் ஆக்க அழிவுகளை ஆராய்ந்து, இவ்வூரின் நான்கு எல்லைக்குட்பட்ட சர்வ பிராப்திகளும் அனுபவித்து மன்றாட்டை ஆண்டுவரும்படி ஆணையிட்டுப் பலருடைய கையெழுத்துக்களுடன் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. மன்றாட்டு என்ற ஒரு நிலவுடைமையும் அதிகாரமும் வழங்கியுள்ளதையும் அதனை அனுபவிப்பவன் மன்றாடி என வழங்கப்படுவதையும் குறித்திருப்பது கல்வெட்டியல் வரலாற்றில் ஒரு புதிய செய்தியாகும்.

கல்வெட்டு

1. தண்டீஸ்வரன் ஓலைச் சாகரஞ்சூழ்வையகத்துக் கண்டீஸ்வரன் கரும மாராய்க பண்டே

அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தார் பாதம் திறம்பாமல் சென்னிமேல் வைத்து அருளாள் ஆதிசண்டெஸ்வரன் ஆதெசம நம் கக்தன் ஆழ்வான் அண்ணுடையானுக்கு நம்ஓலை குடுத்தபடியாவது உடையார் திருமுருகன் பூண்டி ஆளுடைய நாயனுர் கொயிற் தான்தத்தாருடன் இக்கொயிலுங் கெட்டு ஊர் மன்றாட்டும் ஆளவதாக இவனுக்கு நாம்(ம) ன்றாட்டுக் குடுக்கையில்

2. இவன் இக்கொயிற் திருப்பணிக்குறை தீரப் பல திருப்பணிக்கும் இவ்வூற்கால.....பாடில தெவர் கொயிற் திருப்பணி........ன் இ..........ப........... று இப்பொன் இருனூற்.........இவன் அடைப் பித்திற அழியாவிரதங் கொண்டாந் குளம் நீங்கலாக இடுகையில் இவனுக்கு நாங்குடுத்த தானத்தார் மன்றாட்டு ஒன்று இம் மன்றாட்டு ஒன்றும் முன்பு நடந்து பொதும தானத்தார் மன்றாட்டு ஐ(ந்து)ம் ஆகத தானததாா மன்ருட்டு ஆறு இம்மன்றாட்டு ஆறுங்கூட நடந்து கொயிலுங்கெட்டு ஊருங்காலபாடு மன்றாட்டும் ஆண்டு ஊருங்

3. காலபாடும் நாற்பாற் கெல்லைக்குட்பட்ட நன்செய்புன் செய் மெனெுக்கின மரங்கிணெுக்கின கிணறு.........எழுவன முளைப்பன ......மற்றும்எப் பெற்பட்ட வர்வமிராப்திகளும் ஆறு மன்றாட்டி லெவகையிட்டு ஆறிலொன்று இவன் மக்கள் மக்கள் சந்திராதித்த வரை அனுபவித்து வருவாகவும் இது செம்பிறுஞ்சிலையிலும் வெட்டிக் கொள்வதாக நம் மொலை குடுத்தொம் தாது சம்வத்சரத்து புரட்டாசி 15 வது நாள் இவை சீகாழிப் பிள்ளை எழுத்து இவை திருச்சிற்றம்பலநம்பி

4. பால்வண்ணத் தாண்டான் எழுத்து இவை நமச்சிவா ய தெவன் எழுத்து இவை கண்டியதெவன் எழுத்து இவை (ஆனந்) தக் கூ(த்த)ன் எழுத்து இவைமுத்தி க்கு நாயகன் எழுத்து இவை திரு அம்பலப் பெருமாள் எழுத்து இவை அடிக்கீழ்தளத்து வியாபாரி ஆனந் தக் கூத்தன் எழுத்து, இவை தில்லைக் கூத்தன் எழுத்து இவை அருளால் ஆதி சண்டெஸ்வர ஸ்ரீ கரணத் தான் எழுத்து.

எண்–87

இடம் : முகமண்டப மேற்குச்சுவர் வாயிலுக்குத் தெற்கு
அரசன் : வீரராசேந்திரன் (யா 10+9)
செய்தி : இவ்வரசனுடைய அதிகாரிகளில் ஒருவனான பிறைசூடுவான் (சோழமூவேந்த வேளான்) நாயனார்க்கு கனிதோறும் எண்ணெய்க்காப்பு இடுவதற்கு ஸ்ரீபண்டாரத்தில் பணம் முதலீடு வைத்ததாக இச்சிதைந்த கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசெந்திர தெவற்கு யாண்டு
2. 10 ஆவதுக் கெதிர்-9-வது பெருமாள் புறவரி யாரில்
3. கீரந் தெவங்குடையான் பிறைசூடுவான் குன்றம்
4. மெறிந்தானுன சுட்டியாடுவிட்ட சொழமுவெந்த வெளா
5. நெந் ஆளுடையார் திருமுருகன் பூண்டி நாயனார் முருகயாண்
6. டார்க்கு எண்ணெக் காப்பு ஒன்றுபின்கொரி அவிதானக்கு
7. காணம் எண்ணெ தெ.........ரண்டாவது வடபரி.........
8. யூடி நாச்சியார் திருமுன் வாசலில் காணிஉடைய
9. க்கதுக்கு காணி எண்ணெயுப்பிடி பெசவநாராயணநார்
10. யும் ஆக எண்ணெ உழக்கு-எ-வருக்கும் இம்மகாதேவ
11. சந்திரநாந பண்டாரத்தில் ஒடுக்கி நெந்.......சியதெவர்.........கும் உன...............
12. பழஞ் சலாகை யச்சு...........லற்றம் இராசராசனும்கி
13. ந்த உமயனும் கொண்டு ச..........வதாக உடம் இவர்கள் அக்கந்
14. சந்திராதித்த வரையில் செல்வதாக.........எடுத்துச் சான்றும வாரிக்கெ
15. பன்மாஹெஸ்வரரக்ஷெ.

எண்—88

இடம் : முகமண்டப மேற்குச்சுவர் வடபகுதியிலுள்ள கல்வெட்டு
அரசன் : வீரராசேந்திரதேவன் (யா 27) கி.பி.1234
செய்தி : சேவூரிலிருக்கும் அவிநாசியான் எல்லாம் வல்ல சோழகங்கன் திருமுருகன்பூண்டி நாயனார்க்கு திருமஞ்சனம் எடுப்பவனுடைய சீவனத்துக்காக பழஞ்சலாகை அச்சுப் பனிரெண்டை ஸ்ரீபண்டாரத்தில் ஒடுக்கினான். தேவகன்மிகள் இவ்வச்சை பழங்கராயநல்லூர் ஊராளிகள் ஒற்றிவைத்த நிலத்திற்காகக் கொடுத்து வட்டியாக 20கலம் நெல் பெற இசைந்தனர். படைவீட்டு வழி இட்டலுக்கு மேற்கும் என்று எல்லை குறிப்பிட்டிருப்பதால் இவ்வூர் படை வீரர்கள் தங்கிய குடியிருப்புடன் கூடிய முக்கிய நகரமாக இருந்திருக்க வேண்டும்.

கல்வெட்டு

1. கொவிராச கெசரிபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விரரா்செந்திர தெவற்கு திருவெழுத்திட்

2. டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு இருபத்திஏழாவது சித்திரைமாதமுதல் வடபரிசாரநாட்டில் செவூரிலி
3. ருக்கும் கைக்கொளரில் அவிநாசியான் எல்லாம்வல்ல சொழகங்கன் ஆளுடையா
4. ர் திருமுருகன் பூண்டி நாயனுற்கு நாள்ஒன்றுக்கு அஞ்சு பதின்குடம் திருமஞ்சனம் எடுப்
5. பாநுக்குச் சீவனத்துக்கு ஒடுக்கின ஆணை அச்சுக்சிரியக்கி பலஞ்சலாகை பன்னிரண்டு தா
6. டத்துக்கு ஒடுக்கின அச்சு மெற்படி நாட்டில் பழங்கறாய நல்லூர் ஊராளிகளொம் ஆளுடையான் திருமுருக
7. ன்பூண்டி நாயனுர் சிபண்டாரத்தில் தெவகன் மிகள் கையாலியாங்கள் கொண்டுகடவ ஆனையச்சு சிரியக்
8. கி பழஞ்சலாகை அச்சு பன்னிரண்டும் கொண்டொம் கொண்டபடியாவது இவ்வச்சுக்குப் பலிசைய
9. ரவது ஆண்டுவரை தென்............காணிநெல்கண்ட பொந்நாடு நாழியால் பத்திருகலமும் அளந்து வ
10. ருவொமாகவும் இவ்வச்சுக்குஒற்றி வச்சநிலம் படைவீட்டு வழி இட்டலுக்கு மெற்கும் தண்டிக்கும் குடத்த
11. ஏற்றுக்குத் தெற்கும் தநிஞ்சியா.........யந குடித்தாற்றுக்கு வடக்கும் மெற்கு அசலொகாதெளங்கெ பாளைக்குப்ப
12. ஏல...............படை வீட்டுப் பெட.............கு மெற்கும் சுந்தரப்பா பொநகுடத்தாற்றுக்குத் தெற்கும் வளகாண்டார் ஒற்றிக்
13. கொண்ட தாற்றுக்கு வடக்கு.........கக்கச் சலொகர் இந் நாங்கு எல்லைக் குட்பட்ட நிலமும் படைவீட்டு வழிக்கு கெவளுக்கு
14. மெக்கும் சொழன் தொழன் குடித்தாற்றுக்கு வடக்கும் அவி ஞசியாண்டான் குடித்தாற்றுக்கு தென்மெற்கு ஆக
15. லொகரி இந்நான்கெல்லைக் குட்பட்டநிலம் எத்தாஇரண் பணத்தாலும் நெயமாக நிலம் ஊழது பந்தி
16. ரு கல்க்கண்டம் சந்திராதித்தவரை அளந்து வருவொமாகவும் இது செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்வதாக
17. ஓலை இட்டுக் குடுத்தொம் பழங்கறாநல்லூர்ரும் ஊராளி களொமும் இந்நாயனுர் தெவகன்மிகளுக்கு குடு........ பன்மாசேுர ரக்ஷை
18. இது மாற்றுவான் ஏழச்சம் மறுவான்.

எண்–89

இடம் : முகமண்டப வடக்குச்சுவர்
அரசன் : வீரராசேந்திரன் (யா 29) கி.பி.1236

செய்தி : திருமுருகன்பூண்டி நாயனார்க்கு திருஞாயிற்றுக் கிழமைகளில் அமுதுபடி முதலியவற்றிற்கு அரிசி, தேங்காய், பருப்பு, கருப்புக்கட்டி, அடைக்காயமுது,இலையமுது ஆகியவை வழங்கப் பெற்றதாக இச்சிதைந்துள்ள கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் விரராசெந்திர தெவற்கு திருநல்லியாண்டு 29 இருபத்தொன்பதாவது
2. ஆளுடையார் திருமுருகன் பூண்டி நாயனுற்கு திருநாயிற்றுக் கிழமை பிட்டமுது
3. க்கு அரிசிநானாழியும் தெங்காய் ஒன்றும் பருப்புரியும் கருப்பு (கட்டி)
4. அரைப்பிடியும் அடக்காநான்கும் இலயமுது எட்டும் நரையங் காட்டி (நாட்டி)
5. விராசராசபுரத்து உலகுடைமுருக கிழானடி(ந)ல்க அமட்டன் சிவனை முழுதுடையாளென் சிபண்டாரத்து ஒடுக்கின
6. பழஞ்சலாகை அச்சு நாலு சந்திராதித்தவற் செல்வதாக இது

பன்மா ஹெஸவர ரகெஷ..

எண்–90

இடம் : முகமண்டப வடக்குச்சுவர்
அரசன் : வீரராசேந்திரன் (யா 29+7) கி.பி.1243
செய்தி : இவ்வூர் நாயனார்க்கு சிவராத்திரியன்று 4 சந்தி பூசைக்கு அமுதுபடிக்கு அரிசி முதலிய பண்டங்களும் திருமஞ்சனம் ஆடுவதற்காக நெய் பால் தயிர் ஆகியவையும் பூசை செய்வானுக்கு தட்சணைப்பணம் அறையும் வழங்கியதாகர இக்கல்வெட்டுக் கூறுகின்றது.

கல்வெட்டு

1. சிரி விரராசெந்திர தெவற்கு யாண்டு 29 ஆவது எதிர் ஏழாவது தைமாத முதல் பெருமாள்
2. பூண்டி நாயனுற்கு சிவாாத்திரைக்கு சந்திநாலுக்கு அமுதுபடி செலவு காலால் கலனெதூணியும்
3. ....யமுது தயிரமுது அடைக்காய் அமுது இலயமுதும் ஆடியருள நெய் நாழி பால் நாநாழி தயிர் ஞநாழி தெ
4. ....திக்கு நெல்பதக்கு பூசாதக்ஷிணைப் பணம் அரை

திருமஞ்சன மெடுப்பார்க்கு பணமரை திருவிள
5. கெண்ணெ நானுழி சீமாகெசுரர் பெர் பத்துக்கு அரிசி பதக்கும் வெஞ்சனத்துக்கும் சீபண் டாரத்தில் பழஞ்சலாகை அச்சு ஆறு.

எண் – 91

இடம் : முகமண்டபப் பட்டியில் உள்ளது
அரசன் : வீரராசேந்திரன் (யா 29+6) கி.பி.1242
செய்தி : வடபரிசார நாட்டு சாலியநகரத்தாரும் வாணிகமடிகையாரும் அக்கசாரிகையாரும் மேற்றலைத் தஞ்சாவூரான மன்னியூரில் அடிக்கீழ்த்தள மூத்த சமக்கட்டு, இளைய சமக்கட்டு தெரிந்த கைக்கோளப் படையினர் திருமுருகன்பூண்டி திருக்காம இடுகு நுண்ணிடைமங்கையாரை எழுந்தருளப் பண்ணி அமுதுக்கும் பூசைக்கும் 32 அறத்திற்கும் திருப்பணிக்கும் உடலாக வடபரிசார நாட்டு வீரராசேந்திர நல்லூரைத் தானமாகக் கொடுத்ததை இக்கல்வெட்டுக் கூறுகின்றது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொவிராச கெசரி பன்மரான திரிபுவனச் சக்கர வர்த்திகள் சிரி விரராசெந்திர தெவர்க்கு யாண்டு இருபத் தொன்பதாவதுக் கெதிர் ஆறாவது அற்பிசைத்திங்கள் முதலாக வடபரிசாரநாட்டில் சாலியநகரத் தொமும் வாணிகமடிகையொம்
2. ....யொம் அக்கசாரி(கையொ)மும் மெத்தலைத் தஞ்சாவூ ரான மந்நியூர் அடிப்பித்தளத்தில் மூத்தசமக்கட்டான அமட்டமாகண்டன் தெரிந்த கைக்கொளரொமும் சாமந்தன் செனுபதிகளொமும் இளைய சமக்கட்டான விரராசெந்திரந் தெரிந்த கைக் கொள ரொம்
3. ....வந்த கொனெரின்மை கொண்டான் ஆளுடை யார் திருமுருகன் பூண்டி ஆளுடைய நாயனார் ஆண்டக் கநுக்கு நன்றாக திருக்காம கொட்ட நாச்சியார் இ(டுகு.. நுண்ணிடை) மங்கையாரை எழுந்தருளப் பண்ணி இந்த சியார்)க்கு நம்மொலை குடுத்த படியாவது இந்நாச்சியார் க்கு அமுது படிக்கும் பூசைக்கும் முப்பதிரண்டு அறத்திற் கும் திருப்பணிக்கும் உடலாக விட்டுக்குடுத்த வடபரி சாரநாட்டு தென்கரை எம்மான் பாராசெந்தர் நல்லூர்
4. .....கொள்வார் களாகவும் இவ்வூர்க்கெல்லைக்குள் பட்ட நஞ்சை புஞ்சையால் வந்த இறைபுரவு சிற்றாயம் எலவை உகவை தெண்டக்குற்றம் வெண்டுகொள்.......த்திறை சுமை சங்கம் சாரிகை மற்றும் எப்பெர்பட்டனவும் இந்நா...........
5. ....ம் உதகம் பண்ணிக் குடுத்தமையில் இவ்வூர்க்கு நம்

சாமந்தர் கன்மிகள் புக்கு ஆராய கடவவல்லராக வும் இந்நாச்சியார் கன்மிகள் ஆராயக் கடவராகவும் இதற்கு மன்றுட்டு வூர்த கொத்திக் கொயிலாந் சததனுடு என்றும் அரு

6. ....பிரம்மராயர்க்கும் மன்றாட் டொன்றும் ஆத்திரெய கொத்திரத்து நக்கன் தெவனுக்கு மன்றா டொன்றும் ஆத்திரெய கொத்திரத்து நக்கன்..........தொன்றிக்கும்

7. ....த்து பெரிய செட்டிப் பிள்ளனுக்குச் செட்டி கெசவனுக்கும் செட்டி சிங்க கெசனுக்கும் மன்றாட் டொன்றும் ஊராண்மை பூலுவ வெட்டுவரில் ....

(பிறவரிகள் திண்ணைக்குள் மறைந்துள்ளன).

எண்–92

இடம் : முகமண்ட மேற்குச் சுவர் மேற்குச் சுவர் – வாயிலுக்குத் தெற்கு

அரசன் : விக்கிரமசோழன் (யா. 12)

செய்தி : ஐய பொழில் வியாபாரி புளியனான புகலிவேந்தன் அமுதுபடிக்கான அரிசிக்கு ஸ்ரீபண்டாரத்தில் பழஞ்சலாகை அச்சு பத்தும் ஒடுக்கியது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ கொபர
2. கெசரி பன்மரான திரி
3. புவனச் சக்கரவர்த்திக
4. ள்சிரி விக்கிரமசொழ
5. தெவர்க்கு யாண்டு பன்னி
6. ரண்டாவது ஆனிமா
7. தம் வடபரிசாரநாட்டு ஐ
8. ம் பொழியில் இருக்கும் வி
9. யாபாரி கப்பலன் சிறு
10. ப் புளியனான புகலிவெ
11. வந்த நெந் ஆளுடையார்
12. திருமுருகன் பூண்டி ஆளுடையார் ஸ்ரீபண்டாரத்தில்
13. ஒடுக்கின ஸ்ரீயக்கி பழஞ்சலாகை
14. அச்சு 10க்கு அச்சுபத்துக்கும் நாள் ஒன்றுக்கு நாழி அரிசிச் சொறு அட்டி........
15. சந்திராதித்யவரை செல்வதாக இதுபந்
16. மா ஹெல்வரரக்ஷெ.

எண்–93

இடம் : முகமண்டப தெற்குச்சுவர்

அரசன் : கோனேரின்மை கொண்டான் (யா 40) கி.பி.1247

செய்தி : தேவன் தேவன் என்பவன் திருமுருகன்பூண்டி நாயனார்க்கு சந்தியா தீபத்திற்கு ஸ்ரீபண்டாரத்தில் பழஞ்சலாகை அச்சு ஒன்று செலுத்தியது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவர்த்தி கொநெரிண்மை கொண்டான் ஆளுடையார் திருமுருகன்பூண்டி நாயனுற்கு ஆண்டக்கனுக்கு நன்ருக திருக்காமகொட்ட நாச்சியார் இடுகு நுண்ணிடை மங்கையாரை எழுந்தருளப்பண்ணி இந்நாச்சியார்
2. தெவகன்மிகளுக்கு நம்மொலை குடுத்தபடியாவது இந்நாச் சியார்கு அமுதுபடிக்கும் முப்பத்திரண்டு திருஅறங்களுக்கும் திருப்பணிக்கும் உடலாக விட்டவூர் வடபரிசாரநாட்டு தென்கரை நியமமான விரராசெந்திர நல்லூர்
3. தானமாக ஏற்றுக் கொள்வாராகவும் இவ்வூர் நான்கெல்லை குளப்பட்ட நன்செய் புன்செயால் வந்த இறைபுரவு சிற்றாயம் எலவை உவகை மன்றுபாடு தெண்டக்குற்றம் சுமை சுங்கம் சாரிகை மற்று மெப்பெற்பட்டனவும் இந்நாச் (சியமுப்)
4. பத்திரண்டறத்துக்கும் உதகம் பண்ணிக் குடுத்தமையால் இவ்வூற்கு நம் சாமந்தர் கன்மிகள் புக்கு ஆராயக் கடவா ஏல்லாறாகவும் இந்நாச்சியார் கன்மிகளெ ஆராய்வா ராகவும் இவ்வூற்கு மன்ருட்டு........ கொத்திரத்து கொயி லான் தொண்டனுக்கு மன்ருட்டு ஒன்றும்.........
5. ....நம்பிள்ளந்.........பிரம்மராயனுக்கு மன்ருட்டொன் றும் ஆத்திரெய கொத்திரத்து நக்கன் தெவனுக்கு மன் றாட்டொன்றும் ஆத்திரைய கொத்திரத்து சிறுநக்கன் பொத்திக்கும்..........
6. ....கொத்திரத்து பெரிய செட்டிப் பிள்ளைானுக்கும் செட்டி கெசனுக்கும் செட்டி சிறுகெசனுக்கும் மன்றாட்டொன்றும் ஊராண்மை பூ(லுவ)ர் வெட்டுவரில் கெசந் கண்ண.........
7. ....வடபரிசார நா...லக்குடி........ள்ளிது எறக்கடவதல் லவ.......மற்றுமுள்ள குடிகளை ஏற்றிக் கொள்வாராகவும் இந்நாயனுர் ....நம்பிமார் காசுவ கொத்திரத்து பொன்னன் பிள்ளையான் ஈஸ்வரபட்டனான
8. ருளவிச்ச இவ்வூ......திருப்பணியு செய்ய..............ளுகவும் ஈசானபட்ட.........ளுச்சியாரை.........மக்கள் மக்கள் ....பார்களாக..... இப்படிசந்திராதித்தவரை செல்வ தாக செம்
9. (பிலும்சிலையிலும் வெட்டிக்) கொளபபெறுவார்களாகவும் நாம் எப்பெற்பட்டனவும் ஏற்படுத்திக் ..... இவைஎல்லாம்

வல்ல சொழமுவெந்த வெளாந் எழுத்து யாண்டு பதின
ஞ்சாவதற்கு எதிர்..........கொண............

10. ....காடு வெட்டி...........(முனை)ய தரையன் எழுத்து
இவை தியாக வினொதன் எழுத்து.......இவை
களப்பாள) ராய(ன் எழுத்து) இவை.........எழுத்து

11. இது பந்மாஹெஸ்வரரட்சை.

எண்–94

இடம் : மகா மண்டப தென் குமுதம்
அரசன் : விக்கிரம சோழன் (யா. 3) கி.பி. 1258
செய்தி : பிறவா நெறிப் பட்டன் திருமுருகன் பூண்டி நாயனார் வைகாசி வசந்த கால பூசைக்கும், சுவாமி எழுந்தருளுகைக்கும் ஸ்ரீபண்டாரத்தில் பழஞ்சலாகை அச்சு எட்டும் செலுத்தினான். அதன் உபையத்தால் விழாச் செலவினங்களை நிறைவு செய்ய ஏற்பாடாயிற்று.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சொழதெவற்கு யாண்டு 3 வதுக்கு
எதிராவது ஆவணி மாதமுதல் ஆளுடையார்
திருமுருகன் பூண்டி, நாயனுர்க்கு கும்பிட்டிருக்கும்

2. பாலப்பிள்ளையார் பிறவா நெறி பட்டநெந் யிந்நாயநார்
வை காசி வசந்தி பூசைக்கும் நாயநார் திருவிதியிலெ
யிரண்டு சந்தி எழுந்தருள ஸ்ரீ பண்டாரத்தில் ஒடுக்கின

3. பழஞ்சலாகை அச்சு எட்டும் யிதன் உபயங் கொண்டு
அந்றை அழிவு நாழி அமுது படிக்கு கலநெ பதக்கும்
கறியமுது நெய்யமுது உபயம் தயிரமுது.........யமுதுய

4. மெற்பூச்சும் திருவிளக்கு எண்ணையும் காணத்தால்
ஐஞ்ஞாழியும் யிளநீர் சைவாசாரியதகூடி ணையும்
திருமஞ்சணமும் பஞ்சதிரவியமும் இவை
சந்திராதித்தவரை செல்ல...........

எண்–95

இடம் : அம்மன் கோயில் கருவறை வடக்கு ஜகதி
அரசன் : கோனேரின்மை கொண்டான்
செய்தி : இவ்வரசன் திருமுருகன் பூண்டி ஆளுடையார் கோயிலில் சோழமண்டலத்தைச் சார்ந்த தேவடியார்களுக்கு முதன்மைப் பேறும். நாயனார்க்குத் திருமேற்பூச்சும் கொடுத்து, ஆணை பிறப்பித்தான்.

கல்வெட்டு

1. ஸ்ரீ கொனெரின்மை கொண்டான் ஆளுடையார்
திருமுருகன் பூண்டி கொயில் தெவகன்மிகளுக்கு நம்
ஓலை குடுத்த படியாவது இத்தானத்தில் குல

2. சொழமண்டல கச்சா தெவரடியார் களுடை.......பெறும் முதன்மை தாநம் ஆளுடையார் திரு முருகன் பூண்டி யாண்டார்க்கு நாலாவது முதல் திருமெற் பூச்சும் குடுத்தொம் இப்படிக்கு
3. செம்பிலும் சிலயிலும் வெட்டிக் கொள்க இவை இலாடத் தரையன் எழுத்து நந்தமாற் படுத்துக் கொள்க. இது பந்மாயெசுராட்சை.

எண்–96

இடம் : திருமுருகன்பூண்டி – முயங்குபூண்முலைவல்லி அம்பிகை கோயில் கருவறைத்தென்குமுதம்.

அரசன் : இல்லை (வீரபாண்டியன் ?)

செய்தி : தேவரடியார் ஸ்ரீபண்டாரத்தில் 80 பணம் முதலீடாக வைத்தமையால் கோயிலில் பல்வேறு திருப்பணிகள் செய்யச் சிறப்பு உரிமைகள் வழங்கப்பெற்றனர்.

கல்வெட்டு

1. தண்டீஸ்வரன் ஓலைச் சாகரஞ்சூழ் வையகத்துக் கண்டீஸ்வரன் கருமமாராய்க - பண்டை அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தார் பாதம் திறம்பாமல் சென்னிமெல் வைத்து - அருளால் ஆதி சண்டெஸ்வரன் ஆதெசம் நம் திருமடை விளாகத்து தெவரடியார் (திருமு
2. ருகன் பூண்டி ஆளுடைய நாயனார் சீபண்டாரத்து அடிஉறையாக (வைத்த பணம் ஐம்பதும்) கொவணவர்க்கும் தானத்தார்க்கும் வீரபத்திரர்க்கும் குடுத்த பணம் 30 ஆக இப்பணம் என்பதும் ஒடுக்குகையில் நாம் இவர்களுக்கு வரிசை குடுத்தபடியாவது நாற்பத்தெண்ணாயிர நங்கை.............
3. ம் திருவெண்சாமரையும் திருக்கண்ணாடியும் காளாஞ்சும்...... மறி செவிக்க கடவாராகவும் செவிக்குமிடத்து ஐஞ்சாமறைய...... திருப்பாட்டுக்கும் கைகாட்ட கடவாராகவும் மற்றும் எப்பெற்பட்டதுவும் உரிமை குடிசனப் பேனும்..........

எண்–97

இடம் : திருமுருகன்பூண்டி – முயங்குபூண்முலைவல்லி அம்பிகை கோயில் கருவறை குழக்குச்சுவர்.

அரசன் : வீரராசேந்திரன் (யா.29+3)

செய்தி : உமையாளர்மை விரவு கண்ணி என்ற தேவடியாள் திருமுருகன்பூண்டி நாயனார்க்கு சந்தியாதீபத்துக்கு பொற்காசு ஒன்றை ஸ்ரீபண்டாரத்தில் ஒடுக்கினாள்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர
2. ர தேவற்கு திருவெழுத்தி
3. ட்டுச் செல்லா நின்ற திருநல்லிய
4. ணண்டு 29வதுக்கு எதிர் 3வது
5. ஆடித் திங்கள் ஆளுடையார்
6. திருமுருகன்பூண்டி ஆளுடையா
7. ற்கு கொழுமத்திலிருக்கும் தெ
8. வரடியாரில் உமையாள் மைவிரவு கண்
9. ணியென் இநாயனார்க்கு நான் வைத்த சந்தி
10. யாதீபம் ஒன்றுக்கு பண்டாரத்தில் ஒடுக்கினபழஞ்ச
11. லாகை அச்சு ஒன்றுக்கும் இவ்விளக்கு சந்திராதி
12. த்தவரை பண்டாரத்திலே செல்வதாக
13. கல்வெட்டுவித்தெ மைவி
14. ரவுகண்ணியென் இதுபன்மா
15. ஹெஸ்வர ரட்சை.

அன்னூர்

எண்–98

இடம் : மன்னீசுவரர் கோயில் தெற்குச்சுவர்
அரசன் : வீரராசேந்திரன் யா. 13+1=14
செய்தி : இக்கோயிலில் சந்தியாதீபம் ஒன்று எரிக்க இக்கோயில் காணியுரிமை பெற்ற சிவப்பிராணர் கள்வசம் வடபரிசாரநாட்டு காணியுரிமை பெற்ற பார்சிவ கோத்திரத்தைச் சேர்ந்த பெரியான் சத்தி என்பவன் கழஞ்செகால்பொன் கொடைகொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரரா செ ஜ ந்தரதெ தவற்கு யாண்டு பதிந் முந்ருவதந் நெதிர் வடபரி சார நாட்.டி
2. ற் காணியுடைய பார்(சி)வரிற் பெரியாந கத்தியெந் ஆளுடையார் மன்னி யூரா
3. ண்டாற்குச் சந்தியாதிபம் ஒன்றுக் கு ஒடுக்கின பொந் கழைஞ்செ காற் பொந்நு
4. இக்கொயிலிற் காணியுடைய சிவப்பிரா மணரொங் கைக்கொண்டு இ ச்சந்தியாதிபம் இக்
5. கொயிலிற் குடங்கொ(ண்)டு கொயில் பு(கு)வாந் சந்திராதி தவரை செலுத்து வொமாக இதுபந்
6. மாகெசுரகைக்ஷ.

எண்—99

இடம் : கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : விக்கிரமசோழன் யா. 9
செய்தி : மாலன் என்ற வியாபாரியின் மனைவி கெளரி என்பவள் இக்கோயிலில் சந்தியாதீபம் இரண்டு எரிப்பதற்கு இக்கோயில் பண்டாரத்தில் இருபத்தொறு பணம் கொடையாகச் செலுத்தியுள்ளார்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சொழ தெவற்(க்)கு யாண்டு ஒந்பதாவ.......சநிதிங் கள் வடபரிசார
2. ரிலிருக்குஞ் சாத்தவியாபாரிகளில் மாலந் மனைக்கிழத்தி கெ(ளரியெந்)ஆளுடையர் மந்(நி) (யூராண்டாற்கு சந்தி)
3. யாதிபம் இரண்டுக்கு நாந் ஒடுக்கி ந பணம் இருபத்தொந்றும் ஸ்ரீபண்டார த்தெ ஒடுக்கி........
4. ந் இது சந்திராதித்தவரை செல்வதாக இது பந்மா ஹெசுவரரசெஷ.

எண்—100

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : கோனேரின்மை கொண்டான் யா. 15+7=22
செய்தி : இக்கோயில் தேவகன்மிகளுக்கு நிலங்கள் திருத்திக் கொள்ள இவ்வூரைச் சேர்ந்த பிள்ளைகளில் குலோத்துங்க சோழதேவன் குறவன் என்பவன் தொண்ணூற்று ஐந்து அச்சு கொடை கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. திரிபு நச்சக்(கிரவ)த்தி கொனெ ரி மெல் கொ(ண்ட)சான் வட
2. பரிசார நாட்டு மன்னியூர்(ர்) ஆவுடையார் தெ(த)வ கன்மிகளுக்கு
3. நம் ஓலைச குடுத்தபடியாவது(மன்னிரயூர்) (குடியிரு) க்கும் பிள்ளைகளி
4. ல் குலொத்துங்க சொழதெவன் குற(வ)நென்.............ற்கு குடுத்தமைய
5. ச்சுத் தொண்ணூற்றஞ்சும் வைச்சமையில் இக்கு.........
6. லையும் வடவிளந்தலையும் உட்ப்(பட்ட)நிலம் திருத்திக் கொள்வராகவும் இப்படி செம்............
7. வதாக சந்திராதித்தவரை செல்வதாக(ந)ம் ஓலை குடுத்தொம் இவை விரத முடித்த சொ...........

8. வை வாணராயதெவன் எழுத்து யாண்டு பதினஞ்சா
வதுக்கு எதிர் எழாவது நாள்.............
9. இரு நூற்றொ(ரு) பத்தெழு.

எண் – 101

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : வீரராசேந்திரன் யா. 21+1+1=23
செய்தி : பிறைசூடும் பெருமாள் குற்றமெறிந்த பெருமாள் சூட்டியாடு விட்டி சோழ மூவேந்த வேளான் என்பவன் இக்கோயிலில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் வழிபாட்டிற்கு நான்கு நாழி அரிசி, உழக்கு பருப்பு, ஒருபிடி நெய், மற்றும் கரும்புக்கட்டி முதலியவைகளுக்காக இக்கோயில் பண்டாரத்தில் சலாகை அச்சு நான்கைக் கொடையாக கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ (11) வீரராசெந்திரதெ வற்கு யாண்டு உயக
வதுக்கு எ தி(ரா)வதுக் கெதிராவது பெருமா.......
யாந பிறைசூடும் பெருமாள் கு(ந்) றமெறி (ந்த)
பெருமா(ள) ஈந சூட்டி யாடு (விட்டி)சொழ முவெந்த
வெ(ளான்)
2. நான் வைத்த தந்மமாவது திரு நாயிற்றுக்கிழ மைக்கு
விட்ட............ல் நாநாழி (அரி)சியும் உழக்குப் பருப்பும்
ஒரு பிடி நெய்யும் அரை.............கருப்புக்
கட்டியும்................படியெ நாயிற் றுக்(கிழ)மையா
நதொறும் பண்டாரத்..........
3. சலாகை(அச்சு) நாலும் சி பண்டாரத்திலெ
ஒடுக்க.............இது சந்திராதித்த (வல்) செல்வதாக
இது(ப)நமா ஹெசுவ ரரக்ஷை.

எண் – 102

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : பரகேசரி விக்கிரமசோழன் யா. 8
செய்தி : பெருமாள் முதலிகளில் வல்லங்கிழான் மல்லன் அழகிய திருச்சிற்றம்பல முடையானான முனையதரயன் என்பவன் இக்கோயிலில் நடைபெறும் உவா(பௌர்ணமி அல்லது அமாவாசை) சிறப்பு வழிபாட்டிற்கு வேண்டிய அரிசி, காய்கறிகளுக்காக இக்கோயில் பண்டாரத்தில் பழஞ்சலாகை அச்சு செலுத்தினான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ கொப்பரகெஸரிப(ன்மரான) திரபுவனசசக்கரவத்(திக)ள் ஸ்ரீவிக்கிரம சொழதெவற்கு யாண்
2. டு8-வது வைகாசித்திங்கள்(ள்.................ல்) பெருமாள் முதலிகளில் வல்லங்கிழான் மல்லன்
3. அழகியதிருச்சிற்றம்பல முடையானான முனை யத ரயன்னென் செய்த தம்ம
4. மாவது ஆளுடையார் மன்(னியூரு)டையாற்கு உவாப்படி எழுந்தருளுகைக்கு நான் பண்டா..............
5. ரத்தில் ஒடுக்கின பழஞ்ச (லாகைஅச்சு).............. ஆறும் கொண்டு உவா ஒன்றுக்
6. கு அமுதுபடிக்கு காலால்.........ணி அரிசியும் எழுந்தருளு......
7. கைக்கு காலால் நாழி எ............... எழுந்தரு...........வெண்டும் விஞ்............. சனமும் இ.................
8. ட்டு எழுந்தருளுவதாக இ........ந்திராதித்தவரை செல்வ(தாக் க் கல்)வெட்டி வித்தெந் மு
9. னையதரையனென் இது (பன்மா)ஹெ(சுவ) ரரக்ஷை.

எண்–103

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்

அரசன் : ஆட்சியாண்டு 2

செய்தி : இக்கோயிலில் உள்ள நாச்சியார்க்கு கைங்கப்பள்ளி என்ற ஊரைச்சேர்ந்த எல்லாம்வல்ல சோழக்கங்கர் என்பவன் ஸ்ரீயக்கி பழஞ்சலாகை இரண்டு அச்சு கொடை கொடுத்துள்ளான். இக்கல்வெட்டில் பெரும்பகுதி சிதைந்துள்ளது.

கல்வெட்டு

1. ....வற்கு யாண்டு இருபத்
2. ....க்கும் பெருமாள்
3. ....எல்(லொ)ம் வல்லசொழ
4. ....யாதிருக்
5. ....அரிய
6. ....மமாவது இந்நாச்சியாற்குதிரு
7. ....நுக்கு கைங்கப்ப(ள்ளி)யிற்கொல்லரில்
8. ....ந எல்லாம் வல்லசொழக்கங் கர் கையயால் ஸ்ரீயக்கி பழஞ்சலாகை இரண்டச்சு
9. ....ண்டு உ(ள்பட)ம் காணம் முக்கலக் காணி(யும்) எந்நூர் கைங்கப் பள்ளி பு(து) வூர் எந் கூற்றி லை செய்தா

10. ....ம் இக்க...........முக்கலமும் ஆண்டு வரைதொறும் சுந்தராதித்தவரை அளந்துவருவதாக
11. ....அளந்து ஏ்வர்த்தனேயும் மற்று மன்னூர்(க்)களிலெ கொ
12. ....யார்/நாடு.............ரில்(வன்) னது மன்னியரிலெ எடுத்துக்கு.

எண்–104

இடம் : கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : கோனேரின்மை கொண்டான், யா. 5
செய்தி : இக்கோயிலில் உள்ள நாடகம் ஆடும் தேவகன்மிகளுக்கு நிலக்கொடை கொடுக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ (திரிபுவனச் சக்கரவத்திகள் கெ)ாநெரின்மை (கொ)ண்டாந் ஆளுடை யார் மந்தி ஊர் ஆளுடையார் கொயிற் கூத்தாடுந்தெவ(ர்) கந்மிகளுக்கு நம் ஓலெ குடுத்தபடியாவது பெரிய தெவகுளம் நம் பிள்ளைகளுக்கா
2. ....செய்து..................கையால் குளம் (ந)ம் முதாநமையில் அக்குளமும் குளக் கிழ் சில..............அக்குளத்தால் நிர்பாயக் கடவதறையும் நம் சரக்.........லப் பொருள் வைத்தமையால் சந்திராதித்தவரை
3. (லெ)ச(ல்)வதாக செம்பி(ல்)லுஞ் சிலையும் வெட்டிக் கொள்வதாக நம் ஓலெ குடுததொம் இவை எல்லாம்வல்லசொழமுவெந்தவெ ளாந் எழுத்து யாண்டு யரு-வது நாள் உள..........வ வாண ராய தெவந்
4. எழுத்து இது பந்மாஹசுவரரகைஷ.

எண்–105

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : விக்கிரமசோழன் யா. 3
செய்தி : சோழமண்டலத்து பரவை யகரம் என்ற ஊரைச் சேர்ந்த அந்தணரிடமிருந்து இக்கோயிலில் ஒரு நொந்தா விளக்கு எரிக்க இக்கோயில் காணியுரிமைபெற்ற சிவப்பிராமணனான வாச்சிய கோத்திரத்து வீரானதேவன் என்பவனும், தேவன் என்பவனும் ஸ்ரீஇயக்கி பழஞ்சலாகை அச்சு பதினைந்து பெற்றுக் கொண்டுள்ளனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சொழதெவற்கு யாண்டு முன்றாவது சொழமண்டலத்தில் பரவை யகரத்(தில்) பிராஹம(ண)..............ன மஹாதெவபட்டனென் ஆளுடையார்
2. மன்னியூரா(ள்)..........கு திருநந்தா விளக் கொன்றுக்கு இக்கொயி(லி)ல் காணியுடை சிவப்பிராமணரில் வா(ச்சி)யகொத்திரத்து விராணதெவன் விராந தெவனு
3. ள்ளிட்டாரும் கா...........(கெ)ாத்திரத்து சிவ.........லன் தெவனுள்ளிட்டாரும் இவன் ப (க்) க(ல்) நாங்கள் கொ(ண்ட) சிரியக்கி பழஞ்சலாகை யச்சுப் பதினஞ்சு இவ் வ(ச்)சுப் பதினஞ்சுக்கும் ஒ
4. ரு திருநந்தா விளக்கு (எரி)ப் பொமாகவும் இவ்விளக்கு குடங்கொ(ண்)டு கொயில் புகுவார் சந்திராதித்தவரை செலுத்து

வொமாகவும் இது பன்மா ஹெ சுவரரக்ஷெ.

எண்–106

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : வீரராசேந்திரன் யா. 19+1=20
செய்தி : அம்மட்டம் தெரிந்த கைக்கோளரும், சேனாதிபதிகளும் இக்கோயிலில் இவர்கள் ஏற்படுத்தியிருந்த இடங்கை நாயனாருக்கு அமுதுபடிக்காக இக்கோயில் பண்டாரத்தில் உள்ள தேவகன்மிகள் வசம் இருபத்து நான்கு அச்சு கொடை கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராஜெ தெர தெவற்கு யாண்டு இருபத்தொன்பத(ா)வதற் கெ (தி)ரா(வா)
2. ட்டம் க(ண்)டன் தெரிந்த கைக்கொளருஞ் செனாபதிகளொமும் ஆளுடையார் மன்னியூராளுட
3. யார் கொயிலி(ல்) நாங்கள் எழுந்த(ரு)ளுவித்த இடங்கைனாயகற்கு அமுதுபடி நாளொ
4. ன்றுக்குக் கொயிற் செம்பா லரிசி யிருநா ழியும் கறியமுதுவிஞ்சனத்துக்கும்னாங்கள் ஒ
5. டுக்கின அச்சு இருபத்துனாலு இன்னுயனார் பண்டாரத்தித் தெவர் கன்மிக
6. ள்வச மொடுக்கினமைக்கு இது சந்திராதித்தவரை செல்வதாக இது பன்
7. மாஹெசுரரிரக்ஷெ.

எண்–107

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : கலிமூர்க்க (விக்கிரம)சோழன் யா. 2
எழுத்து : வட்டெழுத்து
செய்தி : இக்கோயிலில் திருவீதி உலாவின்போது திருவிளக்குப் பிடிக்கவும், பதேஸெலிக்கு விளக்கு பிடிக்கவும், திருவாலத்தி கொளுத்தவும், தீபம் கொளுத்தவும் மன்னியூர் கங்கைப்பள்ளி, கருவலூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்கள் கொடை கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொககலிமுக்க (விக்கிரம) சொழ தெவற்கு யாண்டு இரண்டாவது ஆளுடையார் மன்னி
2. (யூ)ர் ஆளுடையாற்குச் ச............ருளி அருளும் பெ(ர)து திருவிளக்குப் பிடிக்கவும்பதெஸெலிக்கு வி-
3. ளக்கு பிடிக்கவும் திருவாட்ட.......ம் திருவாலத்தி கொளுத்............ திபங் கொளுத்தவும் மன்னி
4. (யூரு)ம் கங்கைப் பள்ளியூம் கருவலூரும் பழ.................ப் பிடாகை களும் இந............கிட
5. ....ரைதொறும் பண்டாரத்தெ பிடி(த்) தெத்துவாராக அமைஞ்சு குடுத்தொம்
6. மாஹெ சுவரர ரெக்ஷை.

எண்–108

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : யா. 15
செய்தி : இக்கோயிலுக்கு பாம்புணி கூற்றம் பழையாறு என்ற ஊரைச் சேர்ந்தவன் கொடை கொடுத்துள்ளான். இக்கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது.

கல்வெட்டு

1. .... வர்ககுத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற யாண்டு பதி(ன)ஞ்சு.....(தி)ங் கள் முதல் பாம்புணி கூற்றத்து பழையாற்று மணிக்கிலெ.

எண்–109

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : கலிமூர்க்கன் விக்கிரமசோழன் யா. 4
செய்தி : இக்கோயிலுக்கு விளத்தூரைச் சேர்ந்த சிலமண்டை என்ற வியாபாரி சந்தி விளக்கெரிக்கப் பொன் தானம் கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொக்கலிமுர்க்கன் விக்கிர சொ (ழ).........ட்டுச் செல்லாநின்ற யாண்டு(நா)(ல்)லாவது பங்குனிமா ெ.................
2. யிருக்கு(ங்) வியாபாரி விளத்தூச் சிலமண் டை...............யூ(ரா)ள் வா(ர்) (க்கு ஸ) ந்திவிளக் கெ(ா)ன்றெரிக்க வைத்த (பெ).

எண் – 110

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : கலிமூர்க்கன் விக்கிரமசோழன் யா. 27
செய்தி : இக்கோயில் வழிபாட்டிற்காக பன்னிரண்டு நாழி அரிசி, பால், காய்கறி, தயிர், முப்பதுபாக்கு மற்றும் இக்கோயிலின் திருப்பிணக்கு முதலாகவும் கலிமூர்க்கன் விக்கிரமசோழனின் அமைச்சன் வானவர் மாயன் என்பவன் வானவர்மயநல்லூர் என்ற ஊரின் இறைவரி, சிற்றாயம், தண்டகுற்றம், எலவை, உவகை போன்ற வரிகளைக் கொடையாகக் கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. ....(கலிமு).......................
2. ....ம்பநெ..............(க்குச் செல்)லா நின்ற யாண்டு முன்ரு.........
3. ....ர்க்கு மதுப(ர்)க்க.........இடக்(கடவ) பன்னிரு நாழி அரிசிக்கும் மெற்ப் (பெ)
4. ஈல(மு)து (க)றியமுது தயிரமுதும்............மு(ப்ப)து அடைக்காயமுதுக்கும்............
5. படிக்கும் திருப்பணி முதலுக்கும் மற்றும்பல வெஞ்சநத்துக்கும் நா.............
6. கஞட்டும...........ன்பாடிஆன (வா)னவ(ர்) மயநல்லூர் குடுத்தென்.......
7. யாவது கிழ்பாறகெல்லே இலுப்பைநாலிக்கு மெற்கு தென்ப..................
8. க்க.............ர்க்கு வடக்கு...........(ெ)மல்பாற் கெல்லே நல்(லூ)............
9. கும் வடபாற்கெல்லை தவ.............த்துக்கு தெற்கும் இன்-
10. ....ட்ட நஞ்சை (பு)ஞ்சை(ய்) மற்றும்........... ளப்ப ஸ்ரீவம் இவெல்.................
11. வ்வூரால் வந்த இறை வரி சிற்ருயம்................ல் தண்ட குற்றம் எல்வை உகவை
12. ....ட்ட எல்லேகளு(ம்) மன்னியூரில்பரமெ(சுவ)ரற்கு குடுத்தென் கொக்கலி.........மு..............

13. ....ன வானவர்ம(ய)னென் இத்தன்மம் இரக்ஷிப்பா(ன்) அடி எந்த......................
14. ....த் இறக்குவான் குலசெஷயமான இது பந்மாயெசுவ (ர).

எண் – 111

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : கலிமூர்க்கன் விக்கிரமசோழன் (கொங்குச் சோழன்) யா. 27
செய்தி : கவையன் புத்தூரைச் சேர்ந்த புள்ளன் என்பவன் இக்கோயிலில் சிவனடியார்களுடைய உருவங்களையும்,அவனுடைய உருவம் ஒன்றையும் செய்தளித்துள்ளான். மேலும் இக்கோயிலுக்கு சந்தி விளக்கொன்றும், விளக்கெறிக்க பொன் முக்கலமுக்கலஞ்சும் கொடை கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ கொக்கலிமூர்க்க(ந்)ஸ்ரீ விக்(கரம............ந்திருவெழுத்திட் டுச் செல்லா நின்ற(யா)ண்டிருபத் (தெழா)வது (பு)ட்டாசி திங்கள் முத(ல்)
2. கவையன் புத்தூரிலிருந்து வாழும் புள்ள(ங்)............மன்னியூரெ மெசுவர(ர்)க்கு இனக்கு கா.ற் கால த்தில் வண்டு கொட்டி இல்லெ வைச்சு என்னடியார் (பெர)
3. துவங்கொதையையும் மக்களெஉம் பொதுவ...............வயை(யு)ம் மக்களையும் கொசநி(மெ)யையும் மக்களெ(யு)ம் மன்னியூராழ்வார்க்கு நிரொட்டிக்குடுத் தென் என் றடியாரை.........
4. ....என் (ஸவ்ர)வமாக ஒருபடிமமும் பெண் படி(ம)ம் (ஸந்தி) விளக் கொன்றும் அவ்விளக் குக்குப் பொன் முக்கலமுக் கழஞ்சு ங்கொண்டு ஸந்த(ா) தித்தவல(ம்)மெரி ப்பிக்க கடவார்
5. மன்னியூர் ஸபைஒ.

எண் – 112

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : கலிமூர்க்கன் விக்கிரமசோழன் யா. 2
செய்தி : இக்கோயிலுக்கு புலியூர் என்ற ஊர் கொடையாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

கல்வெட்டு

1. கொக்கலிமுக்கன் விக்............ மக்கு (செல்ல)ாநின்ற

ஆண்டு (இர).............
2. முகைஞாட்டு ஞா...........னமுலேயும் புலியூ ரு மிடவையிற்றில் பள்ளிகளு..........
3. வை உகவை மற்றும் எற்பெறபட்டி(ந)வும்..........மந்னியூற் பரமெசுவரற்.........
4. தந்மம் இரக்ஷிப்பாநடி எந்றலேமெலந் இத்தந்மம் இறக்குவ.........

எண் – 113

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான்
செய்தி : இக்கோயிலில் உள்ள திருக்காம கோட்ட நாச்சியார் அருந்தவச் செல்விக்கு வழிபாடு செய்யவும், திரு ஆறம் என்ற அணிகலன் செய்யவும், இவ்வம்மன் சன்னதியின் திருப்பணிக்கும் இவ்வூரில் உள்ள கோவன்குளம் என்ற பிராட்டிகுளத்தைக் கொடை கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநசக்கரவத்திக
2. ன் கொனேரிமென் கொண்டாந் வ
3. (டபரி) ச(ா)ரனுட்டு ஆள்(ளு)டயார் மந்றி
4. ....ட(த்)திருமு
5. ....
6. திருக்காமக் கொ(ட்டத்து நாச்)சி மாரி
7. ல் அருந்தவச் செல்வியாற்கு பூசை
8. க்கும் திருவறத்துக்கும் திருபணிக்
9. கும்(ந)ாம் உதகம் பண்ணிக் குடுத்த
10. ....
11. குளம் இவ்வூர் கொவந் குளமாந(பி)
12. ராட்டிக்குளம் சந்திராதித்தவரை
13. செம்பிலும் சிலேயிலும் வெட்
14. டிக்கொள்வதாக நம்மொலே குடு
15. த்தொம் இவை விரராசெந்திரமு6
16. வந்த வெளாந் நெழுத்து ஸ்ரீ 14 வ-
17. வது நாள் 135 இவை குமரபாலநெழு(த்து)
18. இது பந்மாஹெஸ்வ ரரக்ஷ.

எண் – 114

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : வீரராசேந்திரன் யா. 14+1=15
செய்தி : உத்திராபதி என்ற ஊரைச் சேர்ந்த பிராமணன் விஸ்வகோத்திரத்து அஹோர தேவன் என்ற பரமானந்தன்

இக்கோயில் உள்ள வடுகப் பிள்ளையாரின் சந்தி வழிபாட்டிற்காக ஒரு சந்திக்கு சோழிய நாழியால் தினமும் 3 நாழி அரிசியும், வெஞ்சனத்திற்கு 30 கழஞ்சு பொன்னையும் இக்கோயில் பண்டாரத்தில் கொடையாகக் கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. ஸ்ரீவிராஜெந்திர தெவற்கு யாண்டு பதிநாலாவதற் கெதிர் ஆளுடையார் மந்நியூராண்டார் வ
2. டுகப்பிள்ளையற்கு உத்திராபதி ப்ராஹமண(ரி)ல் விசுவெ(வ)ா த்ரத்து அஹொர அ
3. தெவநாந பரமானந்த தெவ நெ(ந்) பிள்ளையாற் கமுதுப(டி)க்குச் செ
4. ழியத்தால நித்த மிரு நாழி யரிசிக்கும் கண்புக்(கு)மாக பதினறுகழைஞ்சரை பொ
5. ந்நும் பண்டாரத்தி லொடுக்க பிந் ெ(ப)ாடுக்கிநபொன் பதின்முககழஞ்சரையும் ஆக
6. ப் பொந் முப்பதிற் கழஞ்சுக்கும் அச்சின்வாய் காணங் கலவரை கண்பாக இவ்வுபையக்க
7. ண்பு பிள்ளையாற் கமுது(படி) முன்று சந்திக்கும் ஒரு சந்திக்குச் சொழிய நாழி அரிசியாக நிச
8. த முன்னாழியரிசியும் விஞ்சநாதி யுட்படச் சந்திராதித்தியவரை செல்விதாகப் பன் மாஹெ
9. சுவரர ரெக்ஷ.

எண் – 115

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : மூன்றாம் வீரவல்லாளன் யா. 1332 – 1333
செய்தி : இக்கோயில் இறைவனின் திருப்பரிசட்டத்திற்காக பணம் பன்னிரண்டை பார்பார் பூண்டியைச் சேர்ந்த ஒருவன் கொடை கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ விரவ(ல்லா)ளதெவர்........
2. ஆங்கிரஸம்வதுஸரத்து ஆனி..........(பார்)
3. (பார் பூண்டி வட்டையில் துறையா........
4. ளுடைய நாயினாற்கு திருப்பரி சட்டத்........
5. ....க் குடுப்பொமான பணம் பன்னிரண்டு இப்பணம் (ப)ன்னிரண்டு...............
6. தித்தவரை செல்லும்படி கல்வினுஞ் செம்பிலும் வெட்டி(க்கொள்) வாரா(ரக)
7. வும் இது விலங்குவான் வழி எழச்ச மறு(ப்பா)ன் இப்படிக்கு இ............
.................சொழம

8. ண்டலத்து வடகரை வி(க்)க(ர)ம சொழ வளநாட்டு ஸ்ரீ(ப)ராந்.

எண்–116

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : வீரராசேந்திரன் யா. 13
செய்தி : அரசிமல்லிகேசி என்பவள் இக்கோயிலில் சந்தியா தீபம் எரிக்க கழஞ்சேகால் பொன்னும் கொடை கொடுத்துள்ளாள்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராசெந்திரா தெவற்கு யாண்டு பதிந்முந்றாவது
2. கொக்கிழானடிகள் பெண்டுகளில் மல்லி கெசியென் ஆளுடையார் மந்
3. (நி)யூராண்டார்க்கு னாந் வைச்ச சந்தியாதிப மொந்நுக்கு கழஞ் செகால் பொந்
4. ஒடுக்கினெந் வி(க்கி)ரம சொழ பட்ட (ர்)ரும் சித்திரெமெழி பட்டரும் பண்டார..........

எண்–117

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : விக்கிரம சோழன், யா. 5
செய்தி : இக்கோயிலில் உள்ள நடராஜர் சன்னதியில் சந்தியாதீபம் ஒன்று எரிக்கக் கொடை கொடுக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ (வி)க்கிரம செ........(அஞ்ச)ாவது (ஆ)ளுடையா(ர்)
2. மந்நியுராளுடையா(ர்) கொயிற்க்(க)ண........வாச்சிய....
3. கொத்திரத்தின் விராண6...............திர..........
4. த்திரத்திற் சிவலவந் தெவ..........நம் இர.........ந்தி சுரமுடை
5. (ய)ா(ர்) கொயிற்காணியுடை...........
6. ....வந்த சந்தியாதிபம் ஒந்றுக்கு................
7. ....காலும் கைக்கொண்டு கூத்தாடுந்தெவர் சந்நதி(யி)லெ யட்டுவ(ா)........
8. ....க் குடங்கொடு கொயி(ல்) புகுவாந் சந்தி ராதித்தவரை செல்வதாக இது(ப)ந்-
9. ம(ர)ஹசுவரரக்ஷை.

எண்–118

இடம் : இக்கோயிலின் தெற்குச்சுவர்
அரசன் : விக்கிரமசோழன், யா. 5

செய்தி : இக்கோயிலில் இரண்டு சந்தி விளக்குகள் எரிக்க இரண்டரை கழஞ்சு பொன்னை சேவூர் கைக்கோளன் கரிகாலன் என்பவன் இக்கோயில் காணியுரிமை பெற்ற சிவப்பிராமணர்களில் காசிவகோத்திரத்தைச் சேர்ந்த சிவலவன் மற்றும் விராணதேவன் என்பவர்களிடம் கொடை கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சொழதெவற்கு யாண்டு அஞ்ச(ர)வது (ஆ)ளுடையா........
2. (கா)ணியுடை(ட)ய சிவப்பிராமணந்(க)ர சிவ கொத்திரத்தில் சிவலவந்......ந் உள்-
3. ....விரா(ண) தெ(வ)ந் விரரா.............உள்ளிட்டா(ரு)ம் செவூர்.........
4. ....க்கொளரிற்.........ங் கரிகாலநெந் ஆளுடையா(ர்) மந்நியூராளுடையா
5. ....தீபம் இரண்டுக்கு ஒடு(க்கி)ந பொந்யிருகழஞ்சரையும் கைக்கொண்..........
6. (கொடு) கொயில் புகுவாந................ம் சந்திராதித்தவரை செ(லு)த்து.............
7. ல் கொள்கையில் (பொந்)......ச்சுக் கொள்கை- யால் வாங்கியிட்(டு)டாம்
8. ....

எண் – 119

இடம் : கோயிலின் தெற்கு மற்றும் கிழக்குச் சுவர்கள்
அரசன் : வீரராசேந்திரன் (கொங்குச் சோழன்) யா. 29
செய்தி : அனந்தபோசன் வீரநாட்டார் என்பவன் இக்கோயிலில் தினமும் அரிசி சோறு செம்பால் நாழி அளவு பத்து தேசாந்திரிகளுக்கு கொடுக்க பத்து பழஞ்சலாகை அச்சை (நருவகைப்பணாம்) கொடை கொடுத்துள்ளான். இக்கோயில் சிவப்பிராமணர்கள் காசிப கோத்திரத்து ஆழ்வான் திருநட்டஞ்சித்திரமெழி பட்டன் மற்றும் வச்சகோத்திரத்து திருச்சிற்றம் பலமுடையான்வதும்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராசெந்..........யாண்டு இருப(த்தொ)
2. ந்பதாவது வயக(ச்சி)ம.........யூர் நாராயண நன
3. தெனா(ந) ஆநந்த பொ(ச)ந்.........விரநா(ட்டார்)பக்கல் மந்றி
4. ....உடையா(ர் கொயில்) சிவப்பிராமணரில் கா(சிப) கொத்
5. (தி)ரத்து ஆழ்வாந் திருநட்(ட)ஞ் சித்திர (மெழிபட்)டந் உள்ளிட்டாரும் வ(ச்)ச கொத்திரத் (துதி)

6. ருச்சிற்றம்பல முடைய(ரந்) பந்றியாநவி(ரந) ரராய(ண) விக்கிரம சொழபட்டந்கு.......உள்
7. (ளி)ட்டாரும் யிவணேடுவாம் யிவர்பக்க(ல்6) காண்ட பழஞ்சலாகை அச்சுப், பத்துக்கு
8. செம்பால் நாழி அரிசிச் சொறு நாளாசறுதி(பத்து) தெசாந்திரிகளுக்குச் சட்டி யட்டு வருவொ
9. மா(6)ந(ர)ம் இது குடங்கொடு கொயில் புகுவ..........
10. ....இட்டு வருவொமாக இது சந்திர...............
11. செல்வதாக இது பந்(மா)
12. கெசுவரர6ஷை.

எண் – 120

இடம் : இக்கோயிலின் தெற்கு மற்றும் கிழக்குச் சுவர்கள்
அரசன் : குலோத்துங்கச் சோழன்
செய்தி : வடபரிசார நாட்டுப்பிரிவைச் சேர்ந்த வண்டுகொட்டின வீரசோழன் என்பவன் இக்கோயிலில் சந்தியாதீபம் எரிக்க கொடை கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ குலொத்துங்க சொ(ழ) தெவற்-
2. ....வடபரிசார நாட்டில் வண்டு கொட்டி
3. ந(வி)ர சொழதெவநெந் சந்தியாதிப மொந்றுக்கு.

எண் – 121

இடம் : இக்கோயிலின் தெற்கு மற்றும் கிழக்குச் சுவர்கள்
அரசன் : வீரராசேந்திரன், யா. 17+1=18
செய்தி : படைவீட்டு வியாபாரி ஒருவன் இக்கோயிலில் உள்ள திருஞான சம்பந்த நம்பி மடத்தில் தினமும் ஒரு கலன் உணவளிக்க இக்கோயில் பண்டாரத்தில் ஒன்பது அச்சு கொடை கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராஜெந்திரா தெவற்கு யாண்டு (பதி6)நழாவதி நெதிர்.........முதல்.............யாந படைவி(ட்டி)ல் வியாபா.............களுக்கு நித்தக் கலமொந்றுக்கு அரிசி (நா)
2. ழி யாழாக்கரிசியும் ஒருமாக் கறியு மொரிலைக்கறியு முறிவு(ரி) மொரு மிதுக்குத் தக்க வுப்பு மிளகும் அருவாளுக்குத் திங்க(ள்)த் தூணி(க்குறு) ணியுமாகஇதுக்குப் பண்டாரத்தில் ஒடுக்கின அச்சு ஒன்பது இவை மி..........

3. உபையத் தாலெ நித்தக் கலம் சந்திராதித் தவற் செல்வதாக இக்கலம் திருஞானசம்பந்த நம்பிமிடத்தில் இடு(வதாகவுமி)து பனமாஹெசுவரரக்ஷெ.

எண்–122

இடம் : இக்கோயிலின் கிழக்குச்சுவர்
அரசன் : வீரராசேந்திரன்
செய்தி : வெள்ளளூரைச் சேர்ந்த கைக்கோளர் அவனியராயன் என்பவன் இக்கோயிலுக்கு ஐம்பது எடை கொண்ட நாரைக்களாம் என்ற இசைக்கருவி ஒன்றைக் கொடை கொடுத்துள்ளான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ ஆளுடையார் மந்நியூ-
2. ராண்டாற்கு வெள்ளலூற் கைக்கொ-
3. ளரில் அவநியராயந் இட்ட(ந)ாரைக் கா(ளம்)
4. ஒன்றும் இடை ஐம்பது.

எண்–123

இடம் : இக்கோயிலின் கிழக்குச்சுவர்
அரசன் : குலோத்துங்கச் சோழன், யா. 7
செய்தி : இவ்வூரைச் சேர்ந்த வாணிகன் கேசன் இருக்கன் என்பவன் இக்கோயிலில் சந்தியாதீபம் ஒன்று எரிக்க ஒன்றேகால் கழஞ்சு பொன் கொடையாக வழங்கினான். இக்கல்வெட்டின் இறுதிப்பகுதி கட்டிடத்திற்குள் மறைந்துள்ளது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ குலொத்துங்க சொ
2. ழதெவற்கு யாண்டு ஏழாவது மா
3. ர்கழிமாஸமுதல் ஆளுடையார் மந்
4. நியூராண்(ட)ாற்கு மந்நியூரில் இருக்
5. கும் வாணியரில் கெசந் இறுக்கந்
6. ....
7. மு(ன்)வச்ச சந்தியாதிபம் ஒன்றுக்கு
8. ப் பொன் கழஞ்செ காலும் இக்கொ
9. யில் காணியுடைய சிவப்பி(ரா)

எண்–124

இடம் : இக்கோயிலின் கிழக்குச்சுவர்
அரசன் : வீரராஜேந்திரன், யா. 28
செய்தி : மலைமண்டலத்தைச் சேர்ந்த (இன்றைய கேரளம்) பிராமணன்

மங்காட்டுக் கண்ட நாராயணன் என்பவன் இக்கோயிலில் இருந்த தேசாந்திரிகளுக்கு சோறு வழங்க இக்கோயில் பண்டாரத்தில் பத்து அச்சு கொடை கொடுத்துள்ளன.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராசெந்திர தெவ(ற்கு) (ய)ாண்டு இரு
2. பத்தெட்டாவது மலைமண்டலத்து ப்ராஹ்மணன்
3. மங்காட்டுக் கண்டநாராயண ெ(நந் ஆ)ளுடையார் மந்றி
4. யூராளுடையா(ர்)சி பண்டா (ரத்தில் நா)ந் ஒடுக்கிந
5. அச்சு ஒந்பதும் முந்பு இருப............(ஒடு) க்கிந அ
6. ச்சு ஒந்றும் ஆக அச்சுப் பத்துக்கும் தெசாந்திரிகளுக்கு
7. செம்பால நாழியரிசிச்சொறு சட்டிபண்டாரத்திலெ
8. யிட்டு வருவதாக இத்தந்மம் சந்திர(ா) தித்தவரை செல்வ
9. தாக இது பந்மாஹெசுவரரக்ஷை.

எண் – 125

இடம் : இக்கோயிலின் கிழக்குச்சுவர்
அரசன் : குலோத்துங்க சோழன், யா. 5
செய்தி : இவ்வூரில் உள்ள ஆமட்டம் கண்டன் தெரிந்த கைக்கோளப் படையைச் சேர்ந்த ஆண்டான் கருத்தன் என்பவன் இக்கோயிலில் சந்தியாதீபம் எரிக்க காணியாளர் வீரப்பெருமாள் மற்றும் பெருமாளாண்டார் வசம் ஒன்றேகால் கழஞ்சு பொன் கொடையாக வழங்கினன்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ குலொத்துங்க சொழ
2. தெவற்கு யாண்டு அஞ்சா
3. வது ஆளுடையா மந்றியூர்(ஆ)
4. ண்டாற்கு மந்றியூரில் (ஆமட்ட)
5. ம்கண்டந் தெரிந்த கைக் (கொள)
6. ரில் ஆண்டாந் கறுத்தாநெந் சந்
7. தியா திபம் ஒந்றுக்கு காணியா
8. ளரில் விரப்பெருமாளும் பெரும
9. ாளாண்டார் வசமு(ம்) ஒடுக்கின
10. பொந்கழஞ்செகாலுங்குடங்கொ
11. டு கொயில் புகுவாந் சந்திராதித்த
12. வரை செலுத்த இது பன்மாஹெ
13. சுவரா க்ஷை.

எண் – 126

இடம் : இக்கோயிலின் கிழக்குச்சுவர்

அரசன் : குலோத்துங்கச் சோழன், யா. 29+1+30

செய்தி : இக்கோயில் இறைவனுக்கும், இறைவிக்கும் சனிக்கிழமை தோறும் இரும் எண்ணைக்காப்பிற்கு அவிநாசி என்ற கச்சிராயன் வசம் நான்கு ஸ்ரீஇயக்கி பழஞ்சலாகை அச்சை இவ்வூர் பூலுவஊர் சபையினர் பெற்றுக் கொண்டு நிலக்கொடை கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு

1. ஸ்ரீவி(ர) ராஜெ (தெர தெவற்கு யாண்டு ருபத்தொன்பதாவதுக் கெ
2. திராவது வடபரிசார ந(ா)ட்டில் மந்நியூர் பூலு வ ஊரொம் ஆழ்வுடையா
3. ர்மன்னியூர் ஆளுடையா(ற்)கு சநியெண் ணைக் காப்புக்கு சனி ஒன்றுக்கு நா
4. யனு(ற்கு) யெண்ணை முப்பிடியும் நாச்சி யா(ர்*)க்கு எண்ணை ஒரு பிடியும் ஆ
5. கக் காணத்தால் எண்ணை உழக்காக மாதம் ஒன்றுக்கு எண்ணை நாழி
6. ....ண்டொன்றுக்கு காணத்தால் எண்ணை குறுணி நாழிக்கு.........
7. .... புரவரியாரில் கற்றில ஆளவந்தாக அவிநாசியான கச்சியரா
8. (யர்)பக்கல் நாங்கள் வாங்கின சிரியக்கி பழஞ்சலாகை யச்சு ஞலுஇ
9. (வ்) வச்சு ஞலுக்கு வடக்கெ செரில் எங்க(ள்) ஒபாதினிலத்தில் ஞங்கள் வி............
10. .... க் கெல்லையாவது வடபா(ர்)க் கெல்லை வெள்ளாழமுநிஞட்டு பட்டி
11. க்குதெர்(க்)கும் (கிழ) பா(ர்)க்கெல்லை பட்ட வுக்கு மெற்கும் தெந்பாற்கெல்லை குப்பா
12. .... ண்மைப்பட்டிக்கு வடக்கும் மெ(ல்) பா(ர்)க் கெல்லை இலுப்பை வழி இ
13. ....க் கிழக்கும் இந்(ஞ)ந் கெல்லைக்குட் பட்ட நிலமும் எந்நாயகற் குளத்து
14. ழாக்கிருஞநாழி விதையும் இவைதெ வகன்மிகள் அனுசந்தாநமாய இத்தந்ம
15. ....
16. மயில் இக்கச்சியராயர் தந்மமா
17. கச் செல்லக் கடவதாக கல்வெ
18. ட்டிக் குடுத்தொம் மந்நியூர்
19. பூலுவ ஊரொம் இது ப(ந்)
20. (மா) ஹெசுர(ர்) ரீரக்ஷை..

எண்–127

இடம் : இக்கோயிலின் கிழக்குச்சுவர்
அரசன் : குலோத்துங்கச் சோழன் (கொங்குச் சோழன்) யா. 8
செய்தி : இக்கோயிலில் ஒருநாளைக்கு இரண்டு சந்தியாவிளக்கு எரிக்க இக்கோயில் காணியுரிமை பெற்ற சிவப்பிராமணர்கள் பெருமாள். சாமந்தரிடம் (படைத்தளபதி) இரண்டு கழஞ்சு பொன்னைத் தானாகப் பெற்றுள்ளனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தஸ்ரீ குலொத்து
2. ங்கசொழ தெவற்கு யா
3. ண்டெட்டாவது பெருமா
4. ள் சாமந்தரில வடபரிரா
5. (ர)நாட்டு சாமாதுசெய....
6-9 ....
10. .... ச ந்தியாதி திபம் நாள்
11. ஒந்று/விளக் கிரண்டுக்கும்
12. ஒடுக்கிந பொந் இருகழஞ்
13. .... கொயிலிற் காணி
14. யுடைய சிவப்ராஹ்மணர்
15. விளக்கிரண்டு குடங்கொ
16. டு / கொயில் புகுவார் சந்திரா
17. .... ரை செலுத்து........
18. ....

எண்–128

இடம் : இக்கோயிலின் கிழக்கு மற்றும் வடக்குச்சுவர்கள்
அரசன் : வீரசோழன், யா. 19
செய்தி : வடபரிசார நாட்டுப்பிரிவில் உள்ள கங்கைப்பள்ளி, சேவூர், வெள்ளைபாடி ஆகிய ஊரிகளில் உள்ள நிலங்களை ஐந்துமன்றாட்டுகளாகப் பிரித்து தேவதானமாகக் கொடுக்கப் பட்டுள்ளது. இம்மன்றாட்டுக்களைப் பெற்றவர்கள் இந்நிலத்தில் வரும் வரிகளை வசூல் செய்து இக்கோயில் பண்டாரத்தில் செலுத்த வேண்டும்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ (விர) சொ(ழதெ) வ(ற்கு)பத் தெ (ாந்ப)தாவது வடபரிசாரநாட்டு கங்கைப்பள்ளி யியிலிருக்கும் சிவப்ராம்மண வாச்சிசய கொத்திரத்து உடையாந் பற்றியாந விக்கி-ரமசொழபட்ட நுக்
2. கும் நா......ந்....னுக்கும் உடையா(ன்) சுந்தனுக்கும் உடையாந் சிறு ச் சந்தனுக்கும் உடையாந்

நாயகனுக்கு(ம்) ஆக இவ்ஐவ(ற்)கும் யிரண்டு மன்ருட் டும் வெள்
3. ஊ(ப்ப)ாடியில் கந்...... நம்பனுக்கும் கெசந் கெசனுன அனுக்க நம்பிக்கு இவ(ர்) களிருவற்கு மிரண்டு மன்றட்டும்.........பாநாட்..........
.... யிலாக்க (வெள்)ளாளந்
4. பை(ய்) யரில் லரைய நம்பநும் ச(ை)ட யந் மக்களும் புளிய நம்பநும் வடபரிசார நாட்டு செவூ ரி(லிரு)க்கும் வெள்ளாள(ந்)பை.......... பொல்லாநும் சிறியா(ந்)முப் பநுமாக இவ்வனைவற்கும் ஒரு மந்னுட்டும் வெள்ஊபாடியிலிருக்கும் பூலுவந் பூலு வ..............(வ)ா மாற்...........ரு ராழ் மையும(ந்) நியராயந்பொமாற் கொரு ராழ்மையும் வடபரிசார நாட்டு வெள் ஊ பாடியாநவி(ர) சொழநல்லூ
5. .... ணுட்டாற்குத் தெவ தானமாகக் குடுத்தொம் இவ்வூரிறையு மெல்வை / யுகவையு(ம்) மந்றுபாடு தண்ட குற்றம் மற்றும் எப்பெற்ப்பட்ட இது........ துக் கொ(டு) வார்களாகவும் இறையாநது மந்றி மந்றத்தார் அவிநாசி யாண்டாற் கொடுக்கு மி றை ப் ப டி மந்றியூராண்டார் சிபண்டாரத்து கெ..........
18. ரு முண்ட மழகியாரும் நிலம் காணி அரக்காணி முந்திரகைக்கும் தொ
19. ண்டைமானுர் நிலமுக்காணி அரைக்காணி முந்திரிகைக்கும்
20. தெற்கு இன்னுன் கெல்லைக்குட்பட்ட தடி........லம் குதி.........ணற உட்பட இ
21. ன்னிலம் 200 மாவரையெ அரைக்காணி முந்திரிகை (க்)கும் எம்மிலினசந்த வி........

எண்–300

இடம் : பேரூர் திருவான்பட்டிப் பெருமான் கோயில் மகா மண்டபம் தெற்குச் சுவர்

அரசன் : வீரவல்லாளன் (கி.பி. 1292 – 1314)

செய்தி : பேரூர் நாட்டு அமர புயங்கர நல்லூர் தந்திரத்தார் (படைவீரர்) ஆதிபுராணீஸ்வர முடைய நாயனார்க்கு பல்வேறு கிராமங்களில் நிலத்தை விலைக்கு வாங்கித் தானமாகக் கொடுத்தனர். இந்நாயனார் தேவகன்மிகள் இந்நிலங்களைத் தாம்வேண்டும் குடிகளுக்கு வழங்கிப் பயிர் செய்வித்துக் கொள்ளும்படி கல்வெட்டிக் கொடுத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரவல்லாள தெவர் (பிருதிவிராச்சி)யம் பண்ணி (அருளா நின்ற) திருநெல்லியாண்டுவி (க்கி)
2. றம சம்வத்சரத்து ஆவணி 10 -ஸ்ரீ நாள் பெரூர் நாட்டு.....தெயம்....

3. நல்லூர் ஊராருள் தந்திரத்தொம்......ம் வாயிறைக்கா நாட்டு..........

4. ஆதிபுராணி சுரமுடைய நாயனுர்க்கு நாங்கள் திரு (வெழு)த்திட்டு திருவி

5. லை பிரமாணம் பண்ணிக் குடுத்தபரிசாவது எங்களுக்கு......திருநா

6. மத்துக்காணி இறையிலி விலை பிரமாணம் பண் ணிக்குடுத்த நிலம் ஆவது.........அமரபுயங்கன்மன் னறையில் நிலம் காட்டுடையான்

7. அரைமாவுக்கு எல்லைஆவது கீழ்ப்பாற் கெல்லை உடை யார் திருவான்பட்டி ஆளுடை (நா)யனுர் தெவதானத்தின் மெற்கு தென்பாற்கு எல்லைபத்தில்

8. வாய்க்கவருக்கு வடக்கும் மெல்ப்பாற்கு எல்லை பத்தில் வத்தவலத்துக்கு கிழக்கும் வடபாற்க்கு எல்லை தொண்மானூர் இருதூணிப்ப

9. தக்குத் தெற்கும் இன்னுன்கு எல்லைக்கு உள்பட்ட நிலம் மாவும் ஒரு புவுச் சொழன்மன்னறை யில் நிலத்து

10. க்கு............ ஆவது கீழ்பாற்கு எல்லை முற்கற் கவருக்கு மெற்கும் தென்பாற்கெல்லை சூரிய தெவர் ஐங்குறுணிக்கு மெப

11. ....எழுகுறுணிக்கும் வடக்கும் மெல்பாற்குஎல்லை கொங்கவதரையன் கவருக்குக் கிழக்கும் வடபாற்குஎல்லை

12. கண்மாளர் பற்றுக்குத் தெற்கும் இந்நான்கு எல்லைக்கு உள் பட்ட தடி ஒன்றினுல்......சைவால் .... வதரைய

12. ன் ருசயத்தால் .... தடி ஆகத்தடிமுன்றி னுல் இருமா அரைக்கால்........முந்திரிகையும்........ ஒருபூச் சொழ(தெவன்)

14. மன்னறையில் நிலத்துக்கு எல்லையாவது கீழ்பாற்கெல்லை ப..........கை கைய......தென்பாற்கெல்

15. லை வாக்காலுக்கு வடக்கும் மெல்பாற்கெல்லைஉடையார் திருவான்பட்டி ஆளுடையார் தெவதானத்துக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை வெருங்க

16. வருக்கு தெற்கும் இன்னுன் கெல்லைக்கு உள்பட்ட தடி 3னுல் ருசயவசம் ஆக காமறுருசயம் கார்ஒருபூ ருய (வ) வவிதம் கார்ஒரு பூருசயவித ஆகருஉய

17. (மா)இன்னிலம் இரண்டுமாக்காணிக்கு.......ந்த (வி)லைப் பொருளாவன அன்ருடுவரான் இப்பொன்முன்னூ

18. ற்று நாற்பதும் ஆவணித் திங்கள் (தியதி)......தை லவ றுத்துப் பொருளுங்க் கொண்டு இன்னிலம் இருமாக்கா ணியும் திருநாமத்துக் காணியாக சந்திர

19. ஏதித்தவரை........எப்பெர்ப்பட்ட கடமை குடிமை களும் நாங்களெ இறுப்பொமாகவும் இன்னிலம் இன்னுயனுர் தெவகன்மிகள் வெண்டும் குடிக்கு அளித்துப் பயிற் செய்

20. வித்துக் கொள்வார் களாகவும் இது செம்பிலும் சிலை யிலும் வெட்டிக்கொள்ளக் கடவார்களாகவும் இப்படி சம்மதித்து திரு நாமத்துக் காணி இறையிலி
21. விலைப்பிரமாணம் பண்ணிக் குடுத்தோம்...........மண்
22. டலப் (பெரு)மான் எழுத்து இப்படிக்கு இவை நித்த நின்ருடுவான் எழுத்து இப்படி
23. க்கு காங்கையன் எழுத்து.......ஆள.......எழுத்து இவர்கள் சொல்ல இந்தத் திருநாமத்துக் காணி
24. ....கொண்ட நல்லூர் திரு அவனுசி...........பெருமாள் எழுத்து............

எண்–301

இடம் : பேரூர் திருவான்பட்டிப் பெருமான் கோயில் மகா மண்டப தெற்குச் சுவர்
அரசன் : விக்கிரமசோழன்
செய்தி : கெம்பைய நாயக்கர் பேரூர் கோயிலில் ஆறு சந்திபூசை நடக்க வேண்டுமென்று நிலத்தை நீர் வார்த்துக் கொடுத்தார்.

கல்வெட்டு

1. ஆங்கிரஷ (வருஷம்) பாத்பொத ஸ்ரீமது இராயர் திருவக்கள கெம்பயநாயக்கர் பெரூரில் ஆ(று)....
2. சந்தி ஆக நடக்க வெணு(ம்எ)ன்று (ஹிரணி யொ உதகமான தாராபூர்வம்) ஆக தாரை வாத்துக்குடுத் தொ(ம்)
3. ....

எண்–302

இடம் : பேரூர் திருவான்பட்டிப் பெருமான் கோயில் கருவறை தெற்குச் சுவர்
அரசன் : விக்கிரமசோழன் (யா. 15+6) கி.பி. 1294 – 95
செய்தி : ஆலாலசுந்தரரையும் பரவைநாச்சியாரையும் எழுந்த ருளச்செய்து அமுதுபடிக்காக நிலம் தானமாக வழங்கப்பட்டது.

கல்வெட்டு

1. ஆலால சுந்தரப் பெருமானையும் பரவைநாச்சி யாரையும் எ(ழுந்த) ருளுவித்து நாளொன்றுக்கு அமுதுபடி யரிசி நா........
2. ....விட்ட நிலமாவது அமன்கவதிக்கு வடக்கு அருட்காணியிலெ........வி நிலம் முக்காணியும் இருபூ விளையும் நில...........

3. சந்திராதித்தவற் செல்வதாக அறங்களிக்க ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சொழ தெவற்கு) யாண்டு பதினஞ்சாவதின் எதிர் ஆரு............

எண்–303

இடம் : பேரூர் திருவான்பட்டிப் பெருமான் கோயில் மகா மண்டபம் தெற்குச் சுவர்

அரசன் : கோ. ராஜராஜ கரிகாலன்

செய்தி : அரிகேசவன் செய்யானான சோழன் சகாயன் என்பவன் கொரப்பாடியான அம்மம்மைச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார்கையில் பதினொரு கழஞ்சு பொன் வழங்கி அதற்கு வட்டியாக பொன் கழஞ்சுக்கு நெல் முக்கலமாக பொன்னாடுகாலால் அளக்கக் கல்வெட்டு வித்தான் (கல்வெட்டுச் சிதைந்துள்ளது)

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொராஜராஜ ஸ்ரீ கரிகால சொழ தெவற்குத் திரு வெழுத்திட்டுச் செல்............ டை மண்டலத்துச் செம.......ற் கொட்டித்துப்பட்டின நாட்டுப் பழம் பட்டணத்
2. து இவ்வூருடையான் அரிகெ(க)சவந் செய்யானுன சொழன் சகாய நென்(ப)தி நொரு கழஞ்சில் இந்நாட்டு பிரமதெயம் கொரப்பாடியான ஸ்ரீ அம்மம்மை......... ரை உற கொண்ட பொந் ஐங்கழஞ்சரை.........
3. சதுர்வெதி மங்கலத்து சபையார் கொண்டபொந் ஐங் கழஞ்சரை................நிறை
4. செம்பொன் பதிநொரு கழஞ்சுக்கு ஆண்டு ஒன்றுக்கு பொன் கழஞ்சுக்கு உபைய நெல்முக்கலமாக அளக்கக் கடவநெல் 3 .... ஏனுக்கு நெல் முக்கலமும்ஸ்ரீ பண்டாரத்திலெ எடுத்துக் கொ(ண்)டு வந்து பொ(ன்)
5. ஞ(டு) காலால் நிறைச்ச (ஏல)சந்திரா............. தித்தவற் அளக்கக் கடவராக இத்தெவ...........

எண்–304

இடம் : பேரூர் திருவான்பட்டிப் பெருமான் கோயில் முன் மண்டபம்

அரசன் : வீரராசேந்திரன் (யா. 29)

செய்தி : முன் மண்டபத்தின் தூணும் உத்தரமும் உபயமாக வழங்கப்பெற்றன.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. இத்தூ(ண்)
3. பொந்நம்பலக்கூத்
4. தந் உயக்கொ
5. ண்ட பிள்ளை (து) தன்மம்

எண்–305

இடம் : பேரூர் திருவான்பட்டிப் பெருமான் கோயில் முன் மண்டபம்
அரசன் : வீரராசேந்திரன் (யா. 29)
செய்தி : முன் மண்டபத்தின் தூணும் உத்தரமும் உபயமாக வழங்கப்பெற்றன.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராசெந்திர தெவற்கு யாண்டு இருபத் தொன்பதாவது பெரூர் மன்றுடி திருவெ
2. ண் காடுடையானுன விர கங்கன் தன்மம் இவ்வுத்தரம்

எண்–306

இடம் : பேரூர் திருவான்பட்டிப் பெருமான் கோயில் மண்டப மேற்குச் சுவர்
அரசன் : கோனேரின்மை கொண்டான்
செய்தி : திருவான்பட்டியுடையார்க்குத் தேவதானமான நிலத்தில் பயிர் செய்து எள், தினை, ஆகியவை ஆண்டுதோறும் அளந்து வரும்படி கல்வெட்டுவித்தான் (கல்வெட்டுச் சிதைவு)

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்திகள் (கா) னெரின்மை
2. ம கொண்டான் ஆளுடை யார் திருவான்பட்
3. டி ஆளுடையார் கொயில் தானத்தாற்கு நம்ஓலைகுடுத்
4. தபடியாவது பெரூர் நாட்டு இன்னுயநார் தெவதானமா
5. .... குடிகள் ......ள(த்தை) வடஜ ......(ங்) கதிக்(கு) நமக்கு ஆ
6. ண் டொன்றுக்கு அளக்கும் எ(ள்) தினை கலமும் முன்
7. ருவது கார்த்திகை மாதமுதல்.....திருநந்தா விளக்கு ஆக
8. ஆண்டு தொறு(ம்) அளந்(து) வருவார்களாக
9. ....குடுத்தொம் இப்படி செம்பிலும் சிலை
10. யிலும் வெட்டிக் கொள்க.

எண்–307

இடம் : பேரூர் இடங்கை நாயகீஸ்வரமுடையார் கோயில் கருவறை வடக்குச் சுவர்

அரசன் : விக்கிரமசோழன் (யா. 5) கி.பி. 1278 – 79

செய்தி : பேரூர் இடங்கை நாயகீஸ்வர முடையார்க்கு அமுதுபடிப் புறமாக நக்கன் உமைபாலன் என்ற மன்றாடி நான்கு எல்லைக்குட்பட்ட நிலம் காணியைத் தானும் தன்வம்சத்தாரும் தன்மதானம் செய்வதாகக் கல்வெட்டிக் கொடுத்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வி(க்ர)ம சொழ தெவற்குயாண்டு ரு-வது பெரூர் ஆளுடையார் இடங்கை நாயகீஸ்வரமு
2. டையாற்கு திருப்புதியிதுப்புறமாக இவ்வூர்மன்றுடி சடையார் நக்கனுமை(யி) பாலநென்விட்ட நில(ம்)
3. இவ்வூர் இராஜாதித்த..... ழல் செம்பியன் கிழானடிவதிக்கு கிழக்கு திருவான்பட்டி வாய்க்காலுக்கு(த்)
4. தெற்க்கு கண்ணுற்று 2-சதிரத்து என்மன்றுட்டு 5-ல் இந்நிலம் காணியும் இத்தால்வந்த தண்டு விழ்ச்சியும
5. ற்று முள்ளந எந் வங்கிசத்தி லுள்ளொம் செலுத்து வொமாக தந்ம தாந(ம்) பண்ணி குடுத்தெந்இது சந்திரா
6. தித்த வற் செல்வதாக இது பந்(மா) கெஸ்வரரட்க்ஷை.

எண்–308

இடம் : பேரூர் இடங்கை நாயகீஸ்வரமுடையார் கோயில் கருவறை மேற்குச் சுவர்

அரசன் : விக்கிரமசோழன் (யா. 41) கி.பி. 1279 – 80

செய்தி : இடங்கை நாகீஸ்வரமுடையார்க்கு அமுதுபடிப்புறமாக நாலுமா முக்காணிநிலத்தை சிவபாத சேகரச்துர்வேதி மங்கலத்தாரும் ஊராரும் தானமாக வழங்கியதோடு நிலத்திற்கான வரிகளையும் மற்ற வரிகளையும் செலுத்த இசைந்து கல்வெட்டிக் கொடுத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசொழ தெவற்கு யாண்டு 5 - எதிர் சிவபாத செகர சதுர்வெதிமங்கலத்து ஸபெயொமும் பெரூர் ஊரொமும் இவ்வூர் ஆளுடையார் இடங்கை நாயகீசுரமுடைய நாயனுற்கு அமுதுபடிப்புறமாக தன்ம தானம் பண்ணின விரகெரள

2. விலாடகுல மாணிக்கவதிக்கு தெற்கு அதிராஜராஜ வாய்க்காலுக்கு கிழக்கு சபைபற்றுக்கு வடக்கு மடை அதிராஜராஜ வாய்க்காலுக்கு மெற்கு ஊரார் விட்டநிலம்............. ஆகரு...........இந்நிலம் நாலுமா
3. முக்காணிக்கும் கடமை எலவை உகவை பெருமாள் திருக் கொற்ற வாசலால் பொந்த முன்னூற்றறுபது குடிமைப் பாடுகளும் சபையொமும் ஊரொமும் இறுப்பொமாகவும் இத்தந்மம் சந்திராதித்தவற் செல்வதாகக் கல்வெட்டிக் குடுத்தொம் இது
4. பந்மா ஹெஸ்வரரக்ஷை ஆறுசமக்கட்டார் ரக்ஷை.

எண்–309

இடம் : பேரூர் இடங்கை நாயகீஸ்வரமுடையார் கோயில் கருவறை தெற்குச் சுவர்
அரசன் : விக்கிரம சோழன் (யா. 2) கி.பி. 1275 – 76
செய்தி : இடங்கை நாயகீஸ்வர முடையார்க்குத் திருவமுது படிக்கு நடுவிற் சமக்கட்டாரும் சேனாபதிகளும் நாயகம் செய்வார்களும் இப்படையில் ஊதியம் பெற்று வாழ்வாரெல்லாம் ஆண்டுக்கு ஒரு நாள்படியைச் செலுத்துவதாகக் கல்வெட்டிக் கொடுத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சொழ தெவற்கு யாண்டு 2 - வது ஆளுடையார் இடங்கை நாயகீ ஈச்சரமுடையாற்
2. கு திருவமுது படிக்கு நடுவிற்சமக் கட்டொமும் அம் மனங்க காறரொமும் செனபதிகளொமும் நாய கஞ் செய்வா
3. ர்களொமு(ம்) மற்று இத்தந்திரத்தில் கொற்று ண்ணகடவாரெல்லாம் ஆட்டொரு நாளைபடி குடுத் தொம் சந்திராதி
4. த்தவற் செல்வதாக கல்வெட்டிக் கு(டு)த்தொம் நடுவிற் சமக்கட்டொம் பந்மாஹெஸ்வரரட்சைக்ஷ ஆறுசமக்கட்டார் ரக்ஷை.

எண்–310

இடம் : பேரூர் இடங்கை நாயகீஸ்வரமுடையார் கோயில் கருவறை தெற்குச் சுவர்
அரசன் : விக்கிரமசோழன் (யா. 3) கி.பி. 1276 – 77
செய்தி : இடங்கை நாயக ஈஸ்வரமுடையார்க்கு ஒரு நாளுக்கான கட்டளைப் படியை வீரபத்திரரும் முத்திரத்தாரும் நாட்டுத் தானத்தாரும் ஸ்ரீபாதம் தாங்குவாரும் கவரிப்பிணாக்களும்

(பெண்கள்) மற்றும் கோயிற்படி பெறுவாரெல்லாம் ஏற்றுக் கொள்ளவதாகக் கல்வெட்டிக் கொடுத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சொழ தெவற்கு யாண்டு 3 வது பெரூர் ஆளுடையார் இடங்கை
2. நாயகஈசுவரமுடையாற்கு சீவிரபத்திரரும் முத் திறத் தொழும் நாட்டுத் தாநத்
3. தொழும் சீபாதந்தாங்கு வாரு(ம்) கவரிப்பிணுக்களு மற்று மிந்நாட்டுக் கொயில்களி
4. ல்படி பெறுவாரெல்லாம் பெருமாள் மடத்திலும் சமக்கட்டார் மடத்திலும் ஒரு நா
5. ளைப்படியும் இந்நாட்டு கொயில்களில் திருநாளில் ஒருநாளைப் படியும் நித்தம் இருந்
6. நாழி அரிசி அமுதுபடி செலவுக் காக சந்திராதித்த வரை செல்லக் கல்வெட்டிக் குடுத்தொ
7. ம் பந்மா கெஸ்வரரொம் பன்மாகெஸ்வரரட்சை ஆறுசமக்கட்டார் ரட்சை.

எண்–311

இடம் : பேரூர் இடங்கை நாயகீஸ்வரமுடையார் கோயில் துவாரபாலகருக்கருகில் நுழைவாயிலின் வலதுபுறம்

அரசன் : வீரபாண்டியன் (யா. 4) கி.பி. 1269

செய்தி : பெரியான் சொக்கனார் வழங்கிய அச்சு எட்டினையும் பெற்றுக் கொண்ட சிவபிராமணன் இதற்கு உபயமாக அளக்கும் பன்னிரு கலம் நெல்லையும் கொண்டு அவர் எழுந்தருளுவித்த சந்திரசேகரர்க்கு அமுதுபடிக்கு ஒரு நாளைக்கு நாழி அரிசிவீதம் அளந்து வருவதாகக் கல்வெட்டிக் கொடுத்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ (1) கொ) (ராஜ) கெஸ(ரி) பந்மரான திரபுவ
2. னச் சக்கரவத்திக(ள்)ஸ்ரீ விரபாண்டிய தெவற்
3. கு யாண்டு 4வது மீனநர்யற்று பூர்வபக்ஷத்து
4. நவமியும் வெ(ள்ளி)க்கிழமையும் பெற்ற ரொ
5. கணிநாள் பெரூர்நாட்டுப் பெரூர் ஆளுடையார் திரு
6. வான்பட்டி யாளுடையார் கொயில்க்காணியுடைய சி
7. வ(பி)ரா(ம)ணரில் (காசிப) கொத்தரத்து சொம
8. ன் ஆதிசைவச் சக்கரவ(த்தியெ)ன்.......
9. இரணிய முட்டநாட்டு சி(றுப)ாலியூருடையான் பெ
10. ரியான் சொக்கனர் பக்கல்நான் கொண்ட ஸ்ரீயக்கி புஞ்ழ(ச) பழஞ்ச

11. லாகை ஆணையச்சு எட்டு இவ்வச்சு எட்டுக்கும் ஆண்டொ

12. ன்றுக்கு அச்சு ஒன்றுக்கு உபையமாக அளக்கும் நெல்லுக்கலனெ

13. தூணிப்பதக்காக ஆண்டொன்றுக்கு நெல்

14. லுப் பன்னிரு கலமாக வந்த நெல்லு......இவர் இக்கொ(யிலுக்)

15. கு எழுந்தருளுவித்த (சந்தி)ரசெகர தெவர்க்கு நாள் ஒன்றுக்கு விஞ்

16. சனமுட்பட அமுதுபடிக்கு நாழி அரிசி அளந்து வருவென்னுகவும்

17. இப்படி சந்திராதித்த வரை இக்கொயில் குச்சியும் குடமும்

18. கொண்டு கொயில் புகுமவன் செலுத்தி வருவனுகவும் இப்ப

19. டி சம்மதித்து இக்கல்வெட்டிக் குடுத்தென் சொமன் மந்

20. ....(ஆதிசைவச் சக்கர வத்தியென்).........

21. வச்சக்கரவத்தி எழுத்து இதுபன்..........

எண்–312

இடம் : துவாரபாலகருக்கு அருகில் நுழைவாயில் இடதுபுறம்

அரசன் : இல்லை

செய்தி : பேரூர் ஊராரும் தந்திரத்தாரும் வாயரைக் காநாட்டுக் குயிலை ஊருக்கும் ஊராளிகளுக்கும் நான்கெல்லைக் குட்பட்ட நிலத்தை விலைப் பிரமாணம் பண்ணிக் கொடுக்க அவர்களும் அதன் விளைச்சலால் நாகீஸ்வரமுடையார்க்கு அமுது படிக்காக நாள்தோறும் அளந்து வர இசைந்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சர்வதாரி சம்வத்சரத்து ஆவணி(மீ)யஉ நாள் கொங்க மண்டலத்து

2. பெரூர் நாட்டு பெரு ஊரும் தந்திரத்தொம் வாய(ற)றக் காநாட்டு குயிலெ ஊரும் ஊ(ராளி)

3. களுக்கு (நி)ல விலெ பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது இவர்களூரில் நா

4. (கீ) ஸ்வரம் உடையாற்கு இவர்க(ள்) வைக (ளு)ம் அமுதுபடி அரிசி குறுணி

5. ....க்கல் இவர்கண்டு (இ) நாளில் கொண்(டி) மாது

6. ....கண்ட.........லவி நில(த்)துக்கு எல்லெ

7. (ம)ன்ருட்டு தவித்தா(ன்) நிலத்துக்கு..........

8. ய்கிறகவர் களுக்கு மெற்கு தென்பாற்கெ(ல்)

9. லெ உடையார் திருவான்ப(ட்டி) ஆளுடையார்

10. வதானம் அரைமாவுக்கு வ(ட)க்கும் மெல்(பா)

11. ....ற்(கு) எல்லை (இந்த)............
(தந்திரம்-படை)

எண்–313

இடம் : பேளூர் திருவான்பட்டியுடையார் கோயில் கருவறை தெற்குச் சுவர்

அரசன் : விக்கிரம சோழன் (யா. 3) கி.பி. 1276 – 77

செய்தி : சிவபாத சேகரச் சதுர்வேதி மங்கலத்துச் சடையார்இடங்கை நாயக ஈஸ்வரமுடையார்க்கு அமுதுபடிக்காக ஒரு மாமுந்திரிகை நிலம் விட்டனர். இந்நிலத்திற்குச் செலுத்தவேண்டிய குடிமைப்பாடு கடமை உட்பட்ட வரிகளைத் தாங்களே செலுத்துவதாகவும், தன்மதானம் பண்ணிக் கொடுத்தனர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிர(ம) சொழதெவற்கு யாண்டு-3 வது ஆளுடையார் இடங்கைநாயக
2. ஈ(ஸ்வர) முடையாற்க்கு சிவபாதசெகரச் சதுர்வெதி மங்கலத்து ஸபையொம் அமுதுபடிப்பு
3. றமாக விட்ட நிலம் விரகெரள விலாடகுல மாணிக்க வதிக்கு கிழக்கு அதிராஜராஜ வாய்க்கா
4. லுக்கு தெற்க்கு கண்ணாற்று 3 (ஆம்)சதிரநிலம் மாவும் 4 (ஆம்) சதிரநிலம் முந்திரிகையும் ஆகநிலம்
5. ஒருமா முந்திரிகையும் பெருமாள் திருக்கொற்ற வாசலால் பொந்த குடிமைப்பாடு கடமையுட்
6. பட நாங்களெ சந்திராதித்தவரை யிறுப் பொமாக தந்மதானம் பண்ணிக் குடுத்தொம்
7. சபையொம் இது பந்மாகெஸ்வரரட்கைஷ ஆறு சமக்கட்டார் ரகைஷ.

எண்–314

இடம் : பேளூர் திருவான்பட்டியுடையார் கோயில் கருவறை வடக்குச் சுவர்

அரசன் : வீரராசேந்திரன் (யா. 18) கி. பி. 1275 – 76

செய்தி : பேளூர் தென்கயிலாமுடையார் கோயிலில் சந்தியா தீபத்திற்காக அப்பனியெடயென் (அப்பன் இடையன்) ஸ்ரீபண்டாரத்தில் அச்சு ஒன்றை முதலீடாக வைத்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராசெந்திர தெவற்கு யாண்
2. 18 ண்டு ஆவது முதல் ஆளுடையார் தெ

3. ன் கயிலாயமுடையாற்கு அப்பனி எடயென் வைத்த
4. சந்தியாதீபம் ஒன்றுக்குநான் ஒடுக்கின அச்சு 1-ம் சந்தியா
5. திபம் சந்திராதித்தவரை செல்வதாகப் பன்மாயெசுவரரஷெ.

எண்–315

இடம் : தென்கயிலாயமுடையார் கோயில் முன்மண்டபம் தெற்குச் கதவின் முன்புறம்

அரசன் : விக்கிரமசோழன் (யா. 3)

செய்தி : பேரூர் தென்கயிலாய முடையார் கோயில் மண்டபத் திருநிலையும் கதவும் குறிச்சி மன்றாடி சுந்தரனான தொண்டைமான் செய்வித்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கி
2. ரம சொழ தெவ
3. ற்கு யாண்டு முன்
4. ருவது ஆளு
5. டையார் தென் கயி
6. லாயமுடைய
7. ார்கொயில் திரு
8. மண்டகத்தில்
9. திருநிலயுங்கத
10. வும் செய்வித் (தென்)
11. குறிச்சியான விர
12. நாராயண நல்லூ
13. (ர்) மன்ருடி தெ
14. (வன்) சுன் தன்ன
15. ந தொண்டை
16. ட மாந் னெந்

சுண்டக்காமுத்தூர்

எண்–315(அ)

இடம் : ஊருக்கு தெற்கில் உள்ள பாறை

அரசன் : முதலாம் ஆதித்தன் (சோழன்)

எழுத்து : வட்டம்

செய்தி : மன்னனின் ஆட்சியையும், சிறப்பையும் கூறும் வெண்பா – இராசகேசரிப்பெருவழி.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ இராகெசரிப்
2. பெருவழி திருநிழலு மன்னு யிருஞ்சிறந்த
3. மைப்ப ஒரு நிழல் வெண்டி
4. ங்கள் பொலொங்கி ஒரு நிழல் பொ
5. ல் வாழியர் கொச்சொழன் வளங்
6. காவிரி நாடன் கொழியர் கொக்கண்ட
7. ன் குலவு.

எண்–315(ஆ)

இடம் : மேற்படி கல்வெட்டின் அருகில்
அரசன் : முதலாம் ஆதித்தன் (சோழன்)
செய்தி : இக்கல்வெட்டு கேரளத்திற்குச் செல்லும் பெருவழியை இராகேசரிப் பெருவழி எனக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொ இரா
2. சகெசரிப்
3. பெருவழி

திருப்பூர் வட்டம்

பெருமாநல்லூர்

எண்–316

இடம் : உத்தமசோழீஸ்வரர் கோயில் மகாமண்டப வடக்குச் சுவர்
அரசன் : வீரபாண்டியன், யா 23 (கி.பி. 1288)
செய்தி : கரை உடைந்து சிதைந்த குளத்தைச் சீர்படுத்தி அணைகட்டி அந்நீர்பாயும் நிலத்தில் நெல், கமுகு. தெங்கு ஆகியவை பயிர் செய்து அரசுக்குச் செலுத்தவேண்டிய மேல்வாரத்தில் பயிர் அறுவடை செய்யத் தொடங்கிய நாள்முதல் 4 ஆண்டுகளுக்கு நீக்கியும், பின்வரும் ஆண்டுகளில் சிறிது சிறிதாக வரிகளைக் கூட்டியும் வரி விதித்திருக்கும் முறை கொங்குப் பாண்டியர் காலத்து நீர்ப்பாசனத் திட்டமும் திருத்தா நிலம் திருத்தமேற்கொண்ட திட்டமும் வரியீட்டு முறையும் இதனால் தெளிவாகிறது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரபாண்டிய தெவற்கு யாண்டு 22-வதிற்கதிரா
2. வது சித்தியார்த்தி சம்வத்சரத்து சிங்கநாயிற்று பூர்வ பட்சத்து
3. பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற இரெபதி நாள் வட
4. பரிசாரநாட்டு ஒத்தனூரான பெரும்பழனத்து ஊரும் ஊராளி
5. களொம் ஆதம்பாக்கத்து வரதராஜ பட்டர்மகன் ஸ்ரீராம பட்
6. டற்கும் சூரசாரம்பி திருவெண்காடு பட்டர் மகன் நாராயண

7. பட்டரும் உப்பம்பிரால கொவிந்த பட்டர் மகன்
சொலைப் பிரா

8. ன் பட்டற்கும் இவர்தம்பி மகாதெவபட்டற்கும்
சூரசாரம்பி திரு நட்ட மா

9. டி பட்டர் மகன் கெங்காதர பட்டற்கும் சூரசாரம்பி
வினாயகா பட்டர் மகன்

10. சொதிமாணிக்க பட்டர்க்கும் பெச்சங்கிமசிவதனவாசி
பட்டர் மகன் நாராயண

11. பட்டர்க்கும் சிற்றிங்கூர் மலைப் பெருமாள்
நாராயண பட்டர்
காங்கய நாட்டு மு

12. த்தூரில் வியாபாரி மன்றுளாடுவான் சம்பந்தப்
பெருமாளுக்கும் நாங்கள் திருமலையில் கல்வெ

13. ட்டிக் குடுத்த பரிசாவது எங்களுரில் கிழ்காட்டில் பரை
பள்ளத்துக்கு உடை

14. குளம் நெடுங்காலம் சாயாக் கரைப்பட்டுக் கிடந்த
இந்த உடை பள்ளத்துக்கு க

15. ரைக்கும் தூம்புக்கும் வெண்டும் முதல் தாங்களெ
இட்டு அடைத்துக்

16. கொள்ளக் கடவார்களாகவும் இப்படிக் கொண்டு
உடைப்புக்கும்

17. கரைக்கும் தூம்புக்கும் வெண்டும் முதல் தாங்கள்
இடுகையி

18. ல் இக்குளக் கீழ் தூம்புகளாலும் அணையாலும்
நீர்பாயும் நிலம் எ

19. ங்கும் திருத்திப் பயிர் செய்யக் கடவார்களாகவும்
பயிர் செய்து பெ

20. ரு மிடத்து திருத்தின திருத்தின ஆண்டு முதல்
விளைச்சலொடெ நாலா

21. ட்டை நாள் முற்றூட்டும் உண்ணக்
கடவார்களாகவும் பின்பு மெல்பா

22. கத்துக்கு மூவாட்டை நாள் நாலில் ஒன்று
கொள்வொ மாகவும் பின்பு இராட்டை

23. நாள் மூன்றில் நாள் ஓ ஒன்று கொள்வா மாகவும்
பின்பு ஒன்று கொள்வொமாக

24. வும் இவ்வரதராஜ பட்டர் மகன் ஸ்ரீராமபட்டர்
குடங்கொண்டு இதில் இவர் தம்பி உடைய

25. ஏற்கு பங்குகால் நீக்கி பங்கு ஒன்றெமுக்கால் இத்
திருவெண்காடு பட்டர் மகன் நாராயண

26. பட்டர்க்குப் பங்கு ஒன்றறை இதில் திருக்தொடி
யாவுடையார் மகன் எச்சற்கு பங்கு அரை நீக்கி

27. பங்கு ஒன்று இக் கொளிந்த பட்டர் மகன் சொலைப்
பிரான் பட்டர்க்கு பங்கு ஒன்று இவர் தம்பி ம

28. கா தெவ பட்டற்குப் பங்கு இரண்டு இதில் இவர் மச்சுனன் இணையாற்கு பங்குகால் மகா மா செரி சிரா
29. மு தெவர் மகன் மண்டல புருஷர்க்குப் பங்கு காலும் பெரும் பெருமான் ஆடக் கொண்டாற்கு
30. பங்கு அரையும் ஆக பங்கு ஒன்று நீக்கி பங்கு ஒன்று இத்திரு நட்ட மாடி பட்டர் மகன் கெங்காத
31. ர பட்டற்குப் பங்கு இரண்டு இதில் இவர் மருமகன் உலகுடையாற்கு பங்கு அரை
32. யும் இவர் மச்சினன் திருமழபாடி உடையாற்கு பங்கு அரை ஆக பங்கு ஒன்று நிக்கி பங்கு ஒ
33. ன்று நிக்கிப் பங்கு ஒன்று இவ்விநாயகப்பட்டர் மகன் சொதி மாணிக்க ப
34. ட்டற்கு பங்கு ஒன்றெகால் இதில் இவர் தமையன் நாயகற்குப் பங்கு காலும்
35. இவர் மச்சுனன் தெவற்கும் இதெவர் மருமகன் இராமற்கு அரையும் ஆக பங்
36. கு முக்கால் நிக்கி பங்கு அரை இசிவதனவாசி பட்டர் மகன் நாராயண
37. பட்டற்கு முக்கால் இம்மலைப் பெருமாள் நாராயண பட்டற்கு பங்கு கால்
38. இவர் தம்பி திருச்சிற்றம் பல முடையாற்கு பங்குகால் இச் சம்பந்தப் பெருமாளுக்கு ப
39. ங்கு முக்கால் காங்கய நாட்டில் வெள்ளக்கலில் வியாபாரி பிள்ளன்சொக்கனுக்கு ப
40. ங்கு அரை ஆக பங்கு $12^1/_4$-க்கும் பங்குச்கு காணி நிலமாக பன்னிரண்டு காணி முந்திரிகை
41. நிலம் கமுகு தெங்கு மரங்கள் வைத்து முற்றூட்டாக அனுபவிக்கக் கடவார்களாகவும் விதை இ
42. ரட்டி காவற்கூலி அறைக்கூலி அடிகூலி பொதுவிலெ இடக் கடவதாகவும் வெற்றிலை பயிர்
43. செய்யுமதுக்கு கமுகு வைப்பு நில முட்பட பறிக்கப் புக்க நாள் முதல் ஆண்டொன்றுக்கு ஆயிரங்
44. காலுக்கு முன்று பண விழுக்காடு கொள்வொமாகவும் இஞ்சி மஞ்சள் பயிர் செய்ததுக்கு
45. மெல் வாரத்துக்கு முன்றில் ஒன்று..........
46. தெங்கு வைத்துப் பொகங் கொள்ளும்...........
47. மூன்றில் ஒன்று கொள்வொமாகவும் இ
48. து தாங்களெ கொள்ளக் கடவார்களாகவும்.......
49. டம் உள்ளமுதல் குளத்தக்கு......
50. டைத் தலையுருவ திருத்தினால் கு..........
51. டு முதல் பொதுவிலெ இடக்..........
52. கு பன்னிரண்டெ காலும் விடுபற்.........
53. ங்கள் கொண்டுங் கொடுத்துங்கொள்வ
54. ர்களாகவும் இப்படி கொண் (டுமக்கள் மக்)

55. கன் சந்திராதித்த வரையனுபவித்துக் (கொள்வார்கள)
56. ஏகவும் இப்படி சம்மதித்துதிருமலையில் கல்வெட்டிக்கு
57. டுத்தொம் ஊரும் ஊராளிகளொம்.

எண் – 317

இடம் : அர்த்தமண்டப – வடக்குச் சுவர்
அரசன் : வீரபாண்டியன், யாண்டு 10
செய்தி : பரஞ்சேர்பள்ளி வணிகன் சொக்கன் மனையாட்டி உத்தமசோழீசுரர்க்குத் திருவிளக்கு வைக்க இக்கோயில் சிவபிராமணரிடம் பணத்தைச் செலுத்தினாள்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரபாண்டிய தெவற்கு யாண்டு ய-வது ஐப்பசி மாதமுதல் காங்கய நாட்டுப் பரஞ் சேர் பள்ளியில் வியாபாரி சொக்கன் மணைக்கி
2. ழத்தி தெவயெ ஞயனர் உத்தம சொழீச்சுரமுடை யாற்கு நான்வைத்த திருவிளக்கு ஒன்றுக்கு குடுத்த அச்சொன்றுங்கைக் கொண்டென் ஒத்தனூரான
3. பெரும்பழனத்துக் காணியுடைய சிவப்பிரா மணன் காசுவ கொத்திரத்து ஆளவந்தான் அப்பனுன வன்னதான நம்பியென் குடங் கொண்டு கொயில்புகுவான் சந்திராதித்
4. தவரை செலுத்துவநாக இது பந்மாஹெ ஸ்ரரக்ஷெ.

எண் – 318

இடம் : மகாமண்டபத் தென்சுவர்
அரசன் : வீரராசேந்திரன் 15+1+1 (கி.பி.1224)
செய்தி : கரையான் அடிக்கிழ்த்தளத்து வியாபாரி சடையன் நம்பியான சேரமான் தோழன் இவ்வூர் பெரும் பாழாநிலை உத்தமசோழீசுவரருக்குத் திருவிளக்கு எரிக்க சிவபிராமணர்களிடத்தில் பழஞ்சலாகை ஒன்று செலுத்தியது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரரஜெந்திர தெவற்கு யாண்டு பதினஞ்சாவதிற் கெதிராவதற் கெதிராவத
2. ஏக வடபரிசாரநாட்டிற் கரையானடிக் கீழ் தளத்திருக்கும் வியாபாரி சடையன் நம்பி யான செரமான் தொழநென் பெரும் பழாநிலைஉ
3. த்தம சொழீஸ்வரமுடையாற்கு நான்வைத்த திருவிளக்கு ஒன்றுக்கும் இந்த அச்சுப் பழஞ்சலாகை யொன்று

4. க்கும் சிவப்பிராமணரில் காஸ்வகொத் திரத்து அவிநாசி தெவப் பிள்ளையான ஒத்தனூர் பட்ட
5. ரும் இம்முவொம் அச்சொன்றுங்கொண்டு சந்திராதித்த பலம் இவ்விளக்கு செலுத்தி வருவொமாகவும் குடங்கொடு வாநா கவும் இது பந்மாஹெஸ் வரரக்ஷை.

எண்–319

இடம் : முகமண்டப வடக்குப் பட்டியில் உள்ள சாசனம்
அரசன் : சுந்தரபாண்டியன், (யா. 9)
செய்தி : காடையூர் வியாபாரி சிறியான் பிள்ளை என்பவன் இவ்வூர் உத்தமசோழீசுவரர்க்குத்திரு நந்தாவனம் அமைத்துக் கொள்ள நிலம் உதகம் பண்ணிக் கொடுத்தான்

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொச்சடைபன்மரான திரிபுவனச்சக்கர வத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தெவற்கு யாண்டு 9வது தைமாதம் காங்கைய நாட்டுக் காடையூரில் வியாபாரி சிறியான் பிள்ளையானுன பிறைசூடும் பெருமாளெனென் வடபரிசாரநாட்டு ஒத்தனூரான பெரும்பழனத்து ஊருமுராளிகளும் பக்கனரனறுதி யாகக் கொண்டநிலத்
2. துக்கு மெற்கும் கொங்கிளங்கொனுர் தொட் டத்துக்கு வடக்கும் குறந்தலைக்குக் கிழக்கும் வடவிட்டலுக்குத் தெற்கும் இந்நான்கெ ல்லைக் குட்பட்டநிலம் இவ்வூரி நாயனுர் உத்தம் சொழிசுரமுடைய நாயனுர் க்கு ஒரு நந்தாவனஞ் செய்வதாக கொண்டு உதகம் பண்ணிக் குடுத்தென் பிறைசூடும் பெருமாளெனென் இது சந்திராதித்ய வரை செல்வதாக பண்..........

எண்–320

இடம் : முகமண்டப – வடக்குப்பட்டி
அரசன் : வீரபாண்டியன், (யா. 15) (கி.பி.1280)
செய்தி : சோழ மண்டலத்து திருக் கண்டியூர் விளக்கத்திரையன் பொன்னம்பலக் கூத்தன் இவ்வூரையும் ஊராளிகளையும் கொண்டு காலபைரவர் கோயிலைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக வேண்டிய பொருள் கொடுத்திருக்கிறான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரபாண்டிய தெவற்கு யாண்டு யருவதிற் கெதிரா வது சொழ மண்டலத்து

திருக்கண்டியூர் விளக்கத்தியைன் அம்பலவன்
பொன் னம்பலக் கூத்தபெனன் வடபரிசார நாட்டு
ஒத்தனூரரான பெரும் பழனவூரும் ஊராளிகளொம்
நாயனூர்

2. உத்தம சொளீஸ்வரமுடையார் கொயிற்
கெஷத்திரபாலப்பிள்ளை யார் கொயிற்
புதுக்குவதாக..........

எண்–321

இடம் : முகமண்டபத் தெற்குச் சுவர் –(வாயிலுக்குக் கிழக்கு)
அரசன் : வீரபாண்டியன், யாண்டு 7 (கி.பி.1272)
செய்தி : இவ்வூர் வெள்ளாளன் ஒருவன் இக்கோயிலில் திரு விளக்கு வைக்கப் பழஞ்சலாகை அச்சு ஒன்றை இக்கோயில் சிவபிராமணரிடம் உபயமாகக் கொடுத்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரபாண்டிய தெவற்கு ௭-வதுஐப்பசி மாதமுதலாகவ
2. டபரிசாரநாட்டு ஒத்தனூரரான பெரும் பழனத்து வெள்ளாளன் த
3. வந்னதைகளில் சிறியான் செயங்கொண்ட சொழ காமிண்டனெ நாய
4. ஞர் உத்தம சொழிசுரமுடையார் முகமண்டபத் துக்கு நான்வைத்த திரு
5. விளக்கு ஒன்றுக்குக் குடுத்த பழஞ்சலாகை அச்சு ஒன்று இவ்வச் சொன்று
6. ங் கைக் கொண்டென் மெற்படி நாட்டு ஒத்த னூரரான பெரும் பழனத்துக் கா
7. ணியுடைய சிவப்பிராமணன் காசுவ கொத்திரத்து ஆளவந்தான் அப்பனான அ
8. ன்னதான நம்பியென் குடங்கொடு கொயில்புகுவான் சந்திராதி
9. த்தவரை செலுத்துவானுக இது பன்மானாஹெஸ்வரரகைஷ.

எண்–322

இடம் : அர்த்தமண்டப வடகுவர்
அரசன் : வீரபாண்டியன் (யா 4) (கி.பி.1211)
செய்தி : செங்கற்பள்ளியில் வாழ்ந்த சிவபிராமணனின் மனையாட்டி கணபதியாழ்வி இக்கோயில் நாயனார்க்கு சந்தியாதீபம் எரிக்கப் பழஞ்சலாகை அச்சு ஒன்றை இக்கோயில் சிவபிராமணரிடம் செத்தினாள்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரராசெந்திர தெவற்கு யாண்டு நாலாவது குறுப்
2. பு நாட்டில் செங்கற்பள்ளியான ஆறபு தற்கூ
3. நல்லூரில் இருக்கும் பிராமணர் கவு சிய கொத்திரத்தில் இ
4. யாந் கரிய பிள்ளையாந விரராசெந்திர பிரம்மராயன்
5. கிழத்தி கணவதியாழ்வியென் பெரும்பழாநில் நாயனுர் உத்
6. தம செொழிசுரமுடையாற்கு நாந் வைச்சதிரு விளக்கு சந்தி
7. யாதிபம் விளக்கு ஒன்றுக்கு குடுத்த அச்சுபழஞ்சலாகை
8. ஒன்றும் பெரும்பழாநில் இருக்கும் சிவபிராமணன் கா
9. சுவ கொத்திரத்தில் பெரியந் அவிநாசியாந் திருவதிபதி
10. யெந் இவச்சு ஒன்றுங் கொண்டு சந்திராதித்த பலம் இவ்விளக்கு
11. செல்லு(த்தி) வருவொமாகவும் குடங்கொடு கொயில் புகுவாந்
12. யிது பந்மாயெஸ்வரயிரக்ஷெ.

எண் – 323

இடம் : முகமண்டபத்தென் சுவர் – வாயிலுக்கு மேற்கு
அரசன் : வீரபாண்டியன் (யா. 6) கி.பி. 1271
செய்தி : இவ்வூர் வெள்ளான் சோழ நாராயணக் காமிண்டன் உத்தமசோழீச்சுர முடையார் கோயில் தூப தீபம் வைக்க பழஞ்சலாகை அச்சு ஒன்று சிவ பிராமணர் கையில் கொடுத்தது பற்றிய கல்வெட்டு.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரபாண்டிய தெவற்கு யாண்டு ஆறாவது ஆனி
2. மாதம் முதலாக வடபரிசார நாட்டு ஒத்தனூரான பெ
3. ரும் பழனத்து வெள்ளாளன் மூலரில் அவிநாசி முதலியான
4. சொழனுராயணக் காமிண்டனென் நாயனுர் உத்தமெ
5. சாழீசுரமு (டைய)ற்கு நான்வைத்த தூபதிபத்துக்கு
6. க்குடுத்த பழஞ்சலாகை (அச்செ)ான்று அச்சொ
7. ன்றுகை (க்கொண்) டென் மெற்படி நாட்டு ஒத்தனூ
8. ரான பெரு(ம்பழ) னத்துக் காணியுடைய சிவபிராமண
9. ன் காசுவ கொத்திரத்து ஆளவந்தான் அப்பனுன அன்ன

10. தான னம்பியென் குடங்கொண்டு கொயில் புகுவான் சந்திராத்த
11. வரை செலுத்துவாஞக இது பந்மாஹெஸ்வரரக்ஷெ.

எண்–324

இடம் : முகமண்டப தென்சுவர் – வாயிலுக்கு மேற்கு குமுதக்
அரசன் : வீரபாண்டியன் (யா 13) கி.பி.1298
செய்தி : பெரும் பழனத்து வெள்ளாளன் சிறியான்பிள்ளான் இந்நாயனார்க்கு திருவிளக்கு ஒன்றுக்குக் கொடுத்துத அச்சு ஒன்றைப் பெற்றுக் கொண்டு இக்கோயில் சில பிராமணன் விளக்கெரிக்க இசைவு தெரிவித்தது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரபாண்டிய தெவற்கு யாண்டு யங–வது ஆவணி முதலாக வடபரிசார நாட்டு ஒத்தனூ
2. ரான பெரும்பழனத்து வெ(ள்ள)ாழன் தெவந் தைகளிற் சிறியான் பிள்ள(ாெ)னன் நாயஞர் உ(த்தம)
3. சொழ...............த்திருவிளக்கொன்றுக்கும் குடுத்த அச்சொன்று இவ்வச் சொன்று
4. (கைக்கொண்டு) டன் மேற்படி நாட்டு ஒத்த னூரான (பெரு)ம் பழனத்துக் காணியுடைய சி
5. வப்பிராமணன் காசுவகொத்திரத்து ஆளவந்த தான் அப்பஞன அன்னதான நம்பியெ
6. .... சந்திராதித்தவரைசெலுத்துவதாக பன்மா ஹெவரரக்ஷெ

எண்–325

இடம் : முகமண்டப தென்சுவர் கிழக்கு
அரசன் : வீரபாண்டியன் (யா.9) கி.பி.1274
செய்தி : இவ்வூர் ஆண்டார்களில் (சிவனடியார்) முக்கணான் சேரமான்தோழன் இக்கோயிலுக்கு 15 காசுகள் தானமாகக் கொடுத்தான். இத்தானத்தின் நோக்கம் எழுத்துச் சிதைவால் அறியமுடியவில்லை.

கல்வெட்டு

1. ஸ்ரீவஸ்திஸ்ரீ விரபாண்டிய தெவற்கு யாண்டு
2. 9-வது புரட்டாசி மாதமுலாக வடபரிச
3. ாரநாட்டு ஒத்தனூரான பெரும்பழனத்து
4. க் கும்பிட்டிருக்கும் ஆண்டார் களிற் தெவன்
5. முக்கணன் செரமாந் தொழனென்.........நா

6. யனூர் உத்தம சொழீசுரமுடையா.........
7. டபகதுக்கு அடங்கலிட்டு அச்சு உடல
8. ஏக நானிட்ட அச்சுபதினஞ்சு இத்தன்மம்
9. சந்திராதித்த வரை செல்வதாகப்
பன்மாஹெறவரரக்ஷெ.

எண்–326

இடம் : முகமண்டப வடக்குச்சுவர்

அரசன் : வீரபாண்டியன்,(யா.7) கி.பி. 1972

செய்தி : காடையூர் வியாபாரி சிறுப்பிள்ளை இந்நாயனார்க்கு திருவிளக்கு ஒன்றுக்கு பழஞ்சலாகை அச்சு ஒன்றை இக்கோயில் சிவபிராமணனிடம் கொடுக்க அவனும் இவ்விளக்கு எரிக்க இசைந்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஶ்ரீ விரபாண்டிய தெவற்கு யாண்டுஎ-வது ஐப்பசி மாத
2. முதலாகக் காங்கைய நாட்டுக் காடையூர் வியாபாரி முதலி சிறுப்பி
3. ள்ளையெ நாயனுர் உத்தம சொழீசுரமுடையாற்கு நான் வை
4. த்த திருவிளக்கு ஒன்றுக்குக் குடுத்த பழஞ்சலாகை அச்சொ
5. ன்று இவ்வச்சொன்றுங் கைக் கொண் டெங் வடபரிசாரந
6. ஏட்டு ஒத்தனூரான பெரும் பழனத்துக் காணியுடைய ப்
7. பிராமணன் காசுவகொத்திரத்து ஆளவந்தான் அப்பனுன அ
8. ன்னதான நம்பியென் திருவிளக் கொன்றுங் குடங்கொண்டு கெ
9. காயில் புகுவான் சந்திராதித்த வரை செலுத்துவதாக
10. இது பந்மாஹெஸ்வரரக்ஷெ.

எண்–327

இடம் : முகமண்டப வடக்குச் சுவர்

அரசன் : வீரபாண்டியன், (யா.7) கி.பி. 1272

செய்தி : சோழ மண்டலத்துக் கண்டியூர் பொன்னம்பலக் கூத்தன் பெரும்பழனத்து நாயனார் சேத்திர பாலப் பிள்ளையாருக்கு எண்ணெய்க் காப்பிட பழஞ்சாகை அச்சுஒன்றை இக்கோயில் சிவபிராமணனிடம் உபயமாக வழங்கினான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரபாண்டிய தெவற்கு யாண்டு எ-வது ஆனி
2. மாதமுதற் சொழமண்டலத்துக் கண்டியூர் விளக்கத்தரையன்
3. அம்பலவன் பொன்னர் மெனியான் பொன்னம்பலக்கூத்த ெ
4. னன் ஒத்தனூரான பெரும்பழனத்து நாயனார் க்ஷேத்திரபாலப்
5. பிள்ளையாற்.........யணைக் காப்பிட்டுக்குடுத்த பழஞ்சலாகை அ
6. ச்சு ஒன்று இவ்வச்சொன்றுங்கைக்கொண்டென் ஒத்தனூரான
7. பெரும் பழனத்துக் காணியுடைய சிவப் பிராமணன் காசுவகொ
8. த்திரத்து ஆளவந்தான் அப்பனுன அன்னதான நம்பியென் சனியொ
9. ன்றுக்கு......ம் யெண்ணையுமாக காப்பு மஞ்சற் னெல்லிக் காப்புஞ்
10. சனியாந..........னுங் குடங் கொண்டு கொயில் புகுவான் சந்திராதித்தவரை செலுத்துவதாக
11. இது ப
12. நமாஹெ
13. வர
14. ரஙெ
15. க்ஷ.

எண்–328

இடம் : முகமண்டப வடக்குச்சுவர்

அரசன் : வீரபாண்டியன் யா. 7, 1272 கி.பி.

செய்தி : கீழ்க்கரைக் கீழங்க நாட்டுக் கொந்தளத்து சாலிகரில் மொடி சிறுப்பேரல்லான் இந்நாயனார்க்கு சந்தியா தீபத்திற்குப் பழஞ்சலாகை அச்சு ஒன்றை இக்கோயில் சிவபிராமணனிடம் உபயமாகக் கொடுத்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விரபாண்டிய தெவற்கு யாண்டு எ-வது தை மாத
2. முதல் கீழ்க்கரைக் கிழங்க நாட்டுக் கொந்தளத்திற் சாலிகரில் ெ
3. மாடி சிறுப் பொல்லானென் நாயனர் உத்தமசொழீசுரமுடை
4. யாற்கு நான்வைத்த திருவிளக்கு ஒன்றுக் குடுத்த பழஞ்சலானை

5. க அச்சு ஒன்று இவ்வச்சொன்றுங்கைக் கொண்டென் ஒத்தனூ
6. ரான பெரும்பழனத்துக் காணியுடைய சிவப்பிராமணன் காசுவ கொ
7. த்தித்து ஆளவந்தான் அப்பனுன அன்ன தானனம்பியென் குடங்
8. கொடுகொயில் புகுவான் சந்திராதித்த வரை செலுத்துவதாக இ
9. து பநாஹெவரரக்ஷெ.

எண்–329

இடம் : அர்த்த மண்டப வடக்குச்சுவர்

அரசன் : வீரபாண்டியன் யா. 5, 1270 கி.பி.

செய்தி : இக்கோயில் க்ஷேத்திரபாலப் பிள்ளையாருக்கு (காலபைரவர்) சோழமண்டலத்துக் கண்டியூர் அதிகாரி பொன்னம்பலக் கூத்தன் அபிக்ஷேகக் கலம் ஒன்றைச் செய்து கொடுத்தான். மேலும் ஒருதிருவிளக்கும் கொடுத்ததாக ஒரு கல்வெட்டுள்ளது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஶ்ரீ விர(பாண்டிய) தெவற்கு
2. யாண்டு ரு-வது மார்கழி மா
3. தம் சொழமண்டலத்துக் கண்(டி)
4. யூர் விளக்கத்தரையன் அம்பல
5. வன் பொன்னுர் மெனியான் பொன்ன
6. ம் பலக் கூத்தனென் ஒத்தனூரான பெ
7. ரும் பழனத்து நாயனுர் கெஷத்திரபால
8. ப் பிள்ளையாற்கு நான் பண்ணுவித்
9. த அவிகெஷக கல மொன்றுஞ்சந்திரா
10. தித்த வரை செல்வதாகப் பந்மாஹெஸ்வர
11. ரக்ஷெ.

எண்–330

இடம் : முகமண்டப வடக்கு (கிழக்கு)

அரசன் : வீரபாண்டியன்

செய்தி : மேற்கல்வெட்டில் குறித்த பொன்னம்பலக் கூத்தன் இந்நாயனார் கோயில் சேடித்திரபாலப் பிள்ளையார்க்கு திருவிளக்கு ஒன்று வைக்க இக்கோயில் சிவபிராமணனிடம் அச்சு ஒன்றை உபயமாக வழங்கினான்.

கல்வெட்டு

1. ஸ்ரீவஸ்திஸ்ரீ விரபாண்டிய தெவற்கு யாண்டு
2. து ஆனிமாதம் செழமண்டத்துக் கண்டி
3. யூர் விளக்கத் தரையன் அம்பலவன் பொன்ன
4. ர் மெனியான பொன்னம்பலக் கூத்தனென் ஒத்த
5. னூரா(ன) பெரும்பழனத்து நாயனர் கூஷத்திரபா
6. லப்பிள்ளையாற்கு நான்வைத் திரு விளக்கொன்று
7. டுத.............அச்சொன்று இவ்வச்சொ
8. ன்றுக் கைக் கொண்டென் பெரும்பழனத்துக்கா
9. ணியுடைய சிவப்பிராமணன் காசுவ கொத்திர
10. த்து ஆளவந்தான் அப்பானுன அன்னதான நம்பி ெ
11. யன் குடங்கொடுகொயில் புகுவான் சந்திராதித்
தவரை

12. செலு
13. த்துவ
14. ஈனுக
15. பநா
16. ஹெ
17. வர
18. ரிலெ
19. கூஷ.

எண்–331

இடம் : சபாமண்டபத் தென்சுவர்

அரசன் : சுந்தரபாண்டியன் (யா–8)

செய்தி : நல்லூரான அமரபுயங்கரச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் (பிராமணர்கள் சபை) நல்லூர் மக்களால் பெரிதும் துன்புறுத்தப் பட்டனர். (காரணம் அறியப் பெறவில்லை) இவர்கள் ஒத்தனூரான பெரும்பழனத்து ஊரும் ஊராளிகளிடமும் தங்கள் வாழ்க்கைக்குப் பாதுகாப்புக் கொடுக்குமாறு வேண்டினர். இதற்காக உத்தமசோழீச்சரமுடையார்க்கு ஆண்டுதோறும் அமுதுபடிக்கு 50 கலம் நெல் அளப்பதாக மேற்படி சபையார் உறுதியளித்தனர்.

கல்வெட்டு

1. கொமாற பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் சுந்தர
2. பாண்டிய தெவற்கு யாண்டு 8 ஆவது வைகாசி மாதம் ஞயனர்
3. பிரம்மதேயம் ஸ்ரீநல்லூரான அமர
4. புயங்கர சதுர்வெதி மங்கலத்து ஸபையொம் வடபரிசாரனுட்டு ஒத்த
5. னூரான பெரும்பழனத்து ஊரும் ஊராளிகளுக்கும் நாங்கள் வாழ்வுதிட்டுக் குடுத்த
6. பரிசாவது எங்களுர் சிற்றூராய் நல்லூராலும் நலிவு படுகையில் எங்களுர் நலிவுப

7. டாமல் இவர்கள் பரிச்சித்துக் கொவ்வதாக
ஆண்டொன்றுக்கு ஊராடு காலால் வாழு
8. இறுத்தும் பொது நெல் ருய-ள இன்னெல்
ஐம்பதின்கலமுங் கார்பாதி பசானம்
9. பாதியாக ஆண்டுதொறும் அளக்கக் கடவொமாகவும்
அளக்குமிடத்து இதற்கெதிராவது முதல்
ஆண்டுதொறும் அளப்பொமா
10. கவும் எங்களுக்கொரழிவு வாராமலிவர்கள்
மக்கணுக்க எங்கள் மக்கள் சந்திரா தித்த வரை
அளப்
11. பொமாகவும் இவ்வூர் நாயனுர் உத்தம
சொளீசரமுடையார்க்கு அமுதுபடியாக
அளப்பொமாகச் செம்பிலும்
12. சிலையிலும் வெட்டிக் கொள்வார்களாக வாழ்வு
குடுத்தொம் பெரும்பழனஊரும் ஊராளிகளுக்கும்
நல்லூரான
13. அமரபயங்கரச் சதுர்வெயதி மங்கலத்து ஸபையாரொம்.
இதுபந்மா ஹெஸ்வர ரக்ஷெ.

எண்–332

இடம் : சபாமண்டபத் தென்சுவர் மேற்குச்சுவர்
அரசன் : வீரவல்லாளன்
செய்தி : ஒத்தனூரான பெரும்பழனத்து ஊரும் ஊராளிகளும் இந்நாயனார்க்கும் ஆவுடைநாச்சியார்க்கும் ஒரு குளத்து நீர்பாயும் நான்கு நாழி விதை விளையும் நிலத்தைத் தானமாக வழங்கியதைக் குறிக்கின்றது.

கல்வெட்டு

1. வல்லாள தெவர் ப்ரத்வி ராஜ்யம் பண்ணி (அருளா)
2. நின்ற ரத்தாக்ஷி சம்வத்ஷரத்து
3. உ-தியதி வடபரிசார நாட்டு ஒத்(தனூரான பெரு)
4. ம் பழனத்து ஊரும் ஊராளிக ெ
5. ளாம் உத் தம சொழீச் சரமுடைய னுய(னு)
6. ருது நாச்சியார் ஆவுடை நாச்சியாற்கு
7. காலால் அரிசி நாழிக்கு நாங்கள் கல்வெ ....
8. ங்கு நாழியால் வடக்குக் குளத்திலெ ....
9. குக் குளத்திலெனுனழி விதைக்கு வயலு...........
10. ப்படி செல்வதாக இதுக்கு ....
(பல இடங்களில் சிதைந்துள்ளன)

எண்–333

இடம் : அர்த்தமண்டப வடசுவர் பலகணி அருகில் மேற்கு நோக்கி

அரசன் : வீரபாண்டியன் யா. 7, கி.பி. 1272
செய்தி : சோழமண்டலத்து குலோத்துங்க சோழச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் இந்நாயனாருக்கு இரண்டு திருவிளக்கு எரிக்க அச்சு இரண்டும் உபயமாக இக்கோயில் சிவபிராமணரிடம் வழங்கினர்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தெவற்கு யாண்டு எ-வது
2. சொழமண்டலத்து ஸ்ரீகொமாரன் குலோத்
3. வெ 8ங்கலத்திற் ------ தாழாசொ
4. னும் பெச்சங்கிழ நாட வருஷண ஹட்டன் (நா)
5. யனுர் உத்தமசொழீவரமுடையாற்கு வி
6. ளக்கு இரண்டுக்குக் குடுத்த அச்சு இரண்டுங் கெ
7. ாண்டென் வடபரிசாரநாட்டு ஒத்த னூரானபெ
8. யுடைய சிவப்பிராமணன் காசுவ கொத்திரத்து
9. அன்னதான நம்பியென் குடங்கொடு..........
10. திராதித்தவரை செலுத்தவானுக இது பன்மாஹரட்சை.

எண்–334

இடம் : சண்டிகேஸ்வர் கோயில் முகச்சுவர் கிழக்கு
அரசன் : வீரபாண்டியன்
செய்தி : சண்டிகேஸ்வரர் கோயிலை உத்தண்டியப்ப முதலியார் கட்டி வைத்தார் என்பதை கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு

1. தாரண வருஷம் ஆவணி
2. மாசம் 15 - பெருரிலிருக்
3. கும் செவப்பாதனுதமுதலி
4. யார் மகன் உத்தண்டி
5. யப்ப முதலியார் உபை
6. யம்.

எண்–335

இடம் : வெளியே தீபஸ்தம்பத்தின் கீழ்குத்துக்கல்லில் உள்ளது.
அரசன் : வீரபாண்டியன் யா. 7
செய்தி : ஒத்தனூரான பெரும்பழனத்தின் காணியுடைய வெள்ளாளர் மூவரில் ஒருவனும் பள்ளந்தைகளில் உத்தமனும் இவ்வூர்ச் சந்தையில் வசூலிக்கப்படும் ஆதாயத்தை உத்தம சோழீஸ்வரர் அபிசேக நைவேத்திய நந்தாதீப சந்தியா

தீபங்களுக்குச் செலவிட மதுரைப் பிரதானிஇராமப்ப அய்யனின் காரியகர்த்தரான சிதம்பரநாத பிள்ளை சார்பாகப் பரிபாலிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

கல்வெட்டு

முதல் பக்கம்

1.	யுவ வருஷம் சித்	2.	திரை மீ
3.	ஸ்ரீமத் ராமப்ப	4.	அய்யனவ
5.	ர்கள் காரிய	6.	த்துக்கு கற்த்
7.	ததரான சிதம்	8.	பர நாத பிள்ளை
9.	பார்பத்தியத்தில்	10.	வடபரிசார நா
11.	ட்டு ஒத்தனூரா	12.	ன பெரும்பழ
13.	னத்துக் காணி	14.	யுடைய வெள்
15.	ளாழர் மூலர்க	16.	ளில் பாளந்தை
17.	களில் உத்தமனு	18.	ம் மேற்பபடியூர்ச்
19.	சந்தையிலும்	20.	மகமை
21.	கண்ட ஆதாய	22.	ம் சுவாமி உத்
23.	தம சோழீசுரமு	24.	டையற்கு அவி
25.	ஷேக நெய்வெத்	26.	தியம் நந்தியா(நந்தா)
27	திபஞ் சந்தியாதீ	28.	பத்துக்குஞ்.

இரண்டாம் பக்கம்

29.	இ நித்த தன்ம	30.	ம் பரிபாலன
31.	மாக நடத்தின	32.	பெரெல்லா
33.	ங் காசி ராமெ	34.	சுரம் செவித்த
35.	பலன் பெறுவ	36.	ராகவும் இந்த
37.	த் தன்மம் வில	38.	கிளவர்கள் கெ
39.	ங்கை கரையி	40.	ல்க் காராம் பசு
41.	ப் பிராமணன்	42.	மாதா பிதா குரு
43.	இவர்கள் அஞ்	44.	சு பெரையுங்
45.	கொன்ற தொ	46.	ஷத்திலே
47.	பொக கடவ	48.	தாகவும் ....

சர்க்கார் பெரிய பாளையம்

எண்–336

இடம் : குரக்குத்தளி ஆளுடைய நாயனார் திருக்கோயில் மகாமண்டப அர்த்தமண்டப வடக்குக் குமுதம்

அரசன் : வீரராஜேந்திரன் (யா–13) கி.பி.1220

செய்தி : வீரராஜேந்திர சோழச் சக்கரவர்த்தி என்ற சிறப்புப் பெயருடைய சிவபிராமணன் இவ்வரசனிடம் 30 பொன் கொடுத்துத் தனக்குக் கோயில் காணி தரவேண்டிக் கொள்ள இவ்வரசன் முகுந்தனூர் குரக்குத்தளி ஆளுடைய நாயனார் கோயிலையும், வழங்கியதோடு இறையிலி நிலங்களும் இக்கோயில் வருவாய்களும் மேலும் சில சிறப்பு உரிமைகளும் இவனுக்குரியதாக்கி ஓலை கொடுத்தான்.

கல்வெட்டு

1. *ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் கொனெ ரின்மை கொண்டான் விரராஜெந்திர தெவற்கு செல்லாநின்ற 13-வது வடபரிசார நாட்டு மந்னி யூரில் ஆளுடைய நாயனுர் கொயிற்காணியுடைய பிராமணரில் அப்பன் விரராஜெந்திர சொழச் சக்கரவர்த்திக்கு நம் ஓலெ குடுத்த பரிசாவதுஇவன்*
2. *நம்முடன் நின்று இனக்கு காணிதர வெணும் என்று நமக்கு தந்த பொன் முப்பது இப்பொன் முப்பதுக் கும் இவனுக்கு நாம் குடுத்த காணியாவது விரசொ ழ வளநாட்டு முகந்தனூர் உடையார் குரக்குத்தளி ஆளுடைய நாயினார் கொயிலும் தென்னூர் ஆளுடைய நாயினனுர் கொயிலும் இக்கொயில்கள் காணியாகக் குடுத்*
3. *தொம் இக்கொயிற்காணி முப்பது வட்டமும் அனுபவிப்பானுகவும் இக்கொயில்கள் பூசை தெவகன்ம பெறு எழுவன முளெப்பன எப்பெற் பட்டனவுந்த தானெ அனுபவிப்பானுகவும் இன்னு யன்மார்க்கு திருமடைவிளாகமுந்தான் வெண்டி ன குடியும் எற்றிக் கொண்டு மன்ருட்டு முதமை பெறும் வண்ணுன் மாற்றுப்படிக்கறியும் பெற்றுப் பொதுவானுகவு*
4. *இன்னுயன்மார் தெவதான முதலுள்ளவை இவன் எழுத்தின்படி சில வழிவதாகவும் இன்னுயன்மார் தெவதானங்களில் இவனு மும் ஏர் நன்செய் புன்செய் பட்டியுந் தொட்டங்களும் இன்னிலங்களுக்கு இறை தெவதானங்களால் எற் பெறப்பட்ட சுவா தந்திரியங்களும் பெற்று அனுபவிப்பா*
5. *னுக நம்மொலெ குடுத்தொம் விரராஜெந்திர சொழச் சக்கரவர்த்திக்கு இப்படிக்கு சந்திராதித்தவரை செல்வதாக செம்பிலும் சிலெயிலும் வெட்டிக் கொள்க. இப்படி அருளிச் செயலுக்கு இவை விழுப்பாத ராயன் எழுத்து.*

எண்–337

இடம் : அர்த்தமண்டப ஜகதி வரி

அரசன் : சுந்தரபாண்டியன்(யா–22)

செய்தி : சுந்தரபாண்டியன் இக்கோயிலுக்குக் கொடுத்த தேவதான நிலங்களை சிதக்குரிச்சி ஊராளிகள் உழுது பயிரிட்டு விளைச்சலில் பாதியும் வைபற்றுக் கடமையும் பல்வேறு வரிகளை வசூல் செய்து அதில் பாதியும் இக்கோயிலுக்குத் தரவேண்டியும் மன்றாட்டுக்காணியும் தோட்டமும் பட்டியும் ஆண்டுகொள்ளவும், அணை அடைத்து வாய்க்கால் வெட்டிக் குளமும் காத்து நீர்ப்பாசனம் செய்து கொள்வும் ஆதிசணடேஸ்வரர ஆணை.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சண்டெஸ்வரன் ஓலை சாகரஞ்சூழ்வையகத்துக் கண்டீஸ்ரன் கருமமாராய்க – பண்டெ அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான்பாதம் திறம்பாமல் சென்னிமெல் வைத்து – அருனால் ஆதிசண்டெயவரன்ஸ் ஆதெசம் நம் பிள்ளை ஸ்ரீசுந்தரபாண்டிய தெவற்கு யாண்டு உயஉவது – தை மாதத்து

2. வாயறைக் காநாட்டு சிதக் குரிச்சியில் ஊராளிகளுக்கும் நம் ஓலை குடுத்த பரிசாவது நம் பிள்ளை சுந்தரபாண்டிதெவர் நங்குரக்குத் தனி நாயினுற்குத் தந்த உதகப் பிரமாணப் படிக்கு சூரலூர் ஆன சுந்தரபாண்டிய நல்லூர் இவர்கள் கால்பாடாகையில் இ

3. வர்கள் நமக்கு குடி நீங்காதெவதானமாய் இவர்களெ நமக்கு குடிமக்கள் ஆகவும் இவ்வூர் நான்கெல்லைக் குள்ப்பட்ட நன்செய் புன்செய் நத்தமும் தொட்டமும் குளமும் குளப்பரிப்பும் உட்பட்ட நிலம் குடிநீங்காத் தெவதானமாகவும் நஞ்செய் உழுது வாரம் இ

4. ருகையில் ஒருகை நமக்குத் தருவார்களாகவும் புன்செய் உழுது வைபற்றுக் கடமை உள்ளதுவும் பாதி தருவார்களாகவும் அந்த ராயம் ஒட்டச்சு எலவை உகவை காணிக்கை வாசல் வினியொகம் ஓலைச்சம்படம் சந்து விக்கிரஹப்பெறும் ஹாபகபரும் உப்பாயம்

5. தறியிறை செக்கிறை தட்டொலி பாட்டொலி எண்ணைக்காணம் அணியிடுவான் வரி மற்றும் எற்பெறப்பட்டவரிகளும் தாநத்தார் நம் ஊரும் ஊராளிகளும் தண்டிமுதலாக்க இரு கையில் ஒரு கையிலெ கொள்வார்களாகவும் மன்ருடிகளும்

ஊராளிகளுக்கும் நம்புள்ள முதமைகளுக்கும்......
நடத்தின வர்களுக் குப் பெர் கலநெல்

6. விதை இறையிலிஉண்டு பொதுவார்களாகவும் இவர்களுக்கு மன்றுட்டுப்பட்டி மன்றுட்டுத் தொட்டம் மன்றுட்டுப் பெறு எளவையிறையிலி யுண்டு பொதுவார்களாகவும் உள்ளூராயினா ற்கு இறையிலி மூன்று மாநிலம் கழிப்பதா

7. கவும் இக்கொயில் உடைய முதலியார் திரு வெண்காவுடையார் ந......க்கு குரக்குத்தளி முதலியாற்கு மடப்புறம் ஆறு மாநிலம் கழிப் பதாகவும் அணையுமடச்சு காலும் வெட்டி ....ரொபமும் கண்டு மெலைக் குளமும் அடச்சு குடுப்பதாகவும் இ

8. ட்ட நெற்றி இவர் த.......தெடக் கடவதல்ல வாகவும் பின்பு இவ்விரண்டுவது அழிவு செர்ந்து கொள்ளக் கடவார் களாகவும் இவ..........யொற்றி தனதான ஸ்ரீதனத்து க்கும் உரித்தாவதாகவும் (நம் ஓ)லை குடுத் தொம் ஊரும் ஊராளிகளுக்கும் இப்ப டிக்கு ஆதிசண்டெவரன் ஸ்ரீ கரணத்தான் எழுத்து.

எண்–338

இடம் : மகாமண்டபத் தென்சுவர்
அரசன் : சுந்தரபாண்டியன்(யா–24)
செய்தி : இக்கோயிலின் திருநாமத்துக் காணியான நிலம் அமுதுபடி முதலிய திருப்பணிகளுக்கு விடப்பட்டுள்ளது. இவ்வூர்க் குளம் பாழ்பட்டமையின் அதனைச் செப்பனிட்டு, அந்நீர் பாயும் நிலத்தில் பயிர்செய்து, கோயில் காரியங்களை நடத்த வேண்டி சிலவரிகளிலிருந்தும் இந்நிலம் நீக்கப்பட்டதையும் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கொநெ ரின்மை கொண்டான் ஸ்ரீ சுந்தரபாண்டிய தெவற்கு யாண்டு 24

2. வது விரசொழவளநாட்டு முகுந்தனூர் உடையார் திருகுரக்குத்தளி ஆளுடைய நாய னார் கொயில் தானத்தா

3. ற்கு இன்னாயிநாற்கு அமுது படிக்கும் திருநாள் படிக்கும் திருப்பணிக்கும் வெண்டும் வெஞ்ச னாதிகளுக்கு

4. ம் திருமடைவிளாகத்துக்கு மெற்கில் நல்லாற் றில் குளம் அனாதி பாழாய்க்கிடந்தமை யில் இக்குள

5. மும் இந்தக் குளத்தில் நீர் ஏறிப்பாயும் நில முள்ளது திருநாமத்துக் காணியாகக் குடுத் தொம் இதுக்கு

இறுக்
6. கும் கடமை நிலவச்சு மற்று எற்படபட் டனவும் கழிச்சுகுடுத்தொம் இப்படிக்கு இவ் வொலை பிடிபாடாக
7. .... செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்க
8. இப்படி இவை விழுப்பாதராயன் எழுத்து இவை காலிங்கராயன் எழுத்து, இம்முதல் விரராசெந்திர சொழ சக்கர
9. வர்த்தி எழுத்தின்படி சிலவழிவதாக இது பன்மாஹெஸ்வரரக்ஷை. இத்தன்மத்துக்கு அகிதம் பண்ணும் அவந் ஏழெச்சம்மறுவான் உ

எண்–339

இடம் : அர்த்தமண்டப வடக்கு ஜகதி
அரசன் : வீரபாண்டியன் (யா–22) கி.பி. 1273
செய்தி : குரக்குத் தளி நாயனார்க்கு வீரபாண்டியன் பெயரால் ஏற்படுத்திய சந்தி அமுதுபடி அனாதி பாழ்பட்டுக் கிடந்த பெரும்புழைக்கரை என்ற ஊரைத் திருநாமத்துக் காணியாக இவ்வரசன் வழங்கி மற்ற நிலங்களுக்கு உரிய வரிகளையும் இக்கோயிலுக்கு உரிமையாக்கி. இவ்வூரைப் புதுப்பித்து வேண்டும் குடிகளை ஏற்றிக்கொண்டு இவ்வூருக்குச் சுந்தரபாண்டிய நல்லூர் என்று பெயரிட்டுக் கொள்ளவும் கோயில் தானத்தார்க்கு ஆணை பிறப்பித்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கொனெ ரின்மை கொண்டான் ஸ்ரீவிரபாண்டிய தெவற்கு யாண்டு அ-வது விரசொழவளநாட்டு முகந்தனூர் உடையார் குரக்குத்தளி ஆளுடைய நாயினுர் கொயில் தானத்தாற்கு இன்னுயனுர்க்கு நம் பெரால் கட்டின சந்திக்கும் அமுதுபடி உள் ளிட்ட வெண்டும் வெஞ்ச
2. னங்களும் திருநாளுக்கும் திருப்பணிக்கும் வலுப் பூற்றக்கா நாட்டு அனுதிபாழ்க்கிடந்த பெரும் புழைக்கரை இவ்வூர் நான்கெல்லைக்குட் பட்டநீர் நிலமுங் கருஞ்செய் புன்செய்யு நத்தங் களுந் தொட்டங்களும் குளமும் குளப்பரிப்பும் உட்பட்ட நிலத்தில் பழந்தெவதான நீக்கி உள்ள நிலத்தில் இறைபுரவு சிற்றுயம்
3. எலவை உகவை உப்பாயங் குடிப்பணம் திருச்சூலவரி ஓலைச்சம்படம் இறைக்காண புக்கபணம் இறை எண்ணெநெய் சுங்கம் சாரிகை தெண்டக்குற்றம் உள்ளிட்ட அனைத்து வரத்ததி இறைகளும் உட்பட திருநா மத்துக்காணி இறையிலியாகத்தந்தொம்

இப்படிக்கு அனுபவிக்கவும் இவ்வூர்க்கு எல்லை யாவது கீழ்ப்பாற் கெல்லை உ
4. சாவரையும் தென்பாற்கு எல்லை கண்டியன் கல்லவழித்த மூன்றும் யாளியும் பெருந் தொழு வழிதா...... தாக செமடையும் மெல்பாற் கெல்லை ஊற்றலார் வழியிலாக்கின மடையும் வடபாற்கெல்லை ஏற்றிலாராார்நடந்த பெரு வழியும் கற்ருன் காணிதடன்எல்லை மெக் கல்லும் இன்னுன் கெல்லைக் குட்பட்ட திரு நாமத்துக் காணியாக சந்திரா
5. தித்தவரை செல்வதாகச் செம்பிலும் சிலை யிலும் வெட்டிக் கொண்டு சுந்தரபாண்டிய நல்லூரென்று குடிஎற்றி அவ்வூரில் முதல் விரராசெந்திர சொழச்சக் கரவர்த்தி எழுத்தின்படி சிலவழிவதாக இது பன் மா ஹெஸ்வரரகெஷ.

எண்–340

இடம் : கருவறை மேற்குச் சுவர்
அரசன் : வீரபாண்டியன் (யா–21)
செய்தி : இவ்வரசன் கோயில் தானத்தார்க்கு ஆணையிட்டபடியாவது : இந்நாயனார் அமுதுபடி சாத்துப் படிகளுக்குத் தென்கரைச் சூரலூர் திருநாமத்துக் காணியாக விடப்பட்டது. அது பாழ்பட்டுக் கிடக்கையில் இவ்வூர் நான்கெல்லைக் குட்பட்ட நிலமும் வரிகளும் இக்கோயிலுக்கு உரியதாக்கப்பட்டது. இதனால் பாழ்பட்ட நிலம் வேளாண்மைக்குட்படுத்தப்பட்ட முறை குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ ....ண்டிய தெவற்கு யாண்டு உயக-வது விரசொழவளநாட்டு முகந்தனூர் உடையார் திருகுரக் குத்தளி ஆளுடைய ஞயினுர் கொயில் தானத்தார்க்கு இன்ஞயினுர்க்கு அமுதுபடி சாத்துப்படி
2. வெண்டுவனவுக்கும் திருக்......னக்கும் உடலாக வாயறைக் காணட்டு தென்கரைச் சூரலூர் அனுதி பாழ்பட்டுக் கிடக்கையில்........ஞன் கெல்லைக் குட்பட்ட நன்செய் புந்செய்
3. யும் நத்தமும் தொட்டமும்........பும் உட்பட்ட நிலம் திருநாமத்துக் காணியாகவும் இதுக்கு இறுக்கும் கடமை அந்தராயம் இட்ட........உகவை காணி தி(ருவாசல்) வினியொகம் ஓலைச் சம்ப
4. டம் சந்தி விக்கிரகப் பெறும்..........ல் தறியிறை...... தட்டொலிபாட்டம் நெய் எண்ணைக் காணம் அணியிடுவரி......மற்றும் எப்பெற்பட்ட வரிகளும்

இருபத்தொண்ணுவது மார்கழி ம்
5. தம் இப்படிக்கு ...... செம்பிலும் வெட்டி .... இவை காலிங்கராயன் எழுத்து இவ்வூர் விரராசெந்திர சொழ சக்கரவர்த்தி எழுத்தின் படி சில வழிவதாக இது பன்மாஹெஸ்வரரக்ஷெ

எண்–341

இடம் : மகாமண்டப வடக்கு ஜகதி

அரசன் : சுந்தரபாண்டியன்(யா–22)

செய்தி : சூரலூரான சுந்தரபாண்டிய நல்லூர் குரக்குத்தளி ஆளுடைய நாயனார்க்குத் திருநாமத்துக் காணியாக வழங்கப்பெற்றது. நொய்யலாற்றில் கட்டப்பெற்ற அணையும் அந்நீர் பாயும் குளமும் பாதுகாத்து நீர்ப்பாசனத்தை ஒழுங்குபடுத்தும் பணியைப் பேரூர்நாட்டு வெள்ளலூர் செம்படவன் பிள்ளையான் செய்வதற்கு ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் கிடைக்கும் வருவாய்கள் குரக்குத் தளிநாயனார் ஸ்ரீ பண்டாரத்திற்கு உரியதாகும். நீர்ப்பாசனத் திட்டமும் அதனை நிர்வகிக்கும் முறையும் கொங்குப் பாண்டியர் காலத்தில் சிறந்திருந்ததை இக்கல்வெட்டுக் குறிப்பிட்டுள்ளது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ தண்டெஸ்வரன் ஓலைச் சாகரஞ்சூழ் வையகத்துக் கண்டீஸ்வரன் கரும மாராய்க - பண்டெ அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம் திறம்பாமல் சென்னிமெல் வைத்து - அருளாலாதி சண்டெஸ்வரனுதெசம் நம்பிள்ளை சுந்தர பாண்டிய
2. தெவற்கு யாண்டு உயஉ-வது பெரூர் நாட்டில் வெள்ளலூரில் செம்படவன் பிள்ளையானுக்கு நம்மொலை குடுத்த பரிசாவது வாயறைக்கா நாட்டில் சூரலூரான சுந்தரபாண்டிய நல்லூர் குரக்குத் தளி ஆளுடையநாயனுர் திருநாமத்துக் காணிக்கு இவ்வூர் அ
3. ணையுங்காலும் பாத்து ஆணையிலுள்ள நீர்கிழை யில் விழாமல் பாத்துக் குளத்தில் லொதுக்கி அணை யிலும் குளத்திலுமுள்ள குறையுள்ளது உலாவிப் பாத்துக் குறையுள்ளது தானத்தாற்கும் ஊரவ ருக்கும் சொல்லி ஊரில் உள்ள வெட்
4. டியானும் மெற்றி அணைக்குக் கொட்டையும் வைத்து சிக் கெனப் பாத்துச் (செய்து) பொதுவானுகவும் இப்படி செய்து பொதுமிடத்து........மெலைப் பற்றில் தென்ச..........ட்ஞ்சொ ஒரு மாச்செய்யிறையிலி பெற்று உண்டு (பொதுவ)ாணுகவும் இவ்வூரில் பயி

5. ரெறின நிலத்துக்கு......... தூணி நானுழி நெல்லும் பெற்றுப் பொதுவானுகவும் நிலம் உழும்......ணீ நெல்லுக்கு அரியுங் கட்டிக் கொள்வானுகவும் இப்படி அனுபவித்துப் பொதுவானுகவும் அனு

6. பவித்துப் பொதுவானுகவும் அனுபவிக்குமிடத்து தானத் தாற்கு நாள்தொறும் படிக்கறியுமிட்டுப் பொது வானுகவும் வாய்க்கால்பாட்டம் ஆண்டொன்றுக்கு ஆறுபணம் இறுத்துப் பொதுவானுகவும் குளத்தில் பாசிப்பாட்டம் தானத்தார் விலை மதித்தபடி ஏறிட்

7. டுக் கொண்டு தானத்தாற்கு ஏற நாயனுர்சி பண்டாரத் துக்கு சிலவறுப்பானுகவும் மீன்படுக்கும் பொதுக்குள த்தில் மீன்சிலவற படுக்குமளவும் தானத்தாற்கு நிச்ச யித்தபடி கறிதவிர் கறியிட்டுப் பொதுவானுகவும் இவ்வூர் நான்கெல்லையும் உள்பட அணையுங்

8. (கு) ளமும் இம்மரியாதிபெற்று இம்மரியாதிக் குடிமைப் பாடு செய்து அனுபவிப்பானுகவும் இப்படிக்கு இவன் மக்கள் மக்கள் சந்திராதித்ய வரை செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளக நம்மொலை குடுத்தொம் அருளால் ஆதிசண்டெ

9. ஸ்வரஸ்ரீகரணத்தான் எழுத்து இவை விரராஜெந் திர சொழச் சக்கரவர்த்தி எழுத்து

எண்–342

இடம் : மகாமண்டப வடக்கு ஜகதி
அரசன் : சுந்தரபாண்டியன்(யா–3) கி.பி.1288
செய்தி : இக்கோயிலில் உள்ள வடுகப் பிள்ளையாருக்குச் சந்தியாதீபம் ஒன்று வைப்பதற்கு இவ்வூரில் வாழ்ந்த தோயா வஸ்திரச் செட்டிகளில் பாளைநல்லூர் சேரமான் தோழன் என்பவன் இக்கோயில்காணியுடைய சிவபிராமணன் வீரராஜேந்திரச் சக்கரவத்தியிடம் அச்சு ஒன்று செலுத்தினான். (தோயாவஸ்திரச் செட்டி என்பது ஆடைகளுக்குச் சாயம் தோய்க்கும் தொழில் உடையவர்களைக் குறிக்கலாம்).

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தெவற்கு யாண்டு 3-வது விரசொழவளநாட்டு முகந்தனூருடையார் குரக்குத் தளி ஆளுடையா

2. ர் கொயில் வடுகப்பிள்ளையாற்கு இந்நாயினுர் திருமடை விளாகத்தில் தெற்கில் தெருவிலிருக்குந் தொயாவஸ்திரச் செட்டி

3. களில் பாளைநல்லூர் உடையான் வெதநாயகன் ஜை......லூ செட்டியாழ்வாநாத செரமான் தொழநெந் வைத்த சந்தியா திபவிளக்கு ஒ

4. ன்றுக்கு ஒடுக்கின அச்சு ஒன்றுங் கொண்டென் இக் கொயி(ற்) காணியுடைய சிவபிராமணன் வாச்சிய கொத்திர அப்பன் விரராசெந்திர

5. சொழச் சக்கரவர்த்தியென் இது குடங்கொடு கொயில்புகுவார் சந்திராதித்தவரை செலுத்து வதாக இது பந்மாஹெஸ்வரரகெஷ. உ

எண்–343

இடம் : மகாமண்டப மேற்கு ஜகதி

அரசன் : சுந்தரபாண்டியன்(யா–2) கி.பி. 1267

செய்தி : இம்மன்னதன் பிறந்தநாளன்று குரக்குத் தளி ஆளுடைய நாயனார் அமுதுபடிக்காக விடப்பட்ட தேவதான நிலங்களுக்கு உரிய நிலவரி உள்ளிட்ட வரிகளையும் கோயிலுக்கு உரிய தாக்கிக் கல்வெட்டுவித்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்ரவத்தி கொனெரின்மை கொண்டான் ஸ்ரீவிரபாண்டிய தெவற்கு யாண்டு 2-வது விரசொழவளநாட்டு முகந்தனூர் உடையார் திருக்குர

2. க்குத்தளி ஆளுடைய நாயிநார் கொயில் தாநத்தார்க்கு நம் பிறந்தநாள் சொதிப்படி அமுது செய்தருளுகைக்கு உடலாக முகந்தனூரில் இந்நாயனூர் தெவதாந

3. மாந நிலங்களுக்கு நிலவதி.......உள்ளிட்ட எப்பெறபட்ட வரிகளும் இழந்தொம் இப்படிக்கு இது வெட்டி பாடாகக் கொண்டு சந்திராதித்யவற் செல்வதாக செம்பிலு

4. ம் சிலையிலும் வெட்டிக் கொள்க இவை காலிங்க ராயன் எழுத்து இவை விழுப்பாதராயன் எழுத்து இவை கச்சிராயன் எழுத்து யாண்டு 2 நாள் 292 இதுபன்

5. மாஹெஸ்வரரகெஷ இந்நிலமாவது மங்கலம்......ட்டானடி எ.....பிள்ளையார் க ா ணி ஆலவட்டப்பிள்ளை......தித்த துறையில் நிலம்.

எண்–344

இடம் : ஆவுடையம்மன் கோயில்வாசலுக்கு வடபுறக் குத்துக்கல்லில் உள்ளது.

அரசன் : நஞ்சராய உடையார் கி.பி. 1499

செய்தி : இவரசன் குரக்குத் தளி நாயனார் கோயில் ஸ்ரீ பண்டாரத்தில் 4 பொன்கொடுத்து ஒரு சலகை நெல்விதைக்கும் நிலத்தை கிரயம் பண்ணிக்கொண்டு அந்நிலத்தில் 200 தென்னம்பழம் போட்டு அதன் ஆதாயத்தைக் கொண்டு இந்நாயனார் அங்கரங்க போகத்துக்கு (சோடச உபசார பூசை) வேண்டிய செலவுக்குப் பயன்படுத்திக் கொள்ள ஆணை பிறப்பித்தான். இந்த தர்ம காரியத்தை வடபாரிசார நாட்டுக் கவுண்டர்கள், மன்றாடிகள் ஆகியோர் நடத்தி வர ஆணைபிறப்பித்தான்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீசமஸ்த ஐகதாதிபதி ஸ்ரீஜயவிரராஜ்யம்
2. சாலிவாகன சக வருஷம்
3. ஆயிரத்து நானூற்று இருபத்
4. து ஒன்றுக்கு (மெல) சித்தா
5. ர்த்தி வருஷம் கார்த்திகை மாசம்
6. 17 தியதி ஸ்வஸ்த சமஸ்த்த
7. தய்ப ஸ்ரீ நிவாகைலாச
8. சதுர்வெதிமங்கலத்து முகந்தனூர் உடை
9. யார்குரக்குத்தளி தம்பிரானாக்கு ஸ்ரீமன்
10. மஹாமண்டலீஸ்வரன் ஸ்ரீ வீரன
11. ஞ்சாராய உடையார்சித் யாராச்சயம் பண்ணி
12. அருளா நினற காலத்து நஞ்சராய உடை
13. யா சிரப்பிறதாநனி தெனைக்கணும்
14. பை நாட்டு எம்மற்காலத்து நஞ்சண
15. செட்டியார் மகன் ஒன்னக்களச் செ
16. சட்டியார் தம்ம சாஸநம்பண்
17. ணிக் குடுத்தபடி யாவது முகந்த நு
18. ர்நஞ்சாராயன் குளக்கீழ்நிலதது உட
19. யவர்மாணிப நிலம் தொட்ட க்கடடையி
20. ல் கொவி பைவ ளிக்குமெற்கு குளவா
21. யக் காலுக்கு கிழக்கு சொழிஸ் வரமு
22. டையார் கொவிலுக்கு வடக்கு கொ
23. டைக்கு தெறகு குநத சது சீர்மையி
24. ல் உடயவர் பண்டராத்துக்கு கிறயம்
25. னாலு பொன் குடுத்து நாம் கொண்
26. டநிலம் சலகை ஒன்று இந்த சலகை ஒ
27. ன்றுக்கும் இருநூறு தென்னம் பழம்
28. பொட்டு தொட்டம் பண்ணி இந்த தெ
29. ாட்டத்திலுண்டான ஆதாயமும் உடை
30. யவர் அங்கரங்க போகத்து க்குநடக்க
31. கடவதாகவும் இந்த தன்மம் வடபரிச
32. ாரனட்டு கவுண்டர்கள் செவ்வூர்ஆண்
33. டா மன்ருடி மக்கள் சொழியாண்டான் சூர்யெ

34. தவன் மகான் உள்ளிட்டார் மக்கள் மக்கள்
35. சந்திராதித்த வரை நடத்தி வரக் கடவார்க (ளாக)
36. வும் இந்த தன்மத்துக்கு அழிவுப
37. ண்ணினவன் கங்கை
38. க்கரையிலே கொ
39. லையும்......ஏமன
40. ....கொன்ற
41. பாவத்திலெபொ
42. கக்கட வாராகவும்
43. இப்படி சம்மதித்து
44. தன்ம சாசனம்ப
45. ண்ணி குடுத்தெ
46. னகுரக்குதளி
47. ஆளுடைய தம்பி
48. ரானற்கு ஒன்ன
49. க்களச் செட்டி
50. யார் இப்படி
51. செவூர் கவுண்ட
52. கள் சொழியாண்
53. டார் சூரிய தேவ
54. ன் மகான் எ
55. ழுத்து கிகொ
56. யல உடை
57. கைநாதன் உத்
58. தம நம்பியார் எழு
59. த்து முகந்த னூர்
60. மகாஜனங்கள் எ
61. ழுத்து, அவிஞசியில்
62. ஆவுடைய நம்பி எழு
63. த்து, அவினாசி பாலத
64. ண கககதமயன் எழு
65. த்து, அவிஞசி அதிக
66. ாரி ஆதியணன் எ
67. ழுத்து, பெரியபாளை(ய)
68. த்து அதிகாரி சொமி(....)
69. ணனஎழுத்து ! இக்
70. கொயி அதிகாரி புட்டய்யன்
71. எழுத்து இக்கொயிலக
72. ணக்கபடமநத்தன்
73. எழுத்து இந்தக்கல்
74. வெட்டுபடி எழுதி நெ
75. ன் சிவசைலத்து
76. ஆசாரி குவரெ
77. ஆசாரி இல
78. தசணளபனமாா

எண்–345

இடம் : குரக்குத்தளி ஆளுடை நாயனார் திருக்கோயிலில் மகாமண்டப, அர்த்தமண்டப வடக்குச் சுவரில் உள்ளது

அரசன் : சுந்தரபாண்டியன் (யா–4) கி.பி. 1285 – 1300

செய்தி : இக்கல்வெட்டு திசை ஆயிரத்தைநூற்றவராகிய வணிகர்களின் மெய்க்கீர்த்தியை முதலில் குறிப்பிடுகின்றது. வணிகக்கூட்டத்தார் ஐநூற்றுவன் பெருங்காவில் கூடி குரக்குத்தளி நாயனாரை வைகாசித் திருநாளில் எழுந்தருளிவிப்பதாக முடிவு செய்து இச்செலவுகளுக்காக ஏற்றுமதி இறக்குமதி தலைச்சுமை போன்று பண்டங்களுக்குச் சுங்கம் விதித்து அப்பணத்தைக் கொண்டு இத்திருநாள் நடத்த முடிவு செய்தனர். தம் இசைவைத் தெரிவித்து 64 வணிகர்கள் கையொப்பம் இட்டுள்ளனர். இவர்களில் நால்வர் வட்டெழுத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

இவர்கள் கேரளத்தைச் சேர்ந்த வணிகர்களாக இருக்கக் கூடும்.

கல்வெட்டு

